"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவகாளம்



டாக்டர் யோனத்தான் கோபோர்த் 1859 - 1934

"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல,
என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" (சகரியா 4 : 6)

பிறப்பும், இளமைக்காலமும்.

ஜாண் கோபோர்த் என்பவர் இங்கிலாந்திலுள்ள யார்க்ஷை யரிலிருந்து கனடா தேசத்தின் மேற்கு ஒண்டேரியோ என்ற இடத்திற்கு

Vol. No. 34 ஜனவரி - ஜூன் 2001 No. 1 to 6

1840 ஆம் ஆண்டு ஆரம்ப கால முன்னோடிகளில் ஒருவராக வந்து சேர்ந்தார். அவருடைய மனைவி ஏற்கெனவே இறந்துவிட்டார்கள். எனவே, அவர் தனது மூன்று மகன்களான ஜாண், சைமன், பிரான்சிஸ் என்பவர்களையும் தன்னுடன் அழைத்து வந்திருந்தார். மகன் பிரான்சிஸ் வடக்கு அயர்லாந்திலுள்ள ஜேன் பேட்ஸ் என்ற இளம் பெண்ணை மணம் புரிந்தான். ஒண்டோரியாவின் இலண்டனுக்கு (இங்கிலாந்தின் லண்டன் அல்ல) அருகாமையிலுள்ள ஒரு பண்ணையில் அவர்கள் குடியேறினார்கள். யோனத்தான் கோபோர்த் அவர்களின் ஏழாவது பிள்ளையாவான். தனது தகப்பனாரின் தாண்டேல் என்ற இடத்திற்கு சமீபமாகவிருந்த பண்ணையில் யோனத்தான் கோபோர்த் 1859 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் நாள் பிறந்தான்.

11 பிள்ளைகளைக் கொண்ட மிகப் பெரிய குடும்பம் ஆனதால் தாயும், தகப்பனும், ஏன்? ஆண் மக்கள் 10 பேர்களும் கூட அந்த கஷ்டகால கடினமான நாட்களில் கடினமாக பாடுபட்டு உழைக்க வேண்டியதாக இருந்தது. ஆண் மக்கள் அக்கம் பக்கங்களிலுள்ள விவசாயிகளுக்கு வேலை செய்து கொடுத்து பணம் சம்பாதித்ததுடன், வழக்கத்துக்கு மாறான அற்பமாக எண்ணப்பட்ட பணிகளையும் கூட செய்து கொடுத்து பணம் தேடினார்கள். "கோபோர்த் பையன்கள் நல்ல சுறுசுறுப்பான, எந்த ஒரு வேலையையும் செய்ய அஞ்சாத திறமைசாலிகள்" என்று அந்தப்பகுதியிலுள்ளவர்கள் எல்லாரும் அவர்களைக் குறித்துப் பேசினார்கள். யோனத்தான் கோபோர்த் அதைக்குறித்துப் பேசும் போது "ஹாமில்ட்டன் என்ற இடத்திலிருந்து இலண்டனுக்கு அருகில் நாங்கள் வசித்த இடம் வரையான 70 மைல்கள் தூரத்தை எனது தகப்பனார் தனது முதுகில் ஒரு சாக்கு மூட்டை மாவுடன் நடந்து வந்திருக்கின்றார். அவர் நடந்து வந்த பாதை அந்த நாட்களில் முட்புதர் செடிகொடிகள் மண்டிக்கிடந்த பாதையாகும்" என்று கூறுவார். அதை, யோனத்தானுடைய தகப்பனாரே அவரிடம் சொல்லியிருக்கின்றார்.

"எனது அருமை தாயார் பிள்ளைகளாகிய நாங்கள் சிறுவர்களாக இருக்கும்போது எங்களுக்கு தேவனுடைய வசனங்களைப் போதிப்பதிலும், எங்களோடு சேர்ந்து ஜெபிப்பதிலும் மிகவும் கருத்தோடிருந்தார்கள். எனது வாழ்க்கையின் பின் நாட்களில் நான் கண்டடைந்த பெரிய தேவ ஆசீர்வாதத்துக்கு காரணம் நான் எனது தாயாருக்கு சங்கீதங்களின் புத்தகத்தை வாசித்தது தான். நான் ஐந்து

வயதினனாக இருந்த அந்தச் சமயத்தில் எனது தாயாருக்கு சங்கீதங்களை பிழையின்றி சப்தமாக வாசிப்பேன். சப்தமாக வாசித்து, வாசித்து தேவனுடைய வார்த்தைகள் மேல் எனக்கு ஒரு பரலோக இன்பமே ஏற்பட்டுவிட்டது. அதின் காரணமாக ஏராளமான தேவனுடைய வசனங்களை நான் மனப்பாடம் செய்தேன். நான் மனப்பாடம் செய்த வேத பகுதிகளை யாரிடமாவது ஒப்புவிக்க அந்த நாட்களில் நான் ஆசைப்படுவேன். ஆனால், எவரும் எனது ஒப்புவித்தலை அத்தனை பொறுமையோடு செவிமடுத்துக் கேட்க முன் வரவில்லை. அந்த சின்ன வயதிலேயே நான் என்னை ஆண்டவருக்கு ஒப்புவித்து ஒரு மெய்யான கிறிஸ்தவனாக வாழ அதிகமாக ஆசைப்பட்டேன். நான் ஏழு வயது சிறுவனாக இருந்தபோது ஒரு பக்தியுள்ள அம்மாள் எனக்கு ஒரு அழகிய சிறு வேதாகமத்தை அன்பளிப்பாக தந்தார்கள். கர்த்தருடைய வேதத்தை ஆர்வத்தோடு படிக்க அந்த அன்பளிப்பு வேதாகமம் எனக்குப் பெரிதும் உதவி செய்தது. நான் 10 வயது சிறுவனாக இருந்த சமயம் எனது தாயாரோடு ஒரு ஓய்வு நாள் தேவாலயத்துக்கு நான் சென்றேன். ஆலயத்தில் கர்த்தருடைய இராப்போஜனம் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது. எனது தாயார் அதில் பங்குபெறச் சென்றுவிட்டார்கள். ஆலயத்தின் பக்கவாட்டு இருக்கை ஒன்றில் நான் தனிமையாக உட்கார்ந்திருந்தேன். அந்தச் சமயம் திடீரென ஒரு பலமான எண்ணம் முழுமையான அழுத்தத்துடன் என்னை வந்து தாக்கத் தொடங்கியது. தேவன் என்னை இந்த உலகத்திலிருந்து இந்த நிமிடம் எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் நான் ஆண்டவருடைய மோட்சத்துக்கு செல்ல முடியாது என்பதே அந்தக் கவலையின் எண்ணமாகும். என்னை கர்த்தருக்குள்ளாக வழிநடத்தவும், எனது ஆத்துமாவின் காரியமாக என்னோடு பேசவும் எவரும் இல்லாத காரணத்தால் நான் என்னை அப்பொழுது கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க இயலாது போய்விட்டது" என்கின்றார் யோனத்தான்.

கிட்டத்தட்ட 10 கல்வி ஆண்டுகள் யோனத்தான் தனது தகப்பனாருடைய பண்ணையில் ஏப்பிரல் மாதம் முதல் அக்டோபர் அல்லது நவம்பர் மாதம் வரை ஒவ்வொரு வருடமும் பாடுபட வேண்டும் என்ற நிர்ப்பந்தமான நிலை அவருக்கு இருந்தது. இலையுதிர் காலம் பள்ளிக்கு வரும் அவர் வசந்த காலத்திற்குள்ளாக தன்னுடன் படிக்கும் புத்திசாலி பையன்களுடன் போட்டியிடும் அளவுக்கு திறமை பெற்று விளங்கிவிடுவார்.

யோனத்தானுடைய வெகு ஆரம்ப கால பள்ளி தோழனான பண்டிதர் ஆண்ட்ரூ வைனிங் என்ற குருவானவர் யோனத்தானைக் குறித்து குறிப்பிடும் சில பிரகாசமான வரிகளை கவனியுங்கள் :-

"நான் அறிந்தவரை யோனத்தான் மிகுந்த மனமகிழ்ச்சியுடைய, நேர்மையான, அடக்கமும் பணிவுமுள்ள, தைரியசாலியான மாணவனாவான். அவனுடைய சிறந்த நேர்மைக்குணம் என்னை வெகுவாக கவர்ந்தது. பள்ளியில் ஒரு வம்புக்கார மாணவன் என்னை எப்பொழுதும் கேலி பேசி வயதில் சிறுவனான என்னை கொடுமைப்படுத்தி வந்தான். இதைக்கவனித்த யோனத்தான் ஒரு நாள் அந்த போக்கிரி மாணவனை சந்தித்து அவனை கண்டித்து இனிமேல் என்னை அவன் தொந்தரவு செய்யாதபடி செய்துவிட்டான். யோனத்தானிடம் நான் கவனித்த ஒரு விசேஷமான காரியத்தை நான் என் வாழ்வில் என்றும் மறக்கவே மாட்டேன். பள்ளியின் இடைவேளை நேரங்களில் பள்ளிக்கூடத்தின் பிரதான வளாகத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் உலகப்படங்களின் முன்பாக அவன் நின்று அந்தப்படங்களையே வெகு நேரம் உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பான். நாளுக்கு நாள் அவன் அப்படியே செய்து வந்தான். அவனது வயதில் வேறு எந்த ஒரு மாணவனும் அப்படிச் செய்ததே இல்லை. அவனுடைய இந்த செயல் என்னை சொல்லொண்ணா ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. உலகப்படங்களில் ஆசியா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்களை அவன் அதிகமாக கவனித்தது எனது நினைவுக்கு வருகின்றது. தான் பெரியவனாக வளரும் போது உலகத்தில் தான் செய்ய வேண்டிய தேவ பணிகளைக் குறித்த ஒரு ஆத்தும பாரத்தின் உணர்வு அப்பொழுதே அவனுக்கு கிடைத்துவிட்டது என்றே நான் திட்டமாக கூறமுடியும்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும்

டாக்டர் யோனத்தான் கோபோர்த் அவர்களின் தேவ ஊழிய டயரிகள் ஒன்றில் காணப்பட்ட அவருடைய குழந்தை பருவ நினைவு ஒன்றை அவருடைய சொந்த வார்த்தைகளிலேயே கீழே நாம் காணலாம்:-

"நான் சிறு பையனாக இருந்த நாட்களில் யாரோ ஒருவர் எனக்கு 5 பென்னி நாணயம் ஒன்றை அன்பளிப்பாக கொடுத்தார். இவ்வளவு பெரிய தொகையை நான் அதுவரை அன்பளிப்பாக பெற்றதே கிடையாது. எனக்கிருந்த சந்தோசத்துக்கு அளவில்லை. நான் என்னை ஒரு

ஐசுவரியவானாக அன்று எண்ணிக்கொண்டேன். இந்த 5 பென்னி நாணயத்தைக் கொண்டு 6 பெரிய இனிப்பு மிட்டாய்களை வாங்கிவிடலாமே என்ற எண்ணம் எனது மனதில் பூரித்து பொங்கி எழுந்தது. உடனே நான் எனது வீட்டுக்கு ஓடிச்சென்று எனது தாயாரிடம் எனக்கு கிடைத்த அன்பளிப்பு விவரத்தைக் கூறி எனக்கு கிடைத்த 5 பென்னிக்கும் மிட்டாய்களை வாங்கிக்கொள்ள நான் கடைக்குச் செல்லலாமா என்று கேட்டேன். மிட்டாய் வாங்கக்கூடிய கடை எங்கள் வீட்டிலிருந்து 2 மைல் தொலைவில் இருந்தது. உடனே எனது தாயார் "இல்லை மகனே, நேரம் பொழுதுபட்டுவிட்டது. கர்த்தருடைய பரிசுத்த ஓய்வு நாளும் ஆரம்பிக்கப் போகின்றது. உனது விருப்பப்படி திங்கட்கிழமை நீ கடைக்குப் போய் மிட்டாய் வாங்கிக்கொள்" என்று சொல்லி விட்டார்கள்.

எனக்கு ஞாயிற்றுக் கிழமை ஒரு நாளுக்குக்கூட பொறுத்திருப்பது என்பது வெகு கடினமாகவே இருந்தது. இதற்கிடையில் எனது குழந்தை உள்ளத்தில் யாரோ ஒருவர் "நல்லது சிறுவனே, உனது ஐந்து பென்னியையும் தெய்வநம்பிக்கையில்லாதவர்களுக்கு கொடுப்பது உனக்கு சரியாகத் தெரிகின்றதா? " என்று என்னிடம் கேட்பது போல இருந்தது. அந்த எண்ணத்தை எனது மனதில் போட்டது யார் என்று எனக்குத் தெரியாது. ஆனால், அடுத்து வரும் ஓய்வு நாளிலே தேவனுடைய சுவிஷேசம் அறிவிக்கப்படாத இடங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவிக்கும் மிஷனரிகளுக்கு ஒரு விசேஷித்த காணிக்கை எடுக்கப்படும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, கர்த்தருடைய ஆவியானவர்தான் அந்த எண்ணத்தை எனது உள்ளத்திலே தோன்றச் செய்தார் என்று நான் திட்டமாக அறிந்து கொண்டேன். தேவன் என்னை பின் நாட்களில் ஒரு மிஷனரியாக ஆக்குவதற்கு திருவுளச்சித்தம் கொண்டிருக்கின்றார் என்ற ஆவல் அப்பொழுது எனக்கு தெரியவில்லை. நானோ அதை ஏற்க விரும்பவில்லை. தேவனுடைய சுவிசேஷ நற்செய்தியை கேட்காத மக்கள் வெகுதொலை தூரமான இடங்களில் இருக்கின்றனர். ஆனால், எனக்குத் தேவையான மிட்டாய் கடையோ 2 மைல்கள் தொலைவில் மாத்திரமேதான் இருக்கின்றது. எனவே, எனது மிட்டாய்களை எப்படியாவது நான் பெற்றுவிட வேண்டும் என்று ஆவல் கொண்டேன். எனது போராட்டம் அத்துடன் முற்றுப் பெறவில்லை.

தேவனுடைய சுவிசேஷம் கேட்காத மக்களா அல்லது 5 பென்னிக்கு வாங்கக்கூடிய இனிப்பான மிட்டாய்களா? இறுதியாக நான் இந்தப் போராட்டத்தோடேயே எனது படுக்கைக்குச் சென்றேன். ஆனால் என்னால் தூங்கவே முடியாமற் போய்விட்டது. சுவிசேஷம் கேள்விப்படாத மக்கள் ஒரு பக்கம் எனது இனிப்பான மிட்டாய்கள் மறுபக்கம். ஒரு பக்கம் அன்பு அடுத்த பக்கம் சுயநலம். இவைகளின் கடுமையான போராட்டம். பொதுவாக நான் படுக்கைக்குச் சென்று எனது தலையை தலையணை மீது வைத்தால் போதும் அடுத்த கணமே குரட்டை போட்டு தூங்க ஆரம்பித்து விடுவேன். ஆனால் அன்று எனது தூக்கம் பறந்து போய்விட்டது. இறுதியில், நான் அடுத்த நாள் ஞாயிறு வேதாகம பள்ளி ஆராதனையின் போது எனது 5 பென்னி நாணயத்தை காணிக்கை தட்டில் படைத்துவிடுவதென்ற திட்டமான தீர்மானத்தோடு எனது கண்களை மூடி அயர்ந்து நித்திரை செய்தேன். ஆனால், நான் காலையில் கண் விழித்ததும் மிட்டாய்கள் மேல் உள்ளதான எனது அளவற்ற ஆசையே திரும்ப தலைதூக்கி நின்றது. திரும்பவும் எனக்குள் போர் ஆரம்பமானது. எனினும் எனது ஓய்வு நாள் வகுப்புக்கு போவதற்கு முன்னர் சுவிசேஷம் கேள்விப்படாத மக்கள் மேல் உள்ளதான எனது அன்பே வெற்றி பெற்றது. அதற்காக சேகரிக்கப்படும் காணிக்கை தட்டு என்னை கடந்து சென்றபோது நான் எனது 5 பென்னி நாணயத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் கர்த்தருக்கு கையளித்தேன்.

நீங்கள் நம்புவீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் அதை படைத்ததும் ஒரு கடையிலுள்ள அனைத்து மிட்டாய்களும் எனக்குக் கிடைத்துவிட்டதைப்போன்றதொரு ஆனந்த சந்தோசம் என் உள்ளத்தை முழுமையாக நிரப்பிற்று. ஆண்டவர் இயேசுவுக்காக இப்படி தீர்மானம் செய்கின்ற எந்த ஒரு பையனுக்கும் பெண் பிள்ளைக்கும் எனக்கு கிடைத்த அந்த பேரானந்த மகிழ்ச்சி நிச்சயமாக கிடைக்கும் என்பதில் எந்த ஒரு சந்தேகமுமே கிடையாது"

அந்தப் புன்னகை ஒன்றே போதுமே!

யோனத்தான் கோபோர்த் 15 வயதினனாக இருந்தபோது அவரது தகப்பனார் "தேம்ஸ் போர்ட்" என்ற அவரது பண்ணை நிலம் ஒன்றை அவருக்கு கையளித்தார். அந்தப் பெரிய பண்ணை நிலம் முட்புதர்களாலும், அடர்த்தியான களைகளாலும் மூடிக்கிடந்தது. "இந்த நிலத்தை நீ பண்படுத்தி, துப்புரவாக்கி விதை விதைப்புக்கு ஏற்றதாகச்

செய்துவிடு. அறுவடை சமயத்தில் நான் திரும்பவும் வந்து இதை பார்வையிடுவேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். யோனத்தானுக்கு சற்று உதவியாக அவரது இளைய சகோதரன் ஜோசப் இருந்தான். இந்தக் கடினமான வேலையை அந்த இள வயதான 15 ஆம் வயதில் செய்வது என்பது அத்தனை இலகுவான காரியமல்ல என்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

யோனத்தான் கோபோர்த் தமது சுவிசேஷ நற்செய்தி கூட்டங்கள் பலவற்றிலும் அந்த தேம்ஸ்போர்ட் பண்ணையில் தான் தனது முழு பெலனையும், சரீர உழைப்பையும் எவ்வண்ணமாக செலவிட்டார் என்பதை தமக்கு முன்பாக குழுமியிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாய் மேல் விரல் வைத்து ஆச்சரியத்துடன் கேட்கத்தக்க விதத்தில் இப்படிக் கூறுவார் :-

"அந்த தேம்ஸ்போர்ட் பண்ணை நிலத்தின் முட்புதர்கள், களைகள் எல்லாவற்றையும் வேருடன் பிடுங்கி எறிந்து அவைகளை சுட்டெரித்த பின்னர் அந்த நிலத்தை ஒன்றுக்குப்பின் ஒன்றாக திரும்ப திரும்ப உழுது அதைப்பண்படுத்தி முழு நிலத்தையும் விதைவிதைப்புக்குத் தயாராக்கினேன். நிலம் விதை விதைப்புக்குத் தயாரானதும் அதில் விதைக்கக்கூடிய மிகவும் தரமான விதைகளை நான் வாங்கி வந்தேன். விதைவிதைப்புக்கு ஏற்ற பருவ காலமான கோடை காலத்தின் வரவுக்காக நான் ஆவலோடு காத்திருந்து அந்த கோடை காலத்தின் ஒரு அழகான காலை வேளையில் நான் உழுது பண்படுத்தப்பட்ட அந்த நிலத்தில் விதைகளை அள்ளித் தூவினேன். விதைத்த விதைகள் முளைத்து பயிராகி விரைவாக வளர்ந்து கொண்டிருந்தது. திரும்ப திரும்ப ஆழமாக உழுததின் காரணமாக பயிர்களிலே தானிய மணிகள் செழுமையாக வெளிவந்து தொங்கிக்கொண்டிருந்தது.

சரியாக அறுவடை சமயத்தில் எனது தந்தை பண்ணைக்கு வந்தார். நான் எனது தந்தையை பயிர் விளைச்சலின் செழுமையை முழுமையாக பார்க்கும் விதத்தில் ஒரு மேடான பகுதிக்கு அழைத்துக் கொண்டு சென்றேன். விளைச்சலின் மாட்சியை என் தந்தை கண்டு பெரும் வியப்புற்று "என் மகனே நீ நன்றாய் செய்தாய்" என்ற வார்த்தையை கூறுவார் என நான் மிகுந்த ஆவலோடு எதிர்நோக்கி காத்து நின்றேன். ஆனால், அவர் எந்த ஒரு வார்த்தையும் பேசாமல் வெகு அமைதியுடன் பயிர் நிலம் முழுமையையும் சுற்றிப்பார்த்து ஏதாகிலும் களைகள்

தென்படுகின்றதா என்று கவனித்துப் பார்த்தார். ஆனால், எந்த ஒரு களையையும் அவரால் காண இயலவில்லை. இறுதியில் எனது தகப்பனார் எனது முகமாகத்திருப்பி அப்படியே ஒரு முழுமையான புன்னகை புரிந்தார். எனது இரத்தம் சிந்தி உழைத்த அந்த கடினமான உழைப்புக்கும், பாடுகளுக்கும் கிடைத்த மாபெரும் வெகுமதி எனது தகப்பனாரின் அந்த புன்னகை மாத்திரமேதான். அந்த மனம் நிறைந்த புன்னகையை விட உலகில் வேறு எனக்கு என்ன வேண்டும்? அந்தப் புன்னகை எனது உள்ளத்தை நிறை பூரணமாக திருப்தி செய்து என்னை களிகூரப்பண்ணிற்று."

அப்படியே நாமும் நமது பரம எஜமானர் நமது வசமாக ஒப்புவிக்கும் அவருடைய பரலோக பணிகளை நமது முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பெலத்தோடும் உண்மையும், உத்தமமுமாக செய்து நிறைவேற்றி முடிப்போமானால் நமது பரலோக தந்தையின் உள்ளங் குளிர்ந்த புன்னகையை நிச்சயமாக ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட நாளில் நாம் பெறுவோம் என்று யோனத்தான் கோபோர்த் சொல்லுவார்.

யோனத்தான் கோபோர்த்தின் மனந்திரும்புதல்

யோனத்தான் கோபோர்த் இப்பொழுது 18 வயதான நல்ல சௌந்தரியமுள்ள வாலிபனாக இருந்தார். நல்ல உண்மையுள்ள, நேர்மையான, எல்லாருக்கும் உதவி செய்யக்கூடிய ஆட்ட சாட்டமான இளைஞனாக அவர் விளங்கினார். அவர் எல்லாராலும் அதிகமாக விரும்பப்பட்டார். சதா சந்தோசமுள்ள, நட்புள்ளம் கொண்டோனாக அவர் இருந்தபோதினும் அவரது ஆத்துமா இன்னும் மனந்திரும்பாமல் பாவ இருளில்தான் மூழ்கிக்கிடந்தது. இலண்டனில் ஒரு குறுகிய கால வர்த்தக கல்வி பெற்ற யோனத்தான் திரும்பவும் தனது உயர்நிலைப்பள்ளிக்கே வந்து சேர்ந்து தமது வீட்டுக்கு அருகாமையில் உள்ள அந்த பள்ளியில் படித்து வந்தார். தேம்ஸ்போர்ட் என்ற இடத்திலுள்ள குருவானவரான லாக்லன் கேமரூன் என்பவர் யோனத்தான் படித்துக்கொண்டிருந்த உயர்நிலை பள்ளிக்கு அடிக்கடி வந்து அங்கு வேதாகம வகுப்புகளை மாணவர்களுக்கு எடுத்து வந்தார். குருவானவர் கேமரூன் மிகுந்த தேவ பக்தியுள்ளவரும், தேவனுடைய திராட்சை தோட்டத்தில் ஓயாத உழைப்பாளியாகவும், மனந்திரும்பாத

மக்கள் பால் அளவற்ற ஆத்தும பாரம் கொண்ட ஒரு தேவபக்தனாக விளங்கினார்.

யோனத்தானிடம் காணப்பட்ட விசேஷித்த கலை ஆர்வம் குறிப்பாக அழகான எழுத்துக்கள் எழுதுவதில் யோனத்தானுக்கிருந்த திறமையைக்கண்ட கேமரூன் அவர் மீது தனி கவனம் செலுத்தினார். அத்துடன் யோனத்தானின் பாச உணர்வு, குருவானவர்கள் மேல் உள்ள அவரது அலாதியான அன்பு, கேமரூனை அசைப்பதாக இருந்தது. யோனத்தான் கோபோர்த் கர்த்தருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்த அந்த முதல் ஞாயிற்றுக்கிழமை தேவ ஆராதனையில் அவர் அமர்ந்திருந்த விதத்தைக் குறித்து ஒரு கர்த்தருடைய பிள்ளை இவ்விதமாக கூறினார் -

"அந்தச் சம்பவம் நடந்து 60 ஆண்டு காலங்கள் ஓடி மறைந்துவிட்ட போதினும் அந்த ஞாயிறு ஆராதனையில் நான் கண்டதை மறக்கவே இயலாது. யோனத்தான் கோபோர்த் என்ற அந்த வாலிபன் குருவானவர் கேமரூனுக்கு நேர் முன்னதாகவே ஆலயத்தில் அமர்ந்திருந்தான். அவனது முகம் குருவானவருடைய வாயிலிருந்து புறப்பட்ட ஒவ்வொரு பிரசங்க வார்த்தையையும் ஆசை ஆவலோடு கவனித்துக் கொண்டே இருந்தது. அவனது முகத்தில் ஒரு ஒளி வீசிற்று"

குருவானவர் லாக்லன் கேமரூன் தனது ஒவ்வொரு பிரசங்கத்தையும் அழைப்பு விடுத்தே முடிப்பார். கர்த்தருக்கு தங்களை ஒப்புக்கொடுத்தோர் முன் எழுந்து வரலாம் என்ற அழைப்பு இல்லாமல் அவர் தனது எந்த ஒரு தேவ செய்தியையும் முடிப்பதே கிடையாது. அந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த மனந்திரும்புதலின் அற்புதத்தை யோனத்தான் கோபோர்த்தின் சொந்த வாயின் வார்த்தைகளாலேயே நாம் கேட்டுவிடுவோம் :-

"அந்த ஞாயிறன்று குருவானவர் கேமரூன் என்னையே நேருக்கு நேர் பார்ப்பது போல பார்த்து நான் கர்த்தருக்கு என்னை ஒப்புக்கொடுக்கும்படியாக தமது பிரசங்கத்தின்போது பரிந்து மன்றாடுவதைப் போல எனக்கு தெரிந்தது. அவருடைய வார்த்தைகள் எனது மனந்திரும்பாத கடின உள்ளத்தை ஊடுருவி வெட்டிக்கொண்டு சென்றது. "குருவானவர் தமது அழைப்பை விடுவதற்கு முன்பாக நான் என்னை கர்த்தருக்கென்று ஒப்புவித்து தீர்மானம் செய்துவிட வேண்டும்" என்று எனக்குள் நினைப்பதற்குள்ளாக அவர் தமது வழக்கத்திற்கு மாறாக பிரசங்கத்தை திடீரென முடித்து ஜெபிக்க ஆரம்பித்து விட்டார். அவர்

ஜெபிக்கத் தொடங்கியதும் சாத்தானாம் பிசாசு என்னிடம் வந்து எனது காதிற்குள்ளாக "கர்த்தருக்கு உன்னை அர்ப்பணிக்கும் காரியத்தை அடுத்த வாரத்துக்கு தள்ளிப் போட்டுவிடு" என்று சொன்னான். இந்த நேரம் கேமரூன் தனது ஜெபத்திற்கு பின்னர் பிரசங்க பீடத்தில் சாய்ந்திருந்த வண்ணமாகவே கர்த்தருக்கு தங்களை ஒப்புவிப்போரை முன் வரும்படியாக அழைத்தார். அவருக்கு முன்பாக உட்கார்ந்திருந்த நான் வெளிப்படையான எந்த ஒரு ஆரவாரமின்றி என் தலையை சாய்த்து முற்றுமாக என் ஆண்டவருக்கு ஒப்புவித்து முன் சென்று தேவ சந்நிதானத்தில் முழங்காலூன்றினேன்.

அந்த அர்ப்பணிப்பு எத்தனை முழுமையானது என்பதை யோனத்தானுடைய பின் வந்த வாழ்க்கை தெள்ளந்தெளிவாக எடுத்துக்கூறுவதாக இருந்தது. "எனது 18 ஆம் வயதில் என்னில் நடைபெற்ற எனது மனமாற்றம் முழுமையும், பூரணமுமான ஒன்றாகும். "கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.... "(கலா 2 : 20) என்று கூறிய அப்போஸ்தலன் பவுலைப்போல அந்த எனது மனந்திரும்புதலின் நாளிலிருந்து எனக்காக தம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து அன்புகூர்ந்த தேவ மைந்தனாம் இயேசு இரட்சகருக்கே நான் முற்றுமாக சொந்தமானேன்" என்று தமது வாழ்வின் கடைசி ஆண்டின் 75 ஆம் வயதில் தனது மகள் ஒருவரிடம் கூறினார்.

மனந்திரும்புதலின் வெளிப்படையான அறிகுறிகள்.

எனது மனந்திரும்புதலின் ஆரம்ப நாட்களில் நான் எனது சகோதரன் வில்லியத்தின் குடும்பத்தோடு தங்கியிருந்தேன். அவனுடைய வீடு எங்கள் விட்டிலிருந்து 15 மைல்கள் தொலைவில் இருந்தது. எங்களுடைய பெற்றோர் எங்களைப் பார்க்க வேண்டுமென்று வந்து ஒரு மாத காலம் எங்களுடன் தங்கியிருந்தனர். சாப்பிடும் சமயத்தில் கர்த்தருக்கு நன்றி ஸ்தோத்திரம் சொல்லுவதிலிருந்து குடும்ப ஜெபம் வரை எனது தகப்பனாருக்கு இல்லாதிருந்தது. அந்தச் சமயம் குடும்ப ஜெபம் நடத்தும்படியாக தேவன் என் உள்ளத்தில் பலமாகத் தூண்டினார். எனவே, நான் ஒரு நாள் " இன்று இரவு நாம் குடும்ப ஜெபம் நடத்துவோம். ஆகையால் இராச்சாப்பாட்டுக்குப் பின்னர் ஒருவரும் நித்திரைக்காக

பிரிந்து செல்ல வேண்டாம்" என்று கூறினேன். எனது தகப்பனார் என்ன சொல்லுவாரோ என்று நான் பயந்து கொண்டிருந்தேன்.

அன்று இரவு நாங்கள் குடும்ப ஜெபத்துக்காக ஒன்றாகக் கூடினோம். நான் ஏசாயா தீர்க்கத்தரிசியின் புத்தகத்தில் இருந்து ஒரு பகுதியை வாசித்து, வாசித்த பகுதியில் இருந்து ஒரு சில விளக்கங்களையும் கூறினேன். பின்னர் நாங்கள் எல்லாரும் ஜெபத்துக்காக முழுங்காற்படியிட்டோம். நான் ஜெபித்தேன். எனது தந்தை ஏதாகிலும் எதிர்ப்பு தெரிவித்து என் மேல் சாடுவாரோ என்று நான் பெரிதும் அஞ்சினேன். ஆனால், நான் ஆச்சரியப்படும் விதமாக எனது தகப்பனார் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இந்த குடும்ப ஜெபம் பின் வந்த நாட்களிலும் ஒரு நாள் தவறாது நீடித்தது. சில மாதங்களுக்கு பின்னர் எனது தந்தை தன்னை கர்த்தருக்கு முற்றுமாக ஒப்புவித்து அவருடைய அடிமை ஆனார்கள்."

யோனத்தான் படித்துக்கொண்டிருந்த உயர்நிலைப்பள்ளியில் அவரது மனந்திரும்புதலுக்குப் பிறகு நடந்த ஒரு ஆச்சரியமான சம்பவத்தை அவரே நமக்கு விளக்கிக்கூறுகின்றார் :-

"எனது வகுப்பு ஆசிரியர் "தேவன் ஒருவர் இல்லவே இல்லை" என்று சாதித்து நின்ற நாஸ்தீகன் டாம் பெயின் என்பவனின் கொள்கைகளை பின்பற்றிச் செல்லும் தீவிர பக்தனாக இருந்தார். தனது வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுமே தனது நாஸ்தீக கருத்துக்களை பின்பற்றி நடக்க வேண்டும் என்று அவர் பெரிதும் விரும்பினார். அதற்கு நேர் விரோதமாக எதிர்த்து நின்ற என்னை அவரும் எனது வகுப்பில் பயின்ற மாணவர்கள் எல்லாரும் கேலிபரிகாசம் செய்ததுடன் பற்பலவிதமான வாக்குவாதங்களையும் என்மீது தொடுத்து வந்தார்கள். அது தேவனுடைய அன்பில் களிகூர்ந்து மகிழ்ந்து கொண்டிருந்த எனக்கு தாங்கக்கூடாத பாரமான கவலையாக இருந்தது. நான் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து முக்காடிக்கொண்டிருந்தேன். எனது குருவானவரையோ அல்லது வேறு எந்த மனித உதவியையோ நான் இது சம்பந்தமாக நாடிச் செல்லாமல் தேவனுடைய வார்த்தைகளையே எனது வழிகாட்டியாக எடுத்து இரவும் பகலும் நான் அவைகளை ஆராயத் தொடங்கினேன். எனது படிப்பை ஒரு பக்கம் வைத்துவிட்டு நாஸ்தீக ஆசிரியரையும், அவருடன் சேர்ந்திருந்த மாணவர்களையும் தேவனுடைய வசனங்களைக்கொண்டே தேவ பெலத்தால் மடங்கடித்து வீழ்த்த

என்னை பக்குவப்படுத்தலானேன். இறுதியாக, நான் தேவனுடைய வசனங்களால் என்னை நன்கு இடைகட்டிக்கொண்டு அந்த உறுதியான அஸ்திபாரத்தின் மேல் நான் என்னை நிலைப்படுத்தி நின்றுகொண்டு ஆசிரியரை தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளுடன் சந்தித்தேன்.

என்ன ஆச்சரியம், தேவன் அதிசயம் செய்தார். வகுப்பு ஆசிரியரும் அவரது கொள்கைகளை ஏற்று ஆதரித்து அவரைப்பின்பற்றிச் சென்ற மாணவர்கள் யாவரும் தங்களது நாஸ்தீக கொள்கைகளிலிருந்து திரும்பி ஜீவனுள்ள தேவனிடம் வந்தார்கள். அந்த நாஸ்தீக எனது வகுப்பு ஆசிரியர் பின்னர் மாற்றம் பெற்று எனது ஜீவ கால நண்பர்களில் ஒருவரானார்".

இப்படியாக தேவன் அவரது மனமாற்றத்தின் ஆரம்ப நாட்களில் பலத்த காரியங்களை செய்தபோதினும் யோனத்தான் ஒரு ஆண்டு காலமாக தான் ஒரு வழக்கறிஞராக ஆக வேண்டும் என்று பெரிதும் ஆசைப்பட்டார். தேம்ஸ்போர்ட் பண்ணையின் வேலைகளை எல்லாம் கஷ்டப்பட்டு முடித்ததின் பின்னர் மாலை நேரம் சில மைல்கள் நடந்து சென்று ஒரு அரசியல் கூட்டத்தில் கலந்து கொள்ளுவார். அவருடைய பண்ணை வீட்டுக்கு பின் புறம் ஒரு சிறிய குளம் உண்டு. அந்தக் குளத்தின் கரையில் நின்று கொண்டு அவர் ஒரு அரசியல்வாதி போல பேசிப்பழகி வந்தார். அந்த குளத்தை ஒட்டிச்செல்லும் பெரிய ரஸ்தாவில் செல்லும் மக்கள் ஏதோ ஒரு பைத்தியக்காரன் புத்திக்கோளாறு காரணமாக பேசிக்கொண்டிருக்கின்றான் என்று தங்களுக்குள்ளாக நினைத்துச் சென்றனர். யோனத்தான் ஒரு பள்ளி ஆசிரியனாக வேண்டும் என்று அவரது தாயார் அடிக்கடி கூறி வந்தார்கள். ஆனால் "ஒரு நல்ல அரசியல்வாதியே இன்று நாட்டுக்குத் தேவை" என்று அவர் விவாதிப்பார். இவர்கள் இருவருடைய எண்ணங்களுக்கும் மேலாக தேவ நோக்கம் ஒன்று இருந்தது. அதின்படி யோனத்தான் கோபோர்த் ஒரு எழுப்புதல் பிரசங்கியாராகி அநேக ஆயிரங்களை நித்திய ஜீவனுக்கு நேராக வழிநடத்த வேண்டும் என்பதாக இருந்தது.

அழியும் ஆத்துமாக்களை ஆண்டவர் இயேசுவின் பாதம் சேர்ப்பதே வாழ்வின் ஒரே இலட்சியம்.

ஒரு சனிக்கிழமை மத்தியானம் யோனத்தான் கோபோர்த் 15 மைல்கள் தூரத்திலுள்ள தனது சகோதரன் வில்லியத்தைப் பார்க்க தனது

குதிரையில் சென்றார். அந்த நாளின் இரவில் அவர் அங்கு தங்கியிருந்துவிட்டு அடுத்த நாள் காலையில் புறப்பட்டார். அவர் புறப்படுகின்ற போது, சகோதரன் வில்லியத்தினுடைய பக்தியுள்ள மாமனார் படித்துப் பழமையாய்ப்போன "மார்ரே மச்சேனின் வாழ்க்கை வரலாறு" என்ற அருமையான புத்தகத்தை கொடுத்து "இளைஞனே இந்த புத்தகத்தைப் படித்துப் பார். இது உனக்கு உனது பக்தி வாழ்க்கையில் மிகுதியும் நன்மை செய்யும்" என்று கூறினார். அந்தப் புத்தகத்தை தனது முதுகுக்குப் பின்னாலுள்ள குதிரையின் சேணப்பையில் வைத்துவிட்டு யோனத்தான் வீட்டை நோக்கிப் புறப்பட்டு வந்தார்.

வெயிலின் காட்டம் அதிகமில்லாத நல்ல இதமான அக்டோபர் மாதத்தின் நாள் அதுவாகும். குதிரையில் வெகு தொலைவு வந்த பின்னர்தான் தனக்கு கொடுக்கப்பட்ட புத்தகத்தின் நினைவு அவருக்கு வந்தது. உடனே, அவர் அந்த புத்தகத்தை எடுத்து குதிரையை மெதுவாக ஓட்டிய வண்ணம் படித்துக் கொண்டே வந்தார். வழியில் ஒரு மரத்தோப்பை கண்டு அங்கே இறங்கி தனது குதிரையை ஒரு மரத்தில் கட்டி வைத்துவிட்டு தான் வசதியாக உட்கார்ந்து கொள்ள காய்ந்த மர இலைகளால் தனக்கு ஒரு இருக்கையை அமைத்து அதிலே சாவதானமாக உட்கார்ந்த வண்ணம் "மார்ரே மச்சேனின் வாழ்க்கை வரலாற்றை" ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தார். மணிக்கணக்கான நேரங்கள் எப்படி பறந்து மறைந்தது என்பது அவருக்கு தெரியாது. சூரியன் மேல் திசைக்கு சென்று மரங்களின் நிழல்கள் நீண்டிருப்பதை கவனித்த அவர் தனது பயணத்தை தொடர்ந்தார். அந்த மரங்களின் நிழலில் யோனத்தான் நேரம் செலவிட்டுப்படித்த அந்த புத்தகமானது அவரது வாழ்க்கையின் முழு குறிக்கோளையுமே மாற்றி அமைத்தது.

தேவ மனிதர் மார்ரே மச்சேனின் பரிசுத்த வாழ்க்கை, அவருடைய ஆவிக்குரிய போராட்டங்கள், தேவன் தெரிந்து கொண்ட ஜனமான யூத மக்களின் இரட்சிப்புக்காக அவர் எடுத்துக் கொண்ட அவரது வாழ்வின் தியாகங்கள், அர்ப்பணிப்புகள் அனைத்தும் யோனத்தானின் உள்ளத்தின் அடித்தளத்தில் பலமாக வேர்பிடித்து நின்று கொண்டது. இதுகாறும் தனது வாழ்வை அலைவாய் துரும்பு போல அலைசடிபண்ணிக் கொண்டிருந்த அற்பமான ஆசைகள், நோக்கங்கள், தேவையற்ற பிடிவாதங்கள் அனைத்தும் பகலவனைக்கண்ட பனி போல மாயமாய் மறைந்தொழிந்தது. அந்த இடத்தை அழியும் ஆத்துமாக்களை ஆண்டவர்

இயேசு இரட்சகருக்காக ஆதாயம் பண்ணவேண்டுமென்ற ஒரே பரிசுத்த குறிக்கோளே வாழ்வின் உன்னதமான இலட்சியம் என்ற எண்ணம் சிறைப்பிடித்துக் கொண்டது.

நாக்ஸ் இறையியல் கல்லூரி வாழ்கையும் தேவ பணிகளின் ஆரம்பமும்.

அக்காலத்தில் டொரண்டோவிலிருந்த இறையியல் கல்லூரியாகிய நாக்ஸ் கல்லூரியில் சேர ஆயத்தமாக தன்னை கர்த்தரண்டை வழிநடத்திய லாக்லன் கேமரூன் குருவானவரிடம் கிரேக்கு, இலத்தீன் மொழிகளைக் கற்றார். ஒவ்வொரு நாளும் வழக்கமாக படுக்கையிலிருந்து எழும்பும் நேரத்திற்கு இரண்டு மணி நேரம் முன்னதாக எழுந்து வேதாகமத்தை ஆழ்ந்து வாசித்து தியானிக்க நேரம் தேடிக்கொண்டார்.

நாக்ஸ் கல்லூரியில் இறையியல் கற்பதற்கு யோனத்தானுக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அவரும் அந்தக் கல்லூரியில்தான் சந்திக்கப்போகும் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தமான வாலிபரைப்பற்றியும், அவர்களோடு தான் ஐக்கியங்கொண்டு அனுபவிக்கப்போகும் ஆன்மீக அனுபவங்களைப்பற்றியும் கனவுகள் கண்டு கொண்டிருந்தார்.

ஆனால், அந்த இறையியல் கல்லூரி வாழ்க்கை அவருக்கு பெரிய ஏமாற்றத்தையே தந்தது. அவர் எதிர்பார்த்தபடியான கிறிஸ்தவ பரிசுத்த வாழ்க்கை அக்கல்லூரியில் பல மாணவருக்கு இருக்கவில்லை. வழி தவறிப்போன பாவ மாந்தரை தேவனுடைய மந்தைக்குள் கொண்டு வர யோனத்தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளை அந்த மாணவர்கள் கேலி பேசி ஏளனம் செய்தார்கள். கிராமப்புறத்தில் வாழ்ந்த அவருடைய பழக்கவழக்கங்கள், உடை, எளிமை இவையனைத்தும் அவரை அவர்கள் மத்தியில் ஒரு கேலிப்பொருளாக்கினது.

ஒரு நாள் இரவு கல்லூரி மாணவர்கள் அவருக்கு ஓர் "ஆரம்பச்சடங்கு" நடத்தினர். அவர் அதில் அநேக அவமானங்களுக்கு உட்படுத்தப்பட்டார். இதெல்லாம் ஒரு கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் நடக்கின்றனவே என்று அவர் மிகவும் வேதனையடைந்தார். ஆனால், அவருடைய பரிசுத்த நடத்தை அவர் அக்கல்லூரியை விட்டுச் செல்லும் நாளில் அவருக்கு பெரும் மதிப்பை கொடுத்து அந்த துஷ்ட மாணவர்களையே மாற்றியமைத்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அக்கல்லூரியில் அவர் கல்வி கற்ற காலம் முழுவதிலும் ஒரு ஞாயிறு தவறாமல் டொராண்டோ நகரிலுள்ள "டாண்" என்ற சிறைக்கூடத்திற்கு அவர் சென்று அங்கிருந்த கைதிகளுக்கு தேவனுடைய சுவிசேஷ நற்செய்தியை கூறுவது வழக்கம். முதலில் அவருக்கு சிறைச்சாலையின் சபா மண்டபம் வரை செல்லத்தான் அனுமதி கிடைத்தது. பின்னர், அவருடைய அருமையான பரிசுத்த நடத்தையையும், தேவ பணியையும் அறிந்து கொண்ட சிறைக்காவலர்கள், கைதிகள் இருந்த அறைகளின் உள் முற்றம் வரை அவர் சென்று தேவ செய்தியை அறிவிக்க அனுமதித்தனர்.

அவர் அங்கு சென்றிருந்த ஒரு நாள் ஒரு சிறைக்கைதி மிகவும் பெருமையான குரலில் சப்தமாக அவரிடம் "கடவுள் இருக்கிறார் என்று நான் நம்பவில்லை" எனக் கூறினான். அதற்கு யோனத்தான் மிகுந்த தேவ அன்புடனும், பொறுமையுடனும் "உம்மைப்பற்றி என் கையிலுள்ள இப்புத்தகம் (தனது கரத்திலுள்ள வேத புத்தகத்தை சுட்டிக்காண்பித்து) என்ன கூறுகிறதென்று பார்ப்போம் என்று கூறி 14 ஆம் சங்கீதத்தை எடுத்து "தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்" என்று வாசித்தார். அருகிலிருந்த அனைவரும் உடனே கொல்லென்று சிரித்துவிட்டனர். அதன் பின்னர் யோனத்தான் அந்த தேவ வசனத்தின் பேரில் அருமையாக பிரசிங்கித்தார். அன்று சில கைதிகள் மனந்திரும்பினர்.

இரண்டு ஆண்டுகள் அவர் "வில்லியம் வீதி சுவிசேஷப்பணி இயக்கத்தில்" சேர்ந்து தொண்டாற்றினார். அதற்கு அவருக்கு சம்பளம் எதுவும் கிடையாது. பல வேளைகளில் அவருக்கு ஒரு தபால் தலை வாங்கக்கூட காசு இராது. எனினும், தனக்குத் தேவையான யாவற்றிற்காகவும் அவர் தனது ஆண்டவரிடமே கேட்டு அற்புதமாக அவைகளைப் பெற்று வாழும் பழக்கம் அப்போதிருந்ததே அவருக்கு ஆரம்பமாகியது.

கல்லூரியில் அவர் கற்றுக் கொண்டிருக்கும் பொழுதே அவர் தேவச்செய்தியை அளிப்பதற்கு ஆயத்தமாக இருந்தார். அருகிலுள்ள ஏழை மக்கள் வாழும் குடிசைப்பகுதிகளுக்குச் சென்று அங்கு வீடுவீடாகப் புகுந்து மக்களுக்கு கர்த்தருடைய செய்தியை கொடுத்து வருவதை கல்லூரியில் சேர்ந்த முதல் நாளிலிருந்தே தனது வழக்கமாக்கிக் கொண்டார். இந்தப்பணியின் பாதையில் அவர் விலைமாதர்களின்

வீடுகளுக்கும் கூடச் சென்று தேவனுடைய அன்பை அவர்களுடனும் பகிர்ந்து கொண்டார். இதற்காக அவர் அடிக்கடி தனது உடன் மாணவரால் ஏளனம் செய்யப்பட்டதும் உண்டு.

ஒரு சமயம் இரவின் பிந்திய மணி நேரம் பட்டணத்தின் மிக மோசமான பகுதியில் தேவனுடைய சுவிசேஷ பணியை முடித்து யோனத்தான் திரும்பிக் கொண்டிருந்தார். அவர் சென்று வந்த இடம் குடிகாரர்கள், குண்டர்கள் நிரம்பிய பகுதியாகும். அப்பொழுது ஒரு போலீஸ்காரர் அவரை சந்திக்க நேரிட்டது. "நீங்கள் எப்படி தனியாக அந்த இடத்திற்குச் சென்று வருகின்றீர்கள்? நாங்கள் கூட அந்தப்பகுதிக்கு செல்லுவதானால் இரண்டு அல்லது மூன்று பேராக சேர்ந்து போவோமே அல்லாமல் எந்த ஒரு நிலையிலும் தனிமையாகப் போவதில்லை" என்று கூறினார். "நான் மட்டும்தான் என்ன? உங்களைப்போலத்தான் எனது துணைக்கு ஒரு ஆளோடு தான் சென்று வருகின்றேன்." என்று சொன்னார். "உங்கள் வார்த்தை நன்றாகவே எனக்கு புரிகின்றது" என்று அந்த கிறிஸ்தவ போலீஸ்காரர் பதில் கொடுத்தார்.

அந்நாட்கள் ஒன்றில் அவர் ஒரு அடர்த்தியான காட்டை கடந்து செல்ல வேண்டியதாக இருந்தது. காட்டு ரஸ்தாவில் நடந்து கொண்டிருந்த அவரது பாதை கொண்டை ஊசி வளைவான ஒரு திருப்பத்தில் சென்றது. அந்த திருப்பத்தை அவர் கடந்து வந்தபோது ஒரு பெரிய கரடியை முகத்துக்கு முகம் சந்தித்தார். அவரைக் கண்ட கரடி சற்று தூரம் சென்று ரஸ்தா ஓரமாக தனது பின்னங்கால்களின் மேல் சாவதானமாக உட்கார்ந்து யோனத்தானை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட யோனத்தான் கோபோர்த்தும் சில வினாடிகளுக்கு அதையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார். பளிச்சென்று அவருக்கு ஒரு எண்ணம் மனதில் தோன்றியது. "நான் எனது பரலோக எஜமானரின் தேவப்பணியில் சென்று கொண்டிருக்கின்றேன். அவர் என்னை கரடியின் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவார்". என்ற எண்ணத்தில் மெதுவாக முன்னேறத் தொடங்கி ஏறக்குறைய கரடியின் அருகாமைக்கே நெருங்கி வந்துவிட்டார். ஆனால் அந்தக் கரடி தான் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசைவதைப்போலத் தெரியவில்லை. நமது யோனத்தானும் துணிச்சலுடன் இன்னும் சில அடிகளை எடுத்துவைத்து முன்னேறவே கரடி மெதுவாக நகர்ந்து காட்டிற்குள் சென்றுவிட்டது.

நாக்ஸ் கல்லூரியில் யோனத்தானின் இறையியல் படிப்பு முடிந்து அவர் பட்டமேற்கும் விழா நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. அந்த விழாவில் உடுத்திக்கொள்ள அவருக்கு தரமான நல்ல ஆடை இல்லாதிருந்தது. தனக்கு, அந்த நாளுக்கு அணிந்து கொள்ள ஒரு தரமான நல்ல ஆடை வேண்டுமென அவர் கர்த்தரை நோக்கி உள்ளமுருகி ஜெபித்து வந்தார்.

தனது அத்தியந்த தேவையை மனதில் கொண்டவராக சற்று மன பாரத்தோடு அவர் யாங்கே தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தார். அந்த தெருவில் இருந்த புகழ்பெற்ற தையல் கடை மேலாளர் தனது கடையின் வாசலில் நின்று கொண்டிருந்தார். யோனத்தான் அந்தக் கடையை கடந்து சென்றபோது கடையின் மேலாளர் பெர்க்கின்ஷா அவரை கைதட்டிக்கூப்பிட்டு தனது கடைக்கு வரும்படியாக அழைத்தார். கடைக்கு சென்ற அவருக்கு முன்பாக புத்தம் புதிய கோர்ட், பேண்டை எடுத்து வைத்து அது எப்படி இருக்கின்றது என்று மேலாளர் யோனத்தானைக் கேட்டார். தனது மனதுக்கு மிகவும் பிடித்திருப்பதாகவும், ஆனால் அதை வாங்கத் தன்னிடம் பணம் எதுவுமில்லை என்றும் யோனத்தான் சொன்னார்.

பேண்ட்டையும், கோட்டையும் போட்டுப் பார்க்க மேலாளர் அவரைக் கேட்டார். அது அவருக்கு முற்றிலும் பொருத்தமானதாக, அவருக்கென்று அளவு எடுத்து தைத்தது போலவே இருந்தது. "இதை நான் உனக்கு எனது அன்பளிப்பாகத் தருகின்றேன். ஏற்றுக்கொள்ளுவாயா?" என்று தையல் கடை மேலாளர் பெர்க்கின்ஷா கேட்டார். "இது வேறு ஒருவருக்காக தைக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அந்த மனிதருக்கு விருப்பமில்லாமல் அதை என் வசமே கொடுத்து வேறு யாருக்காவது இலவசமாக கொடுத்துவிடச் சொல்லிவிட்டுச் சென்று விட்டார்." என்று கூறி அந்த புத்தம் புதிய அழகான உடைகளை யோனத்தானுக்கே கொடுத்துவிட்டார். தேவன் தனக்கு எத்தனை நல்லவராக இருந்து தனது ஜெபத்துக்கு எத்தனை துரிதமாக பதில் அளித்துவிட்டார் என்ற ஆனந்த சந்தோசம் யோனத்தானுக்கு பொங்கிப்புரள ஆரம்பித்தது.

தேவ மனிதனுக்கேற்ற ஒரு வாழ்க்கை துணை

டாக்டர் யோனத்தான் கோபோர்த் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கண்ணோக்கி வரும் நாம் 49 ஆண்டுகள் அவருடன் வாழ்ந்து

அவரது 11 குழந்தைகளுக்குத் தாயான ரோசலிண்ட் கோபோர்த் அம்மையாரின் வாழ்க்கைச் சாயலையும் ஒரு கண்ணோட்டம் பார்ப்பது நமக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும்.

ரோசலிண்ட் கோபோர்த் அம்மையார் தனது வாழ்க்கை சரிதத்தை அவர்கள் வாயாலேயே சொல்ல நாம் ஜெபத்தோடு கவனிப்போம் :-

"இங்கிலாந்து தேசத்திலுள்ள கென்சிங்டன் கார்டன்ஸ் என்ற இடத்துக்கு அருகாமையில் 1864 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி நான் பிறந்தேன். நான் பிறந்த 3 ஆண்டு காலத்துக்குப் பின்னர் எனது பெற்றோர் கனடா தேசத்திலுள்ள மாண்ட்ரீல் என்ற பட்டணத்தில் வந்து குடியேறினர். எனது குழந்தைப் பருவத்தின் பெரும் பகுதியான நேரங்கள் வெகு அழகான படங்கள் வரையும் ஓவியக்காரரான எனது தந்தையின் சித்திரக்கூடத்தில் கழிந்தன. பின் நாட்களில் நான் ஒரு புகழ்மிக்க ஓவியக்காரியாக விளங்குவேன் என்பதை எனது தந்தை நன்கு அறிந்திருந்தார். நான் எனது சித்திரக்கலையை எனது தந்தையிடத்திலும் மற்ற எனது கல்வியை தனியார் பள்ளிக்கூடங்களிலும், எனது தாயாரிடத்திலும் பெற்றேன்.

பின் வந்த நாட்களில் கனடாவிலுள்ள டொராண்டோ ஓவிய பள்ளியில் நான் கற்றுத் தேர்ந்து 1885 ஆம் ஆண்டு மே மாதம் லண்டனிலுள்ள கென்சிங்டன் ஓவிய பள்ளியில் சேர வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. நான் எப்பிஸ்கோப்பிய திருச்சபையைச் சேர்ந்தவள். இதுவரை எனது சுயசரிதையை வாசித்து வந்த நீங்கள் இப்படிப்பட்ட ஒரு தேவ பக்தனுக்கு கர்த்தர் இந்தப் பெண்ணை வாழ்க்கைத் துணையாக கொடுக்க எப்படிச் சித்தங்கொண்டார் என்று ஒரு கணம் நீங்கள் கட்டாயம் ஆச்சரியம் கொள்ளவே செய்வீர்கள். மேலே நான் குறிப்பிட்ட காரியம் எனது வாழ்க்கைச் சித்திரத்தின் பாதிப்பகுதி மாத்திரமேதான். சித்திரத்தின் அடுத்த பகுதியை கீழே நான் தருகின்றேன்.

நான் 12 வயது சிறுமியாக இருந்தபோது ஆல்பிரட் சந்தாம் என்ற பிரசங்கியார் யோவான் 3 : 16 ஆம் வசனத்தின் பேரில் ஒரு உயிர் மீட்சி கூட்டத்தில் பிரசங்கித்தார். தேவனுடைய அன்பின் ஆழம், நீளம், அகலம், உயரத்தின் சித்திரத்தை மிகுந்த உணர்ச்சியோடும், தேவ அன்பின் பெருக்கத்தோடும் அவர் விளக்கிக் காண்பித்துக்கொண்டிருந்த

வேளையில் நான் என்னை முற்றுமாக ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து தங்களை கர்த்தருக்கு அன்று அந்தக் கூட்டத்தில் அர்ப்பணித்த மக்களுடன் தைரியமாக எழுந்து நின்று எனது பரம எஜமானரின் அடிமையானேன்.

கூட்டத்திலிருந்து நான் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது "கிறிஸ்து இரட்சகர் உன்னை தமது சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார் என்று நீ நம்பிக்கொண்டிருப்பது எத்தனை முட்டாள்தனமானது" என்று சாத்தான் திரும்பத் திரும்ப எனது காதிலே பேசிக்கொண்டே இருந்தான். அடுத்த நாள் அதிகாலை எனது பாட்டியம்மா எனக்கு இங்கிலாந்திலே கொடுத்த எனது வேதாகமத்தின் பக்கங்களை புரட்டினவளாக "ஆண்டவரே, நீர் என்னை உமது பிள்ளையாக ஏற்றுக்கொண்டதின் நிச்சயத்தை உமது வசனத்தின் மூலமாக உறுதிசெய்யும்" என்று ஜெபித்தேன். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" *(யோவான் 6 : 37)* என்ற வசனத்தை தேவன் எனக்கு கொடுத்து என்னை களிகூரப்பண்ணினார். மேற்குறிப்பிட்ட தேவ வசனம் எனது எல்லா சந்தேகத்தையும் என்னிலிருந்து விரட்டி அடித்தது.

அதற்கப்பால், சாத்தான் "நீ ஆண்டவருடைய பிள்ளையாக இருப்பதற்கு முற்றும் தகுதியற்ற மிகவும் சிறு பிள்ளை" என்று எனது காதிற்குள் திரும்பவும் வந்து பேசி என்னை குழப்பமடைய செய்தான். நான் திரும்பவும் ஆண்டவருடைய வேதத்திற்கே சென்று அதின் பக்கங்களைப் புரட்டி கர்த்தர் இது விசயத்திலும் எனக்கு உதவி செய்ய அவரை நோக்கிக் கெஞ்சினேன். "அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" *(நீதி 8 : 17)* என்ற தேவ வசனத்தை கர்த்தர் எனக்குக் கொடுத்து என்னை அமரப்பண்ணினார். மேற்கண்ட இரு வசனங்களும் தேவன் என்னை தமது சொந்த பிள்ளையாக ஏற்றுக்கொண்டார் என்ற எனது விசுவாசத்தை ஆழமாக உறுதிப்படுத்தியது. அதிலிருந்து எனக்கு எந்த ஒரு சந்தேகமும், தடுமாற்றமும் கடைசி வரை ஏற்படவே இல்லை.

அதின் பின்னர், அடுத்து வந்த ஆண்டுகளில் இரண்டு காரியங்கள் என்னில் போராட்டம் பண்ணிக் கொண்டே இருந்தன. ஒன்று, நான் கற்ற ஓவியக்கலை. அடுத்தது நான் எனது சொந்தமாக ஏற்றுக்கொண்ட எனது அருமை இரட்சகர். எனது அருமை இரட்சகருக்கு ஊழியம் செய்வதா

அல்லது நான் கற்ற சித்திரக்கலையில் ஈடுபாடு கொண்டு அதற்கு உழைப்பதா என்ற போராட்டத்தில், கர்த்தருக்கு மாத்திரமே இனி நான் ஊழியம் செய்வது என்ற தீர்மானத்துக்கு வந்தேன்.

நான் இன்னும் இளமையாக எனது 20 ஆம் வயதில் இருந்தபோது "ஆண்டவரே, நீர் என்னை ஒரு குடும்ப பெண்ணாக வாழ சித்தம் கொள்வீரானால் தன்னை முற்றுமாக உமது தேவ ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்த ஒரு தேவ ஊழியனுக்கே என்னை மனைவியாக ஆக்கியருளும். அதைத் தவிர வேறு எந்த ஒரு குடும்ப வாழ்விலும் நான் இணைய விரும்பவில்லை" என்று என்னை கர்த்தருக்கு ஒப்புவித்து ஜெபித்து வந்தேன்.

1885 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை எங்களது வேதபாட ஆசிரியர் பிளேக் என்பவர் இடத்திற்கு ஹென்றி பிரைன் என்ற ஒரு புதிய ஆள் வந்திருந்தார். நான் தேவாலயத்தின் ஆர்க்கனிஸ்ட்டாக (இசைக்கருவி இசைப்பவர்) இருந்தமையால் அன்று பாடக்கூடிய பாடல்களைக் குறித்து அவர் என்னுடன் பேசினார். அவர் என்னைவிட்டு கடந்து செல்லும் நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்த ஒரு ஏழ்மையான மனிதரை எனக்கு "இவர்தான் எங்கள் பட்டணத்து மிஷனரி யோனத்தான் கோபோர்த்" என்று அறிமுகம் செய்து வைத்தார். அந்த மனிதர் பார்வைக்கு அற்பமானவராக தெரிந்தபோதினும் அவரது பிரகாசமான முகச்சாயல் அவர் ஒரு பரிசுத்த தேவபிள்ளை என்பதை வெட்ட வெளிச்சமாக காண்பித்துக்கொண்டிருந்தது. அவரது பரிசுத்தச்சாயல் அவரது ஏழ்மைக் கோலத்தை நான் காணவிடாதபடி முற்றுமாக மறைத்தது. புதிதாக வந்த வேதபாட ஆசிரியர் ஹென்றி பிரைன் வரவிருக்கும் சனிக்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் ஒன்றுக்கு ஆர்கன் இசைப்பதற்கு என்னை வரும்படியாக அன்போடு அழைத்தார். ஏற்கெனவே ஒழுங்கு செய்யப்பட்டதின்படி நான் இங்கிலாந்து செல்லக்கூடியவளாக இருந்தபோதினும் என்னையறியாமல் அவரது அழைப்புக்கு இணக்கம் தெரிவித்தேன்.

சனிக்கிழமை வந்தது. டொராண்டோ மிஷன் யூனியன் சதுக்கத்தில் நடைபெற்ற அந்தக்கூட்டத்துக்கு ஆர்க்கனிஸ்ட்டாக நான் சென்றேன். எனக்கு முன்பாக இருந்த மக்களுடன் யோனத்தான் அமர்ந்திருந்தார். அவர் தனக்கு முன்பாக இருந்த மேஜையின் மீது தனது வேதாகமத்தை

வைத்திருந்தார். திடீரென அவரை ஏதோ ஒரு காரியத்துக்காக வெளியே வரும்படி அழைத்தார்கள். அவர் போனதும், நான் மிகுந்த தைரியத்தோடு எனக்குள் ஏற்பட்ட ஒரு உள்ளுணர்வின்படி எனது இருக்கையிலிருந்து எழுந்து யோனத்தான் கோபோர்த்தினுடைய இருக்கைக்கு சென்று அவரது வேதாகமத்தை எடுத்து வந்து அதை எனக்கு முன்பாக விரித்து வைத்து மிகவும் துரிதம் துரிதமாக அதின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தேன். ஆ, அது, பல தடவைகள் வாசிக்கப்பட்டு, வாசிக்கப்பட்டு சிதையுண்டு காணப்பட்டதுடன் தேவனுடைய வசனங்கள் எல்லாம் மிகவும் கிரமமாக, அழகாக கோடிட்டு வாசிக்கப்பட்டிருப்பதை நான் ஆச்சரியத்துடன் கவனித்தேன். உடனே, நான் அந்த வேதாகமத்தை அது இருந்த இடத்தில் கொண்டு போய் வைத்துவிட்டு எனது இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டேன். அந்த சம்பவம் கண் இமைக்கும் நேரத்தில் வெகு துரிதமாக நடந்து முடிந்தது. "நான் திருமணம் செய்வதாக இருந்தால் இந்த பரிசுத்த பக்தனைத்தான் மணந்து கொள்ளுவேன்" என்று என் உள்ளத்துக்குள் அன்று தானே நிச்சயித்துக் கொண்டேன்.

அந்த நாட்களில் தானே டொராண்டோ பட்டணத்தின் கிழக்கு கடைக்கோடிப் பகுதியில் ஒரு சுவிசேஷ மிஷன் களத்தை புதிதாக திறக்கும் கமிட்டிக்கு என்னையும் அங்கத்தினராக தெரிவு செய்திருந்தார்கள். அதே கமிட்டியில் யோனத்தான் கோபோர்த்தும் இடம் பெற்றிருந்தார். நானும், யோனத்தானும் பல தடவைகள் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த ஆண்டின் வசந்த காலத்தில் யோனத்தான் என்னைப் பார்த்து "உங்களுடைய வாழ்க்கையை என்னுடைய வாழ்க்கையுடன் இணைத்து சீனாவுக்கு மிஷனரியாக வருவீர்களா?" என்று கேட்டார். எந்த ஒரு தயக்கமுமின்றி நான் அவருடைய வார்த்தைக்கு இணங்கி "நிச்சயமாக அப்படியே செய்கின்றேன்" என்று பதில் அளித்தேன். சில நாட்கள் கடந்து சென்றன. யோனத்தான் மீண்டும் என்னை சந்தித்து "எனது ஆண்டவர் இயேசுவையும், அவரது பரிசுத்த தேவ ஊழியத்தையும், ஏன்? உங்களைக் காட்டிலும் அதிகமாக நேசிக்கவும், அன்புகூரவும் நீங்கள் என்னை அனுமதிப்பீர்களா? " என்று தாழ்மையாக கேட்டார். சற்று நேர அமைதிக்குப் பின்னர் "ஆம், நான் எப்பொழுதும் அதை உங்களுக்கு அனுமதிப்பேன்" என்றேன். இப்படிப்பட்ட ஒரு தேவ பக்தனை தேவன் எனக்கு தரும்படியாகத்தான் நான் இத்தனை காலமும் ஜெபித்து வந்திருந்தேன்.

மேற்கண்ட வாக்குறுதியை நான் கொடுத்த பின்னர் எனது முதல் பரீட்ஷை ஆரம்பமானது. உலகில் எல்லா பெண்களையும் போல எனது வருங்கால கணவர் எனக்கு ஒரு நிச்சயதார்த்த மோதிரத்தை அணிவிப்பார் என்று நான் ஆவலோடு காத்திருந்து கனவுலகில் மிதந்து கொண்டிருந்தேன். எனது காத்திருப்பின் நாட்கள் ஒன்றில் யோனத்தான் என்னண்டை வந்து "உங்களுக்காக நான் ஒரு திருமண நிச்சயதார்த்த மோதிரத்தை பெற்றுக்கொள்ள முடியாது போனாலும் நீங்கள் அதைக் குறித்து ஒன்றும் நினைக்க மாட்டீர்கள் என்று எண்ணுகின்றேன். அப்படித்தானே?" என்று யோனத்தான் கூறிவிட்டு தனது வார்த்தையை தொடர்ந்தார். "சீன தேசத்திலே தேவப்பணி செய்ய நிறைய புத்தகங்களும், துண்டுப்பிரதிகளும் தேவைப்படுகின்றன. அதின் காரணமாக ஒவ்வொரு பைசாவும் கூட மிகவும் கவனத்தோடும் சர்வ ஜாக்கிரதையோடும் செலவிடப்பட வேண்டியதாக இருக்கின்றது" என்று சொன்னார். அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட நான் அவரது பிரகாசமான முகத்தைப் பார்க்கவே நிச்சயதார்த்த மோதிரத்தைக் குறித்த எனது கனவுக்கோட்டை எல்லாம் என்னைவிட்டு மாயமாக மறைந்து போனது. நித்தியத்தின் அடிப்படையில் உண்மையான விலைமதிப்பு எதில் உள்ளது என்ற முதல் பாடத்தை நான் கற்றுக்கொண்டேன்.



டொராண்டோ பட்டணத்தின் கிழக்கு கடைக்கோடி குடிசை வாழ்பகுதியில் யோனத்தானுடன் சேர்ந்து 2 ஆண்டு காலம் தேவப்பணி செய்ததின் காரணமாக மனந்திரும்பாத எனது உடன் பிறந்த சகோதரிகளின் ஆத்தும இரட்சிப்பைக்குறித்ததான எனது பொறுப்பான உத்திரவாதத்தை நான் வெகு அதிகமாக உணர்ந்தேன். இந்த நாட்களில் என்னில் எனது குழந்தை பருவ காலம் முதல் நீண்ட நாட்களாக வேர்ப்பிடித்து நின்ற எனது ஓவியக்கலை ஆர்வம் தானாகவே என்னிலிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டது. அதின் இடத்தை தன்னை முற்றுமாக தனது பரம எஜமானரின் பரிசுத்த சேவைக்கு

அர்ப்பணித்திருந்த யோனத்தான் கோபோர்த்தின் உத்திரவாதமும் பொறுப்புமுள்ள மனைவியாக இருந்து கர்த்தருடைய பரிசுத்த தேவப்பணியில் அவரோடு தோளோடு தோள் கொடுத்து ஊழியம் செய்ய என்னை ஏவி எழுப்பிவிட்டது. ரோசலிண்ட் கோபோர்த் அம்மையாரின் படத்தை இச்செய்தியில் நீங்கள் காணலாம்.

சீனா தேசம் நோக்கிய பயணப்பாதையில்.

டாக்டர் யோனத்தான் கோபோர்த்தும் அவரது மனைவி ரோசலிண்ட் கோபோர்த்தும் கனடா தேசத்தின் வான்கூவர் துறைமுகத்திலிருந்து 1888 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் தேதி மிஷனரிகளாக சீன தேசத்துக்கு பயணமானார்கள். அந்த நாளில் எழுதப்பட்ட கோபோர்த்தின் கடிதம் ஒன்றில் கீழ்க்கண்ட வரிகள் காணப்படுகின்றன : -

"எங்கள் கப்பல் தளபதியாம் கர்த்தர் புறப்படுவதற்கு முன்னர் சில வரிகளை நான் எழுதுகின்றேன். "எஸ். எஸ். பார்த்தியா" என்ற எங்கள் கப்பலின் அறைக்குள் காலை 7 மணிக்கெல்லாம் நாங்கள் சென்று விட்டோம். எங்களை ஏற்றிச் செல்லும் இந்தக்கப்பல் தனது நங்கூரத்தை விலக்கி மெதுவாக நகருவதை நாங்கள் கவனிக்கின்றோம். எங்களுடைய தாய் நாடான கனடா தேசத்தை விட்டுவிட்டு புறப்படுவது, அதிலும் குறிப்பாக எங்களை அதிகம் அதிகமாக நேசிக்கின்ற தேவ மக்கள் நிறைந்த அந்த நாட்டைவிட்டு பயணப்படுவது என்பது எங்களுக்கு அடக்க முடியாத துன்பப் பெருக்கை கொண்டு வருவதாக இருப்பினும் தொடர்ந்து கனடா தேசத்தில் தங்கியிருக்க எங்களுக்கு கொஞ்சமும் ஆசை இல்லை. எனது மனைவி ரோசலிண்ட் கோபோர்த் எங்களுக்கு முன்னாலுள்ள ஆழ்ந்த சமுத்திரங்களுக்கு அப்பாலுள்ள எங்கள் புதிய பணித்தள வீட்டைக் குறித்து கொண்டுள்ள சந்தோசத்தைப் போன்ற ஒரு சந்தோசத்தை என்றைக்குமே கண்டதில்லை. எங்களது இந்த மிஷனரிப் பிரயாணத்தை அநேக கர்த்தருடைய பிள்ளைகளின் கண்கள் கவனித்துக் கொண்டே இருக்கின்றன. அவர்களுடைய உருக்கமான ஜெப ஆதரவும், பொருளாதார உதவியும் எங்களுக்கு உண்டு என்பது எங்களுக்குத் தெரியும். எங்கள் தேவனுடைய திருவுளத்துக்குப் பிரியமானால் பத்தாயிரம் சீன மக்களை நாங்கள் எங்கள் ஆண்டவருக்காக ஆதாயம்

செய்ய வேண்டுமென்பதே எங்கள் வாழ்வின் குறிக்கோள்" (இந்த ஆசை பின் வந்த ஆண்டுகளில் அப்படியே நிறைவேறலாயிற்று)

பார்த்தியா என்ற அந்தக் கப்பலில் பயணம் செய்தவர்களில் ரோசலிண்ட் அம்மையார் மட்டும்தான் பெண் என்பது சற்று அதிர்ச்சியான செய்திதான். கப்பல் வளைகுடாவை கடந்து பெரும் சமுத்திரத்துக்குள் நுழைந்த ஓரிரு தினங்களில் கப்பலில் ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்தது. கப்பலின் தலைவனான ஒரு பெரிய கனத்த மனிதன் அதிகமாக குடித்து அதின் காரணமாக மரணமடைந்து அவனது சரீரத்தை கப்பலின் அடித்தட்டுக்கு சுமந்து சென்றதை கோபோர்த் தம்பதியினர் கவனித்தனர். அடுத்து வந்த 14 நாட்களுக்கு ரோசலிண்ட் கோபோர்த்துக்கு அந்த நிகழ்ச்சி ஒரு பயங்கரமான கலக்கமாகவே இருந்தது.

கப்பலின் தச்சன் ஒரு நல்ல கிறிஸ்தவன். அவன் கோபோர்த்தண்டை வந்து கப்பலின் பாதுகாப்புக்காக ஜெபிக்கும் படியாக அவரைக் கேட்டுக்கொண்டான். ஏனெனில் அதிலே ஜப்பான் நாட்டுக்காக சில பளுவான யந்திரங்கள் ஏற்றப்பட்டிருந்தது. யந்திரங்களின் அத்தனை அதிகமான பழு கப்பல் பலகையை உடைத்துக்கொண்டு வெளியே சமுத்திரத்திற்குள் போய்விடுமோ என்ற அச்சம் அந்த தச்சனுக்கு இருந்தது. கடலிலே புயல் காரணமாக 14 நாட்கள் சூரியனுடைய முகமே காணப்படவில்லை. அந்த தினங்களில் கோபோர்த் அந்த தச்சனுடைய வேண்டுகோளுக்காக ஜெபிக்கும்படியான நல்ல தருணம் கிடைத்தது.

பதினைந்தாம் நாள் கப்பல் ஜப்பான் வந்து சேர்ந்து, அதிலிருந்து அது பயணப்பட்டு சீன தேசத்தின் ஷாங்காய் துறைமுகம் வந்து எட்டிப்பிடித்தது. தங்கள் பணித்தளத்திற்கு செல்லுவதற்கு முன்னால் கோபோர்த் தம்பதியினரை ஷாங்காய் நகரில் வாழ்ந்த அருட்பணியாளர் ஒருவர் அந்த நகரில் உள்ள "அபினி அரண்மணை" (ஓபியம் பாலஸ்) என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார். அது ஓர் அழகான மாளிகை. மிகவும் பிரகாசமான விளக்குகள் அங்கு ஏற்றப்பட்டிருந்தன. அங்குள்ள ஒடுக்கமான படுக்கைகளில் முழு ஆடையணிந்த ஆண்களும், பெண்களும் அபின் அருந்தும் சாதனங்களுடன் படுத்திருந்தனர். அவர்களுக்கு அயல் நாட்டினர் வருகிறார்களே என்ற வெட்கம் கொஞ்சம் கூட இல்லை. கெட்ட குமாரன் சரித்திரத்தில் நாம் காண்கின்ற "தூர தேசம்" என்பது

இந்த சீன தேசத்திலுள்ள ஷாங்காய் பட்டணம்தான் என்று கோபோர்த் தம்பதியினருக்கு கூறப்பட்டது. வெட்கத்துக்குரிய காரியம் என்னவெனில் இம்மாதிரியான அபினிக்கூடங்கள், விலை மாதர்களின் விடுதிகள் பலவும் சர்வ தேசத்தினர் குடியிருக்கும் பகுதிகளில் அமைந்திருந்ததேயாகும்.

அற்பமான ஆரம்பத்தை யார் அசட்டை பண்ணுவான்?

கோபோர்த் தம்பதியினரின் பணித்தளத்தின் தலைமையிடம் செஃபூ என்ற நகரில் அமைக்கப்பட்டது. அங்கு ஒரு வாடகை வீட்டில் அவர்கள் முதலாவதாக குடியேறினர். தனது முதல் வேலையாக கோபோர்த் தனக்கு சீன மொழியை கற்றுத்தர ஒரு ஆசிரியரை நியமித்துக் கொண்டார். ஒரு நாள் அவர்கள் உணவருந்திக்கொண்டிருக்கையில் வெளியே கூச்சல் அதிகமாகக் கேட்டது. அதின் காரணத்தை அறியும்படியாக என்னவென்று வெளியே போய் பார்த்தபொழுது அவர்களுடைய படுக்கை அறை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அது கூரையிடப்பட்ட பகுதியாதலால் தீ வெகு விரைவில் பரவியது. கோபோர்த் எரிந்து கொண்டிருந்த தனது அறைக்குச் சென்று தனது வேதாகமத்தையும், பணப்பையையும் காப்பாற்ற முயற்சித்தார். ஆனால், பணப்பையை அவரது மனைவி அதற்கு முன்னரே எடுத்துச் சென்று வெளியில் நின்று கொண்டிருந்த சமயம் திருட்டு சீனர்கள் அந்தப் பணப்பையை தட்டிப் பறித்துச் சென்றுவிட்டனர். அந்த தீ விபத்தில் அவர்களுடைய திருமண வெகுமதிகள் பலவும், அபூர்வமான குடும்ப புகைப்படங்கள் தொகுப்புகளும் எரிந்து போய்விட்டன. "அவை யாவும் வெறும் பொருட்கள்தானே" என்று பொருட்களை இழந்து துயரத்தில் நின்று கொண்டிருந்த தனது மனைவியிடம் கோபோர்த் கூறி அவர்களை ஆறுதல்படுத்தினார்.

கோபோர்த் தம்பதியினர் மூன்று வாரங்களில் தங்களது புதிய இல்லத்துக்கு குடிபோனார்கள். இச்சமயத்தில் யோனத்தான் கோபோர்த் தனது மனைவிக்கு ஆண்டவருக்கு கொடுப்பதை குறித்து போதித்தார். அவர்கள் தங்கள் வருவாயில் ஏற்கெனவே தசமபாகம் கொடுத்து வந்தனர். ஆனால், கோபோர்த் அது போதாது எனக்கூறி ஐந்தில் ஒரு பாகம் கொடுக்கத் தீர்மானித்தார். நாளடைவில் அது அதிகமாகி தங்களுடைய அன்றாட தேவைக்குப் போக மீதிப்பணம் அனைத்தையும் அவர்கள் தேவனுக்கு மகிழ்ச்சியோடு கொடுத்தார்கள். கோபோர்த் ஒவ்வொரு ஓய்வு நாள் காலை ஆராதனையிலும் அங்குள்ள சீனர்களின் தேவாலயத்தில்

பங்கு கொள்ளுவதை வழக்கமாக கொண்டார். ஏனெனில் அப்பொழுதுதான் கடினமான சீன மொழியின் ஓசைகளையும், உச்சரிப்பில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகளையும் கற்றுக்கொள்ள உதவும் என்று அவர் எண்ணினார்.

சங்கை ஆர்தர் ஸ்மித் அக்காலச் சீன தேவ ஊழியர்களில் பெயர் பெற்றவராக விளங்கினார். அவர் 1888 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கோபோர்த்துக்கு அவருடைய பணித்தளமாகிய வட ஹோனான் மாநிலத்தை சுற்றிக்காட்ட அழைத்துச் சென்றார். அது மிகவும் செழிப்பான பகுதி. ஏராளமான ஊர்களைக் கொண்டது. மேற்குப் பகுதியில் அழகிய ஷான்சி மலைகள் இருந்தன. இப்பகுதியில்தான், தான் தேவ ஊழியம் செய்ய தனக்கு ஆண்டவர் அருள்புரிய வேண்டுமென கோபோர்த் வேண்டிக் கொண்டார். அவர் அப்படி எண்ணிய நாளின் காலை வேளையில் தேவன் "மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல், பூமியை நனைத்து முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்தில் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியம் ஆகும்படி வாய்க்கும்" (ஏசா 55 : 10, 11) என்ற வாக்குத்தத்தம் கிடைத்தது. கோபோர்த் அந்த தேவ வாக்கில் அதிகமான உற்சாகம் கொண்டார். அந்த தேவ வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோபோர்த் கர்த்தரிடம் ஊக்கமாக வேண்டிக்கொண்டார்.

வட ஹோனானுக்கு அருகிலுள்ளது பங்ச்வான் என்ற ஊர். அது ஆற்றங்கரையிலிருந்து ஏறத்தாழ ஒரு மைலுக்கு அப்பாலிருந்தது. மக்கள் நெருக்கம் நிரம்பிய பகுதியிலிருந்த இந்த ஊர் பயிர்த் தொழிலில் சிறந்து விளங்கியது. இவ்வூரில் தான் கோபோர்த் தம்பதியினர் தங்கியிருந்து தேவனுடைய மிஷனரிப்பணியை தொடங்கலாயினர். அவர்கட்கு வசதியான ஒரு நல்ல வீடு கிடைத்தபடியால் செஃபூ நகரிலிருந்து வந்து இந்த ஊரில் குடியேறினர்.

இந்தச் சமயம் "சீனா இன்லாண்ட்" மிஷனரி ஸ்தாபனத்தை தோற்றுவித்த பரிசுத்தவானான ஹட்சன் டெயிலரிடமிருந்து கோபோர்த்துக்கு ஒரு கடிதம் வந்து கிடைத்தது. அந்த சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த கடிதத்தில் ஹட்சன் டெயிலர் இவ்வாறு

எழுதியிருந்தார். "நாங்கள் ஒரு பெரிய மிஷனரி இயக்கமாக ஹோனான் மாகாணத்துக்குள் சுவிசேஷத்துடன் பிரவேசிக்க கடந்த 10 ஆண்டு காலமாக பிரயாசப்பட்டு இப்பொழுதுதான் சிறிய வெற்றி கிட்டியுள்ளது. நீங்கள் அந்த மாநிலத்துக்குள் சுவிசேஷத்துடன் செல்லுவதானால் உங்களுடைய முழங்கால்களிலேயே நகருங்கள் (ஜெபத்துடன் முன்னேறுங்கள்)"

சீன மொழியை கற்றுக்கொள்ளுவது கோபோர்த்துக்கு மிகவும் கடினமாக இருந்தது. அந்த மொழியை கற்பது அவருக்கு அத்தனை இலகுவாக இருக்கவில்லை. சீன மக்கள் தங்கள் சீன மொழியிலேயே தங்களுடன் பேசுவதை கேட்க விரும்பினர். கோபோர்த் பேசிய சீன மொழி அவர்களுக்கு விளங்கவில்லை. இதனால் அவர் மிகவும் மனமடிந்து போனார். ஒரு நாள் தேவாலயத்துக்கு செல்லும் முன்னால் அவர் தனது மனைவியிடம் "தேவன் சீன மொழி விசயத்தில் எனக்கு ஒரு அற்புதம் செய்யாவிடில், நான் ஒரு தோல்வியடைந்த மிஷனரியாகத்தான் இருப்பேன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஆனால், தேவனுடைய அற்புதம் அன்று தேவாலயத்தில் நிகழ்ந்தது. கோபோர்த் தனது வேதாகமத்தைக் கையில் எடுத்து சபையினருக்கு பிரசங்கிக்கும்படியாக எழுந்து நின்றார். சீன மொழி வார்த்தைகள் அவரது வாயிலிருந்து தெளிவாகவும் சரளமாகவும் வெளிவந்தன. தனது எண்ணங்களை அவர் சரியான பதங்கள் மூலமாக மக்களுக்கு வெளிப்படுத்த முடிந்தது. மெய்யாகவே தேவன் தமது தாசனுக்கு அற்புதம் செய்துவிட்டார். கோபோர்த் பேசி முடிந்ததும் அடுத்து சங்கை டோனால்ட் பிரசங்கிக்க வேண்டும். ஆனால், அன்று மக்கள் கோபோர்த்தையே தொடர்ந்து பேச விரும்பிக் கேட்டுக்கொண்டனர். வீடு திரும்பிய கோபோர்த் தனது மனைவியிடம் மட்டற்ற மகிழ்ச்சி பொங்க "சீன மொழிச்சிக்கலின் முதுகெலும்பு உடைந்துவிட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கூறினார். இந்த அற்புதம் ஜெபத்திற்கு கிடைத்த ஒரு பதில் என்பதை இரண்டு மாதங்களுக்கு பின்னர் கனடாவிலிருந்து அவருக்கு வந்த ஒரு கடிதம் சுட்டிக்காண்பிப்பதாக இருந்தது.

ஒரு இரவு உணவு வேளைக்குப் பின்னர் நாக்ஸ் கல்லூரியின் (டொராண்டோ, கனடா) ஆவிக்குரிய மாணவர்கள் சிலர் ஜெபிப்பதற்காக ஓர் அறையில் கூடினர். அன்று அவர்கள், யோனத்தான்

கோபோர்த்துக்காகவே ஜெபித்துக் கொண்டிருந்தனர். ஆண்டவருடைய பிரசன்னமும், வல்லமையும் அக்கூட்டத்தில் தெளிவாக இருந்தன. கூட்டத்திலிருந்தவர்கள் அனைவருமே அன்று ஆண்டவர் கோபோர்த்துக்கு ஏதாகிலும் நன்மை செய்திருப்பார் என்று முழு நிச்சயமாக நம்பினார்கள் என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தது. கோபோர்த் உடனடியாக தன் நாள் குறிப்பு புத்தகத்தை (டையரி) எடுத்துப் பார்க்கையில் தனக்கு தேவாலயத்தில் ஏற்பட்ட சீன மொழி அறிவின் அற்புதமும் நாக்ஸ் கல்லூரியில் மாணவர்கள் ஜெபித்த நாளும் ஒன்றாகவே இருக்கக் கண்டு தன் அன்பின் கர்த்தரைத் துதித்தார்.

(அடுத்த இதழில் முற்றுப்பெறும்)

உங்கள் அன்பான ஜெபம் தேவை

கடந்த இதழில் இமயமலைகளிலுள்ள பித்தோர்கார் பட்டணத்திலுள்ள பெண்கள் கல்லூரிக்கு இந்தி மொழி புதிய ஏற்பாடுகள் மற்றும் சுவிசேஷ பிரதிகள் அனுப்பப்பட்டிருப்பதாக நான் குறிப்பிட்டிருந்தேன். பித்தோர்கார் பட்டணத்துக்கு வேதாகம சங்கமம் இருக்கும் பெங்களூரிலிருந்து லாரி போக்குவரத்து வசதி இல்லாததால் இந்தி மொழி புதிய ஏற்பாடுகள் அனுப்ப இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இமயமலைகளின் அடிவார பட்டணம் ஹல்த்வானி வரை லாரி போக்குவரத்து வசதி உள்ளது. அங்கிருந்து 225 கி. மீ. தொலைவிலுள்ள பித்தோர்கார் பட்டணத்துக்கு லாரி வசதி இல்லை. யாராவது ஒருவர் அதை ஹல்த்வானியில் டெலிவரி எடுத்து மலை உச்சிக்கு பேருந்து மூலமாக கொண்டு செல்ல வேண்டும். இந்தி மொழி கைப்பிரதிகளும் தயாராக உள்ளன. இவைகளை எப்படியாவது மலைக்கு கொண்டு செல்ல வழிகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். கர்த்தர் இது விசயத்தில் நமக்கு ஒத்தாசை செய்து தேவனுடைய பிரசுரங்கள் விரைவில் பிள்ளைகளின் கரங்களுக்கு கிடைக்க நீங்கள் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத் 20 : 3)

"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களை காத்துக்கொள்வீர்களாக" (1 யோ 5 : 21)

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் பிரியமானவர்களே,

"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல நான் உங்களைத் தேற்றுவேன்" என்று திருவுளம் பற்றிய நமது அருமை இரட்சகர் இயேசுவின் பரிசுத்தமும், இனிமையுமான நாமத்தில் நான் உங்களை வாழ்த்துகின்றேன்.

2001 ஆம் ஆண்டின் முதல் தேவ எக்காள இதழையும் உங்கள் அன்பின் கரங்களில் தந்து மகிழும் சிலாக்கியம் தந்த என் அருமை நேசருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன்.

ஆண்டுதோறும் வழக்கமாக நான் தேவகிருபையால் மேற்கொள்ளும் எனது உபவாச ஜெப நாட்களில் இந்த தலையங்க செய்தியை உங்களுக்கு எழுதலானேன். சரீர பெலவீனம் காரணமாக இந்த ஆண்டில் உபவாசம் எடுப்பதை குறித்து நான் அதிகமாக ஆரம்பத்தில் யோசித்ததுண்டு. எனினும், உபவாசத்தின் மூலமாக அடையக்கூடிய அனந்தமான பரலோக ஆசீர்வாதங்களை எந்த ஒரு சூழ்நிலையிலும் இழந்து போகக்கூடாது என்பதை மனதில்கொண்டு உபவாசம் எடுப்பதற்கு முன்னரே தேவன் எனக்கு இந்தக் காரியத்தில் உதவி செய்யும்படியாகவும் சாத்தானால் எந்த ஒரு இடையூறும் உபவாச நாட்களில் வராதபடி என்னைக்காத்துக் கொள்ளவும் ஊக்கமாக ஜெபித்து வந்தேன்.

உபவாசத்தை ஆரம்பிப்பதற்கு 4 நாட்களுக்கு முன்னர் ஒரு அன்பான பரிசுத்த தேவ மகள் இந்த ஆண்டு உபவாசம் எடுத்தால் கட்டாயம் பழரச பானம் அருந்தி உபவாசம் இருக்கும்படியும் இல்லையேல் சரீரத்தில் பலமான எதிர்விளைவுகளும், சுயநினைவு இழக்கக்கூடிய மயக்கமும் ஏற்படலாம் என்றும், நான் தனிமையாக இருப்பதால் இன்னும் எனது நிலைமை மோசமாகும் என்றும் தேவ

அன்பின் மட்டற்ற பாசத்தோடு எழுதி நான் இன்னும் நீண்ட நாட்கள் ஜீவித்திருந்து கர்த்தர் கொடுக்கும் பரலோக செய்திகளை தேவ எக்காளத்தில் எழுதிவரும்படியாகவும் எழுதியிருந்தார்கள். அந்தக்கடிதத்தின் வரிகளை நம் பரம தகப்பனுக்கு தெரியப்படுத்தினேன். அப்பொழுது எனது உள்ளத்தில் கடலின் பெரிய அலைகளை நான் பார்க்காமல் அந்த அலைகளுக்கு மேலாக கடலில் நடந்து வரும் அருமை இரட்சகரின் பொன் முகம் நோக்கி உபவாசத்தை ஆரம்பிக்க தேவ ஏவுதல் பெற்றேன். கர்த்தருக்கு துதி உண்டாவதாக.

உபவாச நாட்களுக்கு நான் என்னை ஆயத்தப்படுத்தினபோது கரத்தில் எடுக்கப் போகும் முழு உபவாச நாட்களிலும் செய்தி தாட்களைப் படிப்பதையும், செய்திகளை ரேடியோ மூலம் கேட்பதையும் முழுமையாக வெறுத்து தள்ளும்படியாக தேவ ஆவியானவர் என் உள்ளத்தில் உணர்த்தினார். பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலின்படி முழுமையான 2 மாத காலம் நான் எந்த ஒரு செய்தி தாளையும் வாசிக்கவே இல்லை. உலகப்பிரகாரமான சஞ்சிகைகளும் கவர் பிரிக்கப்படாமல் ஒரு மூலையில் வைக்கப்பட்டது. ரேடியோவை செய்திகளுக்காக திருப்பவும் இல்லை. உபவாசத்தின் கூடுதலான நேரம் ஜெபத்திலும், வேதவசன தியானத்திலும் மாத்திரமே செலவிடப்படும்படியாக பார்த்துக் கொள்ள ஆவியானவர் என்னை தூண்டினார்.

கர்த்தருடைய அளவற்ற கிருபையாலும், தேவப்பிள்ளைகளாகிய உங்களது உருக்கமான ஜெபங்களாலும் எனது உபவாச ஜெப நாட்கள் கர்த்தருக்கு மகிமையாக முடிவுற்றன. அவ்வப்போது சரீர பெலவீனங்கள் எழுந்தபோதிலும் கர்த்தருடைய பாதுகாவலின் கரம் என்னைத் தாங்கி அரவணைத்துக் கொண்டது.

அந்த நாட்களில் தேவனுடைய வேதவசனங்களை அதிகமாக வாசித்து தியானிக்க தேவ கிருபை பெற்றேன். ஒரே சமயத்தில் 25 அதிகாரங்களைக்கூட வாசித்து மகிழ்ந்தேன். தினமும் பத்து அதிகாரங்களை வேதத்திலிருந்து நான் வாசித்திருப்பேன். கர்த்தருக்கே மகிமை. உபவாச நாட்களில் சங் 139 : 23, 24 ன்படி என்னையே அதிகமாக ஆராய்ந்தேன். நான் இயேசுவைப்போல மாற்றம் அடைவதே தேவன் என்னில் எதிர்பார்க்கும் காரியம் என்பதை (ரோ 8 : 29, கலா 4 : 19, 1 யோ 3 : 2) திட்டமாக கண்டுணர்ந்தேன். என்னை சமூலமாக தேவ சமூகத்தில் தாழ்த்தினேன்.

தேவ எக்காளம் பத்திரிக்கை வாசகர்கள் அனைவரின் குடும்பங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைக்கவும், அவர்கள் எல்லாரும் தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணிய பேரின்ப வாசஸ்தலங்களை சுதந்தரித்துக் கொள்ளும் பாக்கியத்தை அடையவும் மன்றாடி வந்தேன்.

உலகத்தின் பாவ அசுசிகளால் தங்களை கறைப்படுத்தி தேவன் தங்களுக்கு ஆயத்தம் செய்து வைத்துள்ள நித்தியானந்த மோட்ச மகிமைகளை (மத் 25 : 34) எந்த ஒரு நிலையிலும் இழந்து போய்விடக்கூடாது என்ற காரணத்திற்காக 3, 4 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தேவ மக்கள் சிலர் எகிப்து மற்றும் யோர்தான் வனாந்திரங்களுக்கு ஓடிச்சென்று பகலின் சுட்டெரிக்கும் வெயிலையும் (110 டிகிரி) இரத்தத்தை உறைய வைக்கும் இரவின் குளிரையும் தாங்கி காய், கனி, கிழங்குகளை உண்டு ஏகாந்தமாக வாழ்ந்து பரலோகம் சென்ற வரலாறுகள் உள்ளன.

அது அப்படியிருக்க நாம் எந்த ஒரு உணர்வும், விழிப்பும், பயமும், நடுக்கமும் இல்லாமல் நமக்கு முன்னாலுள்ள முடிவற்ற யுகாயுகங்களை குறித்த கவலை இல்லாமல் மிகவும் துணிச்சலாக நமக்கு முன்னாலுள்ள நித்தியத்தோடு விளையாடி வருகின்றோம். நமது வாழ்விலே பரிசுத்த மாற்றங்கள் கிடையாது. பக்தி பரிசுத்தத்தில் வளரவேண்டும் என்ற மெய் தாகம் கிடையாது. கர்த்தர் தான் நமக்கு இரங்கவேண்டும்.

இந்தச்சமயம் தேவ பிள்ளைகளாகிய உங்களுக்கு நான் மிகுந்த தேவ அன்போடு சொல்லக்கூடிய ஒரு மகத்தான தேவ ஆலோசனை யாதெனில் நீங்களும் ஒழுங்காக உபவாசித்து ஜெபிக்க வேண்டும் என்பதுதான். உபவாசத்தை தனது கரத்தில் எடுக்கும் எந்த ஒரு கிறிஸ்தவனும் மெய்யான தேவ பிள்ளையாக இருக்க முடியும். சரீரம் ஒடுக்கப்பட வேண்டும். சரீரம் நம்மை வருந்திக்கேட்கும் மாம்ச ஆசை இச்சைகள் பலிபீடத்தில் தகனிக்கப்பட்டாக வேண்டும். உபவாசித்து ஜெபிக்காத கிறிஸ்தவன் தேவனுடைய பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க இயலாது என்று நாம் திட்டமாக கூறலாம். காரணம், மாம்சத்தின் கிரியைகளை சுட்டெரிக்கும் வல்லமை உபவாசத்துக்குத் தான் உண்டு.

புதிதாக நான் வாங்கியிருந்த எனது வேதாகமத்தை ஆரம்பத்திலிருந்து வாசிக்கத் தொடங்கி உபவாச நாட்களின் முடிவில்

தேவ கிருபையால் ஐந்நூறு அதிகாரங்களை ஆசை ஆவலோடு வாசித்து முடித்திருந்தேன். அந்த அதிகாரங்களை வாசிக்கையில் சர்வ வல்ல தேவன் தமது ஜனமாகிய இஸ்ரவேல் மக்களை எத்தனையாக நேசித்து, அவர்கள் எகிப்திலே ஆளோட்டிகளினிமித்தம் படும் சொல்லொண்ணா பாடுகளையும், துயரங்களையும் கண்ணோக்கிப் பார்த்து அவர்களை பலத்த கையோடும், ஓங்கிய புயத்தோடும் எகிப்திலிருந்து புறப்படச் செய்து 40 ஆண்டுகள் அவர்களை வனாந்திரத்தில் அதிசயமாக வழி நடத்தி கானான் தேசத்துக்கு அழைத்துச் சென்றார். தேவதூதர்கள் புசிக்கும் அப்பமாகிய மன்னாவை அவர்களுக்கு புசிக்கக் கொடுத்து, இறைச்சி கேட்ட அவர்களுக்கு இறைச்சியை கொடுத்தார். வனாந்திரத்திலே கன்மலைகளை பிளந்து, மகாஆழங்களிலிருந்து தண்ணீரை அவர்களுக்கு குடிக்கக் கொடுத்தார்.

அவர்களுடைய வஸ்திரங்கள் பழமையாய் போகாமலும், கால்களிலிருந்த பாதரட்சைகள் தேய்ந்து போகாமலும், கால்கள் வீங்காமலும் இருக்க தேவன் கிருபை செய்தார். பகலிலே மேக ஸ்தம்பமும் இரவில் அக்கினி ஸ்தம்பமும் அவர்களை வழிநடத்திக்கொண்டு சென்றது. வனாந்திரத்தில் இஸ்ரவேலர் பாளையமிட்டு தங்கியிருந்த எல்லா இடங்களிலும் தேவனுடைய ஆசரிப்புக் கூடாரத்தை கர்த்தருடைய மகிமை என்ற மேகம் எல்லாருடைய கண்களுக்கும் முன்பாக பிரத்தியட்சமாக மூடியிருந்தது இரவில் அது அக்கினியாக ஜொலித்துக் கொண்டிருந்தது.

கர்த்தருடைய தாசனாகிய மோசே கூறினது போல தேவன், இஸ்ரவேல் மக்களை ஒரு தகப்பன் தனது பிள்ளையை தனது தோளின்மேல் வைத்து சுமந்து கொண்டு போவது போல (உபா 1 : 31) 40 ஆண்டு காலம் தூக்கிச் சுமந்து பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

ஆனால், வணங்கா கழுத்துள்ள இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய அளவற்ற அன்பையும், வல்லமையையும், தேவனுடைய அதிசய வழிநடத்துதலையும் சற்றுகூட கண்டு கொள்ளாமல் தாங்கள் பயணம் செய்த 40 வருடங்களும் மோளேகினுடைய கூடாரத்தையும், தங்கள் பாகால் தேவனாகிய ரெம்பான் என்ற நட்சத்திர சொரூபத்தையும் சுமந்துகொண்டு சென்றார்கள் (அப் 7 : 43) எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதல் கானான் வந்து சேருமட்டும் கர்த்தருக்கு விரோதமாக அந்த

மக்கள் கலகம் செய்ததாக மோசே கூறினார் (உபா 9 : 7) இஸ்ரவேல் மக்களின் வணங்கா கழுத்தையும், வழுவிப்போகின்ற இருதயத்தையும் கண்டு கோபம் கொண்ட தேவன் அவர்களை தமது நித்திய இளைப்பாறுதலை சுதந்தரிக்க அனுமதிக்கவில்லை என்றும் நாம் பார்க்கலாம் (சங் 95 : 10, 11)

மேற்கண்ட இஸ்ரவேலரை நாம் நினைக்கும்போது தேவனுக்கு அவர்கள் செய்த கொடிய துரோகத்தை நினைத்து நமது நெஞ்சம் குமுறுகின்றது. நாமே அந்த மக்களை கல்லெறிந்து கொல்லலாமா என்ற தேவ வைராக்கியம் நமக்குள் எழும்புகிறது. ஆனால் அந்தோ, அந்த பொல்லாத இஸ்ரவேலர் நாமேதான் என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. வணங்கா கழுத்துள்ள, சற்றும் நன்றியற்ற அந்த இஸ்ரவேலர் சென்ற அதே படகில்தான் நாமும் இன்று பயணம் செய்து கொண்டிருக்கின்றோம். "நீயே அந்த மனுஷன்" (2 சாமு 12 : 7) என்று நாத்தான் தீர்க்கன் தாவீது ராஜாவைப் பார்த்து கூறினது போல நமது பாழுலக வனாந்திர யாத்திரையில் தேவன் அருவருக்கும் பற்பல விக்கிரகங்களை சுமந்துகொண்டு செல்லும் பொல்லாத இஸ்ரவேலர் நாமேதான். தேவனை நேசிப்பதைவிட நாம் அதிகமாக நேசிக்கும் யாவும் முதல்தரமான விக்கிரகங்கள் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய ஸ்தானத்தை பிடித்து நிற்கும் யாவும் விக்கிரகங்கள் ஆகும். அப்படிப்பட்ட சில விக்கிரகங்களை குறித்து உங்களுக்கு ஆசீர்வாதமாகவும், கர்த்தருடைய நாமத்துக்கு மகிமையாகவும் இங்கு எழுத விரும்புகின்றேன்.

ஆகார மோகம் என்ற விக்கிரகம்.

நமது முற்பிதாவாகிய யாக்கோபு சமைத்துக் கொண்டிருந்த சிவப்பான பயற்றங்கூழை ஏசா கண்டபோது அந்தக்கூழில் மதிமயங்கி அந்த அற்ப கூழுக்காக தனது விலையேறப்பெற்ற அருமையான சேஷ்ட்ட புத்திர பாகத்தை அலட்சியம்பண்ணி அதை விற்றுப்போட்டது போல அநேக கிறிஸ்தவ மக்கள் தங்கள் நித்திய ஜீவனை அழிந்துபோகிற ஆகாரங்களுக்காக பண்டமாற்று செய்து கொண்டிருக்கின்றனர்.

தேவனுடைய வார்த்தை கூறுவதைப் போல அந்த மக்களுக்கு அவர்களுடைய வயிறுதான் தேவன் (பிலி 3 : 19). அநேக தேவ மக்கள் ஆகாரத்துக்கு அடிமையாகக்கிடக்கின்றார்கள். தேவ ஊழியரும் இதில்

அடங்குவர். அந்த ஆகார மோகத்தின் காரணமாகவே அவர்கள் தங்கள் சபைகளில் உபவாசம் குறித்து அதிகமாக பிரசங்கிப்பதில்லை. அவர்களுடைய சபைகளின் உபவாசக் கூட்டங்கள் எல்லாம் பகலின் சில மணி நேர உபவாசமாகவே இருக்கும். அப்படி தப்பி தவறி முழு நேர உபவாசம் போட்டாலும் கூட்ட முடிவில் பிரியாணி சாப்பாட்டைப் போட்டு பகலில் இருந்த உபவாசத்தின் மேன்மையை சாத்தான் குலைத்துப்போடுவான். எல்லா தேவ ஊழியர்களையும் நான் இங்கு குறிப்பிடவில்லை.

கன்வென்ஷன் பிரசங்கிமார்கள் பலர் உபவாசம் இருந்து ஜெபித்து சபையினருக்கு தேவச்செய்தி கொடுக்காமல் தங்கள் மனதும், மாம்சமும் விரும்பும் சிக்கன் பிரியாணி, சில்லி சிக்கன், வான்கோழி பிரியாணி என்று தாங்கள் செல்லும் சபைகளில் துணிந்து கேட்டு வாங்கிப் புசித்து தேவச் செய்திகளைக் கொடுக்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் சபை மக்கள் எப்படி தேவ ஆசீர்வாதம் பெற முடியும்? திருச்சபையில் உயிர்மீட்சி எப்படி ஏற்பட முடியும்?

"வயிற்றை நினைத்தவன் வாழமாட்டான்" என்று நமது தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. உண்மைதான், வயிற்றை நினைத்தவன் இம்மையிலும், மறுமையிலும் வாழ முடியாது. ஒரு வேளை உணவு, ஒரு வேளை காப்பியை கூட விட்டுக்கொடுக்க மனமற்றவர்களாக கிறிஸ்தவ மக்கள் இருக்கின்றனர். சரீரத்தில் சர்க்கரை நோயா, இரத்தக் கொதிப்பு நோயா எதுவாயிருந்தாலும் பரவாயில்லை மனம் போல ஆகாரம் புசிக்கும் மக்கள் உள்ளனர். "பகல் முழுவதும், கண்ணில்படும் அதை இதை நான் சாப்பிட்டுக்கொண்டே இருக்கின்றேன்" என்று ஒரு அன்பான சகோதரி எனக்கு எழுதியிருந்தார்கள். அநேகருடைய காரியமும் அதுவேதான்.

பாவியாகிய நானும் கூட வெகு காலமாக இந்த ஆகார மோகம் என்ற சாத்தானுக்கு அடிமையாக இருந்ததுண்டு. இறைச்சி, மீன், கருவாடு போன்றவை எனக்கு வெகு பிரியமாக இருந்தன. ஆனால், தேவன் இந்த உணவுகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க சங்கீதம் 45 : 10, 11 வசனங்கள் மூலமாக அடிக்கடி என்னுடன் பேசி வந்தார். தேவனுடைய விருப்பத்துக்கு செவிசாய்க்க மனமற்று காலம் கடத்தினேன். நான் எனது மனது களிக்க அதிகமாக ஆகாரம் புசிப்பது போன்ற கலியாணங்கள், கொழுமையான போஜன பந்திகளை எல்லாம் தேவன் சொப்பனங்களில்

எனக்கு காண்பித்தார். "நீ போஜன பிரியனாக இருந்தால் உன் தொண்டையிலே கத்தியை வை" (நீதி 23 : 2) என்ற தேவ வார்த்தைதான் நான் ஆகாரம் புசித்து திருப்தியடைந்த ஒவ்வொரு சமயமும் எனது காதுகளில் தொனிக்கும். கடைசியில், தேவனுடைய கிருபையால் எனது மனதுக்கு இன்பமளித்த உணவுகளை கர்த்தருக்கென்று மனப்பூர்வமாக விட்டுக்கொடுத்தேன். இறைச்சி, மீன், கருவாடு, முட்டை போன்றவற்றைப் புசிப்பதை நான் தவறு என்று இங்கு சொல்ல வரவில்லை. அந்த ஆகார வகைகள் எனக்கு விக்கிரகமாக காணப்பட்டதால் அதை உடைத்து நொறுக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.

ஒரு பெரிய இடத்து கிறிஸ்தவ கலியாணம். பலவிதமான உணவு வகைகள் பந்தியில் பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தன. ஒரு கிறிஸ்தவ மனிதர் "இன்று ஒரு பிடி பிடித்துவிட வேண்டியதுதான்" என்ற குரலோடு போஜனபந்தி அறைக்குள் நுழைந்து செல்லுகின்றார். ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்களையும், தேவ ஊழியர்களையும் இன்று இந்த பெருந்தீனி என்ற ராட்சதன் தனது குகையில் அடைத்து வைத்து குகை வாயிலை பெரிய பாராங்கல்லை வைத்து மூடியிருக்கின்றான். இவர்கள் தங்களது ஆகார மோகத்திலிருந்து தேவபெலத்தால் தங்களை விடுவித்துக் கொள்ளாத பட்சத்தில் முடிவில் நஷ்டப்பட்ட பாவிகளாகவே தங்களை காண்பார்கள் (லூக் 21 : 34-36). தேவ ஊழியர்களுடைய (எல்லாரும் அல்ல) சமயலறையின் குளிர்பதன பெட்டிகளைப் போய்ப் பார்த்தால் அங்குள்ள உணவுப் பொருட்களின் மூலமாக அவர்கள் எத்தனையான இருண்ட குகையில் சாத்தான் அவர்களை அடைத்து வைத்திருக்கின்றான் என்பது தெரிய வரும். தனது திருமணத்தை எதிர்நோக்கி நின்ற ஒரு வசதி நிறைந்த சபையின் வாலிப தேவ ஊழியன் முதற்காரியமாக தனது சமையலறைக்கு பயன்படக்கூடிய குளிர்பதன பெட்டியை வாங்கி வைத்திருப்பதை நான் கண்டேன்.

வயதாகி, பற்கள் எல்லாம் விழுந்த நிலையிலும் கிறிஸ்தவ கிழவர்கள் இறைச்சிக்கு ஆசைப்பட்டு குடும்பத்தில் தங்கள் பிள்ளைகளிடம் கேட்க, அவர்களும் இறைச்சி எடுத்து அதை பொடிதாக அரைத்து அதை கட்லட்டுகள் செய்து கொடுக்க ஆசையோடு சாப்பிடுகின்றனர். ஆ, மனிதனின் ஆகார மோகம் அவனது புதை குழி வரைக்கும் நீண்டு செல்லுகின்றது. மனிதர் விரும்பி புசிக்கும் ஆகாரங்களை அவர்கள் செத்த பின்னர் சமைத்து எடுத்து அவற்றை

செத்த மனிதரின் சவக்குழியின் மேலே வாழை இலைபோட்டு புறமதஸ்தர் படைப்பதை நாம் காண்கின்றோம். காரணம், அந்த ஆகார மோகம் கொண்ட செத்த மனிதரின் ஆவி கட்டாயம் வந்து அதை சாப்பிடும் என்பது அவர்களின் முழுமையான நம்பிக்கை.

பெருந்தீனி, ஆகார மோகம் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவனை தேவனுக்கும், சமுதாயத்துக்கும் ஒன்றுக்கும் உதவாமல் இந்த பெருந்தீனி மற்றும் ஆகார மோகம் செய்துவிடும். பெருந்தீனிக்காரர்கள் பூர்வ நாட்களில் கல்லெறிந்து கொல்லப்பட்டதாக தேவனுடைய வேதத்தில் நாம் பார்க்கின்றோம் (உபா 21 : 20) கொலை, விபச்சாரம் போன்ற கொடிய பாவங்களுக்கு சரிசமமாக பெருந்தீனி தேவனுடைய பார்வையில் காணப்படுகின்றது. பெருந்தீனிக்காரனோடு நீ சேராதே. சேர்ந்தால், அந்த கொடிய தொற்று நோய் உன்னையும் பற்றிப்பிடித்து அதின் மூலம் நீயும் அழிந்து போவாய் என்று தேவன் நம்மை எச்சரிக்கின்றார் (நீதி 23 : 20)

பெருந்தீனி இருக்கும் இடத்தில் விபச்சாரம், வேசித்தனமும் இருக்கும். புகை இருக்கும் இடத்தில் நெருப்பு இருப்பதைப் போன்றும், ஏரி, குளம் உள்ள இடத்தில் நீர்ப்பறவைகள் இருப்பது போலவும் பெருந்தீனி இருக்கும் இடத்தில் சிற்றின்ப பாவமும் இருக்கும். சாலொமோன் ராஜா எப்படியாக ஆகாரம் சாப்பிட்டார் என்ற அவரது ஆகாரங்களின் நீண்ட பட்டியல் நமக்கு தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது (1 இரா 4 : 22) அந்த பெருந்தீனி அவரை 1000 பெண்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய காமவிகாரத்துக்கு வழிநடத்திச் சென்றது (1 நாளா 11 : 3) அத்துடன் தனது ஜீவனுள்ள தேவனைவிட்டு அவரை பின்வாங்கவைத்து உலகத்தின் தலைசிறந்த ஞானவானும், தேவப்பிரியனுமான அவரை இழிவான கீழ்நிலைக்கு தலைகீழாக தள்ளிவிட்டது.

"நாம் சாப்பிடும் உணவை ஆகார மோகத்தோடு சாப்பிடாமல் நாம் உயிர் வாழ அவசியமான மருந்து என்ற உணர்வோடு அதை சாப்பிட வேண்டும். சாப்பிடும்போது மூக்குமுட்ட சாப்பிடாமல் மீண்டும் ஒரு உணவை சாப்பிடக்கூடிய இடத்தை வயிற்றில் கொடுத்து சாப்பிட வேண்டும்" என்ற காந்தி அடிகளின் வார்த்தைகளை நாம் என்றும் நினைவில் வைத்திருப்பது அவசியமாகும். "பிரபுக்கள் வெறிக்க

உண்ணாமல் பெலன்கொள்ள ஏற்ற வேளையில் உண்கிறவர் களுமாயிருக்கப்பட்ட தேசமே, நீ பாக்கியமுள்ளது" (பிர 10 : 17) என்ற தேவ வார்த்தையும் திரண்ட தேவ ஆசீர்வாதங்களுக்கு நேராக நம்மை வழிநடத்திச் செல்லும்.

இதை வாசிக்கும் தேவப்பிள்ளையே, உனது பரம கானான் யாத்திரையில் பெருந்தீனி, ஆகாரமோகம் போன்ற விக்கிரகங்கள் உன்னால் சுமந்து கொண்டு செல்லப்படுகின்றதா? கர்த்தர் அதை அருவருக்கின்றார். தேவனை நீ மெய்யாகவே நேசிப்பாயானால் அந்த விக்கிரகத்தை நீ உடைத்தே தீரவேண்டும்.

டி. வி. என்ற கொடிய விக்கிரகம்

இன்று முழு உலகத்தையும் பாவத்துக்குள் வழிநடத்தும் ஒரு பயங்கரமான சாதனம் தொலைக்காட்சியாகும். இதைப் போன்று உலகத்தை அழித்தது வேறு எதுவுமில்லை. இது மனிதனுடைய நாகரீகத்தையும், பாரம்பரியமான மேலான கலாச்சாரங்களையும், மேலான பண்புகளையும் அழித்து நாசமாக்கிவிட்டது. கிராமப்புறங்களிலே சிறுவரும், இளைஞரும் அந்தந்த பருவகாலங்களில் விளையாடும் பார்க்க பரவசமான அநேக விளையாட்டுகளை எல்லாம் அது ஒரு முடிவுக்கு கொண்டுவந்துவிட்டது.

முழு கிறிஸ்தவ உலகமும் இன்று அதின் மகுடி நாதத்துக்கு அடிபணிந்து கிடக்கின்றது. பரலோகத்துக்கு செல்ல தினமும் தங்களை ஆயத்தப்படுத்தி பரம கானான் தேசத்தின் பாக்கியங்களை ஒருவருக்கொருவர் பேசி சம்பாஷித்து களிகூர்ந்து மகிழவேண்டிய விருத்தாப்பிய கிறிஸ்தவ தம்பதியினர் ஜோடியாக சோபா அல்லது நாற்காலியில் அமர்ந்து நாள் முழுவதும் டி. வி. யை கண் இமைக்காமல் பார்த்து பொன் போன்ற காலங்களை பாழ்க்கடித்து வருகின்றனர். உலகப்பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற கிறிஸ்தவ மக்கள் பலருக்கும் டி. வி. தான் தஞ்சம். தனி ஜெபம், குடும்ப ஜெபம், வேதவசன தியானம் மற்றும் பக்திக்கடுத்த எந்த ஒரு காரியத்துக்கும் அவர்கள் வாழ்வில் இடமே கிடையாது.

அநேக மக்களை அங்கத்தினர்களாகக் கொண்ட கிறிஸ்தவ சபைகளின் குருவானவர்கள் தொலைக்காட்சி பெட்டிக்கு முன்னர்

மண்டியிட்டுக் கிடக்கின்றனர். சோதோமின் வாலிபரும், கிழவரும் லோத்துவின் வீட்டுக்கு வந்த இரண்டு தேவதூதர்களுடன் உடல் உறவு கொள்ள முண்டி அடித்து வந்தது போல (ஆதி 19 ; 4, 5) திருச்சபைகளில் வாலிப ஆயர்கள் மாத்திரமல்ல, கிழவர்களான ஆயர்களும் டி. வி. க்கு முன்பாக தேவ பயமில்லாமல் அமர்ந்து தேவன் அருவருக்கின்ற சினிமா, நாடகம், ஆபாசமான விளம்பரங்களைப் பார்த்து ஆனந்தித்து தங்கள் நேரங்களை பாழாக்குகின்றனர். சபையிலுள்ள வீடுகளை சந்தித்து கஷ்டம், கண்ணீர், வியாதி போன்ற பாடு வியாகுலங்களில் சிக்கியுள்ள மக்களுக்காக ஜெபிக்க இவர்கள் செல்லுவதில்லை. உலகப்பிரகாரமான உத்தியோகஸ்தர்களைப் போல தாங்களும் ஒரு உத்தியோகஸ்தர்தான் என்றும் சபையிலுள்ள கிறிஸ்தவ வீடுகளை சந்திப்பது தங்களது வேலையல்லவென்றும் பெருமையோடும், அகங்காரத்தோடும் பேசுகின்றனர். இந்த ஆயர்கள் டி. வி. பெட்டியிலிருந்தே எழுந்து நேரடியாக தேவாலயத்தில் ஆராதனை நடத்தவும், பிரசங்கம் பண்ணவும் கொஞ்சமும் ஜெப ஆயத்தம் இல்லாமல் செல்லுகின்றனர். ஆயர்கள்தான் அப்படி என்றால் பாஸ்ட்டர்கள் வீட்டில் டி. வி. கம்பம் பாபேல் கோபுரத்தைப் போல வானளாவ உயர்ந்து நிற்கின்றது. கர்த்தர்தான் கிறிஸ்தவ மக்களுக்கு இரங்கவேண்டும்.

சமீபத்தில் ஒரு கர்த்தருடைய பிள்ளை என்னைப்பார்த்து கண்ணீர் சொரிந்தார்கள். வீட்டிலே தனது மருமகள்கள் டி. வி. பார்ப்பதில் பைத்தியமாக இருப்பதாகவும், சமையலறைக்கே டி. வி. பெட்டியை சிமெண்ட் தரையில் இழுத்துச் சென்று அதின் அருகே உட்கார்ந்து சினிமா போன்ற காட்சிகளைப் பார்த்துக் கொண்டே காய்கறி வெட்டுவதும் சமையல் காரியங்களை கவனிப்பதாகவும் இருக்கின்றனர். ஜெபிப்பதற்கோ அல்லது தேவனைத் தேடுவதற்காகவோ ஒரு நிமிடம் கூட அவர்கள் செலவிடுவதில்லை என்று கூறினார்கள்.

வாலிபர், கிழவர்கள் காரியம்தான் அதுவென்றால் சிறுவருடைய காரியம் அதைவிட மோசம். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பிள்ளைகளை பேய்களுக்கு பலியிட்டதைப்போலவும், கர்த்தர் சொன்னது போல " நீ எனக்குப் பெற்ற உன் குமாரரையும், உன் குமாரத்திகளையும் எடுத்து அவர்களை அவைகளுக்கு பலியிட்டாய்" (எசே 16 : 20) என்ற தேவ வார்த்தைக்கு இணங்க இன்று அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் அருமை பிள்ளைகளை டி. வி. என்ற பேய்க்கு பலியிட்டிருக்கின்றார்கள்.

முதலாம் வகுப்பு படிக்கும் ஒரு கிறிஸ்தவ சின்ன பையன் இரண்டாம் வகுப்பு படிக்கும் ஒரு கிறிஸ்தவ சிறுமி வீட்டிற்குச் சென்றிருந்தான். சிறுமி வீட்டில் டி. வி. இருப்பதை கண்டதும் அதைப்போடும் படியாக சிறுவன் கூறவே அந்தப் பெண் குழந்தை டி. வி. இல் கார்ட்டூன் தொடரைப் போட்டிருக்கின்றாள். உடனே அவன் "எனக்கு சினிமா மட்டும்தான் பிடிக்கும், சினிமா போடு. எங்க மம்மி, டாடி எல்லாரும் வீட்டிலே சினிமாதான் பார்ப்போம்" என்றானாம். இந்தச் சிறுவன் வளர்ந்து பெரியவனாகும்போது இவனது காரியம் எப்படியிருக்கும் என்பதை நாம் நமக்குள்ளாகவே நன்கு நிதானித்துக் கொள்ளலாம்.

இன்று டி.வி. இல் மக்கள் தங்கள்அதிகமான நேரத்தை கிரிக்கெட் என்ற விளையாட்டைப் பார்ப்பதில் செலவிடுகின்றனர். சிறுவர்கள், பெண் மக்கள், வாலிபர், வயோதிகர் அனைவரும் இன்று இந்த விளையாட்டைப் பார்ப்பதில் அடிமைகளாகக் கிடக்கின்றனர். இந்த விளையாட்டைப் பார்த்து மாண்டோர் பலராவர். கிரிக்கெட்டில் தனது பாக்கிஸ்தான் நாடு, இந்திய தேசத்திடம் தோற்றுப்போனதை பாக்கிஸ்தான் நாட்டில் டி. வி. இல் பார்த்த ஒரு மனிதர் உடனே தனது கைத்துப்பாக்கியால் தன்னை சுட்டு மாய்த்துக்கொண்ட செய்தி தினசரிகளில் வெளிவந்தது. இரவில் வெகு நேரமாக கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்த ஒரு மகன் அடுத்து வந்த ஓரிரு மணி நேரத்துக்குள்ளாக மாரடைப்பால் சடுதியாக மரித்துப்போன துயரச் செய்தியை அந்த மகனின் பக்தியுள்ள கிறிஸ்தவ மாமி எனக்கு கண்ணீரோடு எழுதியிருந்தார்கள். தொலைக்காட்சி ஒரு உயிர்க்கொல்லி மாத்திரமல்ல அது மனிதனின் விலையேறப்பெற்ற ஆத்துமாவை நரக பாதாளத்தில் நித்தியமாகத் தள்ளக்கூடிய வலிமை கொண்டது.

தேவ ஜனமே, டி. வி. என்ற மோளேகு விக்கிரகத்தை பரம கானானுக்கு சுமந்து சென்று கொண்டிருக்கின்றாயா? மனந்திரும்பு. அந்த விக்கிரகத்தை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். அது உன்னுடைய வீட்டில் இருக்கக்கூடாது. அதற்கு முன்பாக செலவிடும் மணி நேரங்களை உனது பரம தகப்பனோடு ஜெபத்திலும், வேத வசன தியானத்திலும், கர்த்தரைத் துதிப்பதிலும் செலவிடு. மறக்க வேண்டாம். டி. வி. உனது உச்சித பட்டண யாத்திரையை நிச்சயமாக தடைசெய்யும் ஒரு கொடிய சாதனம்.

பண ஆசை என்ற விக்கிரகம்

நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படியாக அருமை இரட்சகரண்டை வந்த ஐசுவரியமுள்ள வாலிபன் அதைப் பெற்றுக் கொள்ளாமல் வெறுமனே துக்கத்துடன் திரும்பினான் *(மத் 19 : 22)* காரணம் அவனது விக்கிரகம் பண ஆசையாக இருந்தது.

இந்த பண ஆசை என்ற விக்கிரகம் இன்று கிறிஸ்தவ உலகத்தை முழுமையாக செங்கோலோச்சி ஆளுகை செய்து வருகின்றது. கிறிஸ்தவர்கள் அதிகமான பணத்தை சம்பாதிப்பதற்கு என்னவெல்லாமோ செப்படி வித்தை செய்து வருகின்றனர். ஒரு மதுபானக் கடையில் ஆண்டவருடைய படத்தை வைத்திருப்பதை நான் கண்டு அந்த மதுக்கடைக்குச் சென்று அந்தப்படத்தை எடுத்துவிடும்படியாகக் கூறினேன். அங்கிருந்த மனிதர் தான் அந்தக் கடையில் வேலைசெய்யும் வேலையாள் என்றும் அவருடைய கிறிஸ்தவ முதலாளி வெளி இடத்தில் இருப்பதாகவும் கூறினார். கிறிஸ்தவர்கள் சாராயக்கடை ஏலம் எடுத்து திரண்ட பணம் சம்பாதிக்கின்றனர். மக்களை அழிவுக்கு நேராக வழிநடத்தும் சினிமா தியேட்டர்கள் வைத்து பணம் ஈட்டுகின்றனர். கிறிஸ்தவ தனவந்தர்கள் லாட்டரிச் சீட்டுகளை மொத்தமாக வாங்கி விற்பனை செய்து பணம் ஈட்டுகின்றனர்.

"யேகோவா மளிகை கடை" "எல் ஷடாய் ஸ்டேஷனரி" "ஆண்டவர் ஸ்டோர்ஸ்" என்று போர்டு போட்டு கிறிஸ்தவ வியாபாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர். எல்லா கிறிஸ்தவ வியாபாரிகளையும் நான் இங்கு குறிப்பிடவில்லை. கர்த்தருக்கு பயந்து மிகுந்த உத்தமத்தோடு தொழிற் செய்யும் தேவ மக்களான கிறிஸ்தவ வர்த்தகர்கள் நம் மத்தியில் இருப்பதற்காக நாம் நம் தேவனுக்கு துதி செலுத்துவோம். அதே சமயம் கருப்பு ஆடுகளும் நமது பட்சமாக ஏராளம் இருக்கத்தான் செய்கின்றன.

இவ்விதமான ஒரு கடைக்குச் சென்று ஒரு டார்ச் விளக்கை இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நான் வாங்கினேன். அந்த டார்ச் லைட்டின் கம்பெனி விலை 90 ரூபாயாகும். அந்த விலைக்கு விற்றாலே ஒரு நல்ல லாபம் கிடைக்கும். ஆனால், அந்த கம்பெனி விலையான 90 ரூபாயை பூஜ்யத்துக்கு பக்கத்தில் சுரண்டி அகற்றிவிட்டு ரூபாய் 97 என்று டைப் செய்த ஒரு துண்டு தாளை ஒட்டி வியாபாரி விற்கின்றார். நான் வீட்டிற்கு

வந்து அந்த சிறிய தாளை நீக்கிப் பார்த்தபோது அந்த டார்ச் விளக்கின் கம்பெனி விலை ரூபாய் 90 மட்டும்தான் என்று கண்டேன். அந்த கிறிஸ்தவ வியாபாரி செய்த தேவனுக்கு பிரியமற்ற காரியத்தை வேத வசனத்தின் மூலமாக சுட்டிக் காண்பிக்க அடுத்த வாரம் அதே கடைக்குச் சென்றேன். நான் சென்ற நேரம் கடை முதலாளி இல்லை. கடைக்கு முதன்மையான வாலிப தம்பியை அழைத்து நீதிமொழிகள் 10 : 2 மற்றும் 21 : 6 ஐ சத்தமாக வாசிக்கச் சொன்னேன். அப்படியே அவன் "அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது" என்றும் "பொய் நாவினால் பொருளை சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்" என்று வாசித்தான். "நான் என்ன செய்ய முடியும்? என் முதலாளி அப்படி எழுத்தை சுரண்டி விலையை போட்டு விற்கின்றாரே" என்று அவன் என்னிடம் சொன்னான். "பரவாயில்லை, முதலாளி வந்ததும் நீ வாசித்த இரண்டு வசனங்களையும் மறவாமல் சொல்லிவிடு" என்று கூறி வந்தேன்.

"கிரைஸ்ட் மெடிக்கல்ஸ்" என்று ஆண்டவருடைய பரிசுத்தமும் உன்னதமுமான நாமத்தை வைத்தே போர்டு போட்டு போலியான மருந்து மாத்திரைகளை தங்களண்டை வரும் நோயாளிகளுக்கு துணிந்து விற்று பெரும் பணம் சம்பாதிக்கின்றனர்.

கிறிஸ்தவ அரசு அதிகாரிகள் (எல்லாரும் அல்ல) பரிதானங்கள் வாங்கி திரண்ட பணம் சம்பாதித்து பெரிய மாளிகை போன்ற வீட்டைக் கட்டி வாழ்கின்றனர். பரிதானங்களால் கட்டப்பட்ட தங்கள் வீட்டில் தங்களுடன் தங்கியிருப்பது யார் (சாத்தான்) என்று தெரியாமல் வீட்டின் முகப்பு அறையின் மேல் சுவற்றில் "இந்த வீட்டின் அக்கிராசனபதி (தலைவர்) கிறிஸ்து" என்று எழுதப்பட்ட வாசகத்தை கண்ணாடிச்சட்டமிட்டு தொங்க வைத்திருப்பார்கள். அது ஒரு சாபத்தின் வீடு என்பதை நாளானது வெட்ட வெளிச்சமாக விளங்கப்பண்ணும்.

கர்த்தர் தங்களுக்கு கொடுத்த செல்வத்தால் வீடுகளைக் கட்டி பண ஆசை காரணமாக வீட்டு அறைகளில் விக்கிரகங்களை வைத்து பூஜை செய்கின்ற புறமதஸ்தருக்கு வாடகைக்குவிட்டு மாதந்தோறும் வாடகையாக பெருந்தொகை பெறுகின்றனர்.

எந்த ஒரு நோய் நொடியும் இல்லாமல் கர்த்தர் தங்களுக்கு கொடுத்த பூரண சுக பெலத்தோடு இருக்கும் கிறிஸ்தவ அதிகாரிகளும், கிறிஸ்தவ

ஆசிரிய பெருமக்களும் நியாயமாக தாங்கள் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய வருமான வரியிலிருந்த தப்பித்துக் கொள்ள மருத்துவர்களுக்கு பணம் கொடுத்து பொய்யான மருத்துவ சான்றிதழ்களையும், பொய்யான மருத்துவ பில்களையும் கொடுத்து தப்பிக்கொள்ளுகின்றனர். இப்படிச் செய்து ஒருவேளை அரசாங்கத்தை நாம் ஏமாற்றலாம். ஆனால், "ராயனுடையதை ராயனுக்குக்கொடு" என்று கூறிய தேவனிடமிருந்து நாம் தப்ப முடியாது. மாந்தரின் பண ஆசை இப்படி எல்லாம் செய்யச் செய்கின்றது. எல்லா கிறிஸ்தவ மக்களையும் நான் குறிப்பிடவில்லை. "நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை" (நெகே 5 : 15) என்று கூறி அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய வருமான வரியை ஒளிவு மறைவின்றி செலுத்தும் உண்மையான நெகேமியாக்களும் இதில் இல்லாமல் இல்லை. கர்த்தருக்கு துதி உண்டாவதாக.

பண ஆசையால் மாந்தர் செய்யும் காரியங்களை இங்கு எழுத பக்கங்கள் போதாது. எனக்கு மிகவும் பழக்கமான ஒரு அன்பான ஐயாவுடைய அடக்க ஆராதனைக்குச் சென்றிருந்தேன். நல்ல வசதியான அவர்கள் தனது பிள்ளைகளுக்கு பல லட்சங்கள் விலைமதிப்புள்ள வீடுகளையும், நிலபுலன்களையும் பின் வைத்துள்ளார்கள். பிள்ளைகள் எல்லாரும் மொத்தமாக சேர்ந்து பணம் எடுத்து அடக்கத்தை சீரும் சிறப்புமாகச் செய்திருக்கலாம். ஆனால், பணம் எடுத்துச் செய்ய தங்களுக்குள் தயக்கம் காண்பித்த காரணத்தால் அந்த அடக்கம் பார்க்கும் மக்களுக்கு துயரத்தை கொடுப்பதாக அமைந்திருந்தது. சுமார் 2 நாட்கள் சடலம் வெளியே இருந்த நிலையில் ஒரு நல்ல வசதியான பிரேத பெட்டி செய்திருக்கலாம். அதை விட்டுவிட்டு ரெடிமேட் ஆக பிரேத பெட்டி வாங்கப் போய் பெட்டி சிறியதான காரணத்தால் சரீரத்தை நல்ல வசதியாக வைக்க இயலவில்லை. பெற்ற பிள்ளைகளுக்கு தனது முழு வாழ்வையும் அர்ப்பணம் செய்து பல இலட்சங்களை பின் வைத்துப் போகும் அந்த ஆத்துமாவுக்கு உலகம் கொடுத்த வெகுமதி அது. கல்லறை தோட்டத்தில் புதைகுழி வெட்டினவர்களோடு பணத்துக்காக வாக்குவாதம், செங்கல் வைத்து கல்லறை கட்டின கொத்தனார்களோடு பணத்துக்காக வாதாட்டம். அப்பொழுது அருகிலிருந்த குருவானவர் "நான் பிரேதப் பெட்டியும் கடனுக்குத்தான் சாமியார் மடத்திலிருந்து வாங்கி வந்தேன். இனித்தான் சாவு வீட்டில் பணம் வாங்கி கடன் அடைக்க வேண்டும்" என்று கூறினார். பெட்டியை புதை குழியில் வைத்து முற்றுமாக

மண்போட்டு மூடி கல்லறை வேலை முடிவதற்குள்ளாகவே மரித்த ஐயாவின் பெற்ற பிள்ளைகள், உடன் பிறந்த சகோதரர்கள் அனைவரும் நகர்ந்து விட்டனர். கல்லறையண்டை நின்றுகொண்டிருந்தால் ஏதாவது பணம் கொடுக்கவேண்டிய சூழ்நிலை எழலாம் என்ற பயம். மனிதனுடைய பண ஆசை என்ற மதிமயக்கம் செய்யும் காரியத்தை கவனித்தீர்களா? எனது கண்களால் கண்டு, எனது காதார கேட்டு மிகவும் துக்கத்தோடு இங்கு எழுதுகின்றேன்.

ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் மேற்கண்ட மக்கள் பலரும் பண ஆசையால் அறியாமையால் செய்கின்றார்கள் என்றால் வேதத்தை கரத்தில் எடுத்து பிரசிங்கிக்கும் தேவ ஊழியர்களும் இந்த பண ஆசை என்ற விக்கிரகத்தை தெண்டனிட்டு நமஸ்கரிக்கும் மக்களாகவே காணப்படுகின்றனர். எல்லா தேவ ஊழியர்களும் அல்ல. ஒரு பக்கம் தேவ ஊழியம் செய்கின்றனர். அடுத்த பக்கம் தங்கள் சந்ததிக்கு இரகசியமாக அங்கும் இங்கும் நிலபுலன்களை வாங்கிப்போட்டு கர்த்தருடைய பணத்தில் வீடு வாசல்களைக் கட்டுகின்றனர். அவர்களுடைய ஆட்டோக்கள் பட்டணத்தின் தெருக்களில் வாடகை சம்பாதிக்க ஓடுகின்றன. பணம் சம்பாதிக்க டாக்சிகள் வைத்திருக்கின்றனர். குருவானவர்கள் தங்களுடைய தேவாலயத்தையே கொள்ளையடித்து பணம் சேர்க்கின்றனர். கர்த்தருடைய ஆலயத்துக்கென்று கொடுக்கப்படும் காணிக்கைகளை தங்கள் சொந்த செலவுக்காக வைத்துக் கொள்ளுகின்றனர். எல்லா குருவானவர்களையும் நான் இங்கு குறிப்பிடவில்லை. ஆடுகளிலே கருப்பு ஆடுகளைத்தான் நான் இங்கு சுட்டிக் காண்பிக்கின்றேன்.

இந்த கடைசி நாட்களில் தேவ ஊழியர்கள் தீர்க்கத்தரிசன ஊழியங்களை தங்கள் கரத்தில் எடுத்து துரிதமாகவும், ஏராளமாகவும் பணம் சம்பாதிக்க அதை பயன்படுத்துகின்றனர். அவர்கள் மிகவும் துணிந்து பொய் தீர்க்கத்தரிசனம் சொல்லுகின்றனர். ஆகாப் மற்றும் யோசபாத் ராஜாக்களுக்கு சாதகமாக கெனானாவின் குமாரனாகிய சிதேக்கியா தனக்கு இருப்புக் கொம்புகளை உண்டாக்கி இவைகளால் நீர் சீரியரை மூட்டி நிர்மூலமாக்கிப்போடுவீர் (2 நாளா 18 : 10) என்று பொய் தீர்க்கத்தரிசனம் சொன்ன சிதேக்கியா போன்ற பொய் தீர்க்கர்கள் இன்று ஏராளம் பேர் உள்ளனர்.

உங்கள் குமாரன் பின் நாட்களில் ஒரு பெரிய தேவ ஊழியன் ஆவான் என்று தீர்க்கத்தரிசனம் சொல்லி இறுதியில் அந்த அருமை குமாரன் மிகவும் இளமையான வாலிப வயதில் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் மரித்துப்போனான்.

எனக்கு மிகவும் நெருங்கிய ஒரு மகளுடைய வீட்டிற்கு அநேக தேவ ஊழியர்கள் வருவது வழக்கம். அந்த மகளுக்கு ஏற்கெனவே இரண்டு பெரிய பெண் மக்கள் உண்டு. அவர்கள் வீட்டிற்கு மேற்கண்ட சிதேக்கியா போன்ற ஒரு பொய் தீர்க்கத்தரிசி வந்து அந்த மகளுக்கு கர்த்தர் ஒரு ஆண் மகவை கொடுக்கப் போகின்றார் என்று தீர்க்கத்தரிசனம் கூறி ஆசை காட்ட மகளும் கர்ப்பவதியானாள். கர்ப்பத்திலே இரட்டைக் குழந்தைகள் இருப்பது தெரியவந்தது. அந்த இரு குழந்தைகளுமே ஆண் பிள்ளைகள்தான் என்று பரிசுத்த தீர்க்கத்தரிசியானவர் கூற அவரது பேச்சைக் கேட்டு பெற்றோரும் தங்களுக்கு இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் கிடைத்ததற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி ஆண் மக்களின் வரவுக்காக ஆசையோடு காத்திருக்க கடைசியாக இரு பெண் குழந்தைகள் பிறந்தனர். தங்களுக்கு கர்த்தர் கொடுத்த 2 பெண் மக்களையே மிகவும் கஷ்டத்தோடு வளர்த்து படிக்க வைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் கள்ளத் தீர்க்கத்தரிசியின் பொய் வார்த்தையால் பெரும் சங்கடங்களுக்குள் சிக்கி இருக்கின்றனர்.

இப்படிப்பட்டவர்கள் பக்தி பரவசமாக பேசுவார்கள். ஜெபிக்கும்போது அப்படியே தாரை, தாரையாக கண்ணீரும் வடித்து ஏங்கி அழுவார்கள். ஆ, எத்தனை பயங்கரம்! ஒருவாறு எல்லாருமே இவர்களுடைய மகுடியின் நாதத்தில் சுருண்டு மயங்கிவிடுவார்கள். ஆ, பணம் சம்பாதிக்க மனிதன் எத்தனை எத்தனையோ உபாய தந்திரங்களை கையாளுகின்றான். தேவனுடைய பரிசுத்தமானதும், மகத்துவ மானதுமான தேவ ஊழியங்களை முதல்தரமான வியாபாரமாக்கி விட்டனர்.

கிறிஸ்தவ மக்கள் பலர் பணத்தை எத்தனையாக நேசித்து அதில் ஒரு பைசாவும் செலவிடாமல் எப்படியாக இரகசியமாக சேர்த்துக் குவிக்கின்றனர். ஏழை எளியவர்கள், ஆதரவற்ற பசியால் வாடும் விதவைகள், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் உடன் பிறந்த சகோதர சகோதாகளுக்கு கரம் நீட்டி உதவி செய்யாமல் செல்வம் சேர்க்கின்றனர். பண ஆசை அவர்களை உடும்பு பிடியாக பிடித்திருக்கின்றது.

அவர்களிடமிருந்த பணம் பெறுவது என்பது தமிழில் உள்ள பழமொழிப்படி "கருங்கல்லில் நார் உறிக்கும்" கடினமான காரியமாகும்.

இந்தவித பண ஆசை கொண்ட மக்கள் தேவனுடைய ராஜ்யம் போய் சேர இயலாது. இந்தப் பண ஆசை கிறிஸ்தவத்தின் அடிப்படை அஸ்திபாரமாகிய விசுவாசத்தையேவிட்டு மக்களை வழி விலகச் செய்வதாக தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. (1 தீமோ 6 : 10) அது மாத்திரமல்ல, அந்த பண ஆசை என்ற பட்டயத்தால் தங்களைத் தாங்களே மார்போடு சேர்த்து உருவக்குத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்றும் அவர்கள் நித்திய ஜீவனுக்கென்று உயிர் பிழைப்பதே மிகவும் கடினம் என்றும் அதே வசனத்தின் பின் பகுதி கூறுகின்றது.

வாசிப்போனே, பண ஆசை என்ற விக்கிரகத்துடன் நீ பரம கானான் போக இயலாது. அந்த கொடிய விக்கிரகம் உடைந்து நொறுக்கப்பட வேண்டும். உனது ஆண்டவர் பணத்தை தனது கையினால் தொட்டுக் கூட பார்த்தது கிடையாது (லூக் 20 : 24) பண ஆசை உன்னைவிட்டு தொலையும்போது ஏழை எளியவர்களுக்கு நீ இரங்குவாய். உனக்காக இரத்தம் சிந்தி மாண்ட உன் அருமை இரட்சகரின் நாமத்தை மகிமைப்படுத்தும் தேவ ஊழியங்களுக்கு உனது கரங்களை திறப்பாய்.

செய்திதாட்கள், அரசியல் என்ற விக்கிரகம்.

தேங்காய் அல்லது கருவாட்டை மணமாகச் சுட்டு எலிப்பொறிக்குள் வைத்து நாம் எலியைப் பிடிக்கின்றோம். நரிக்குறவர்கள் ஆட்டின் கொழுப்பை பயங்கரமாக வெடிக்கக் கூடிய வெடி குண்டுகளைச் சுற்றிலும் மறைத்து வைத்து நரிகளுக்கு முன்பாகப் போட்டு அதைக்கடிக்க வைத்து அதின் தலையை அதின் மூலம் உடைத்து நொறுக்கச் செய்து நரிகளைப் பிடிக்கின்றனர். தூண்டில் முள் முழுவதுமாக மண் புழுவால் மறைக்கப்பட்டு மீன் பிடிக்கப்படுகிறது. அதைப்போன்று சாத்தானாம் பிசாசும் மனித ஆத்துமாக்களை வேட்டையாட பல்வேறு தந்திரங்களை கையாண்டு வருகின்றான். அப்படிப்பட்ட அவனது உபாய தந்திரங்களில் செய்தித்தாட்களும், அரசியலும் இடம் பிடித்து நிற்கின்றது.

எனக்கு ஒரு ஐயாவை தெரியும். காலையில் கண் விழித்ததும் தேவனுடைய வார்த்தையை வாசித்து ஜெபிப்பார்களோ என்னவோ எனக்கு தெரியாது. ஆனால், ஆங்கில செய்தி தாள் வாங்க காலையிலே

முதல் ஆளாக பேப்பர் கடையின் முன் நின்று கொண்டிருப்பார்கள். பேப்பர் கிடைத்ததும் ரஸ்தா வழியாக படித்துக் கொண்டே செல்லுவார்கள். அவர்களுடைய வீட்டுக்கும், பேப்பர் கடைக்கும் ஒரு கி. மீ. க்கும் கூடுதலான தூரம் உண்டு. அந்த முழு தூரமுமே அவர்கள் பேப்பர் வாசித்துக் கொண்டு செல்லுவார்கள் என்று கூட நாம் துணிந்து செல்லலாம். பல தடவைகளும் நான் அவர்களுக்கு தேவ ஆலோசனை கூறியுள்ளேன். ஆங்கில செய்தித்தாள் படிக்க செலவிடும் நேரத்தை தேவனுடைய வேதபுத்தகத்தை வாசிக்க செலவிடுங்கள், கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டு என்று கூறுவேன். பல தடவைகள் சொல்லியும் பயன் ஏதும் இல்லை. பின்னர் அவர்களுடைய காலிலே ஒரு பெரிய பெலவீனம் ஏற்பட்டது. நடக்க கஷ்டப்பட்டார்கள். அந்தக் கால் பெலவீனத்தை அவர்களுக்கு சுட்டிக்காண்பித்து இனிமேலாவது பேப்பர் ஆசையை விட்டுவிட்டு வேத புத்தகத்துக்கு திரும்புங்கள் என்றேன். இப்பொழுது ரஸ்தா வழியாக படிக்காதபோதினும், அதை நாள் தவறாமல் வீட்டுக்கு வாங்கிப் போய் வாசிக்கின்றார்கள். பேப்பரிலே ஒரு வரியைக்கூட விட்டுவிடாமல் நாள் முழுவதும் அதை வாசிக்கும் ஆத்துமா அது.

ஆம், செய்தி தாட்கள் மற்றும் அரசியல் ஒரு போதை மருந்தைப் போல உள்ளது. " எனது கணவர் தினமணி மற்றும் தினமணிக்கதிர் வாசித்தே தனது கிறிஸ்தவ வாழ்க்கையை பாழாக்கி விட்டார்கள்" என்று ஒரு கர்த்தருடைய பிள்ளை ஒரு சமயம் எனக்கு லட்டர் எழுதியிருந்தார்கள். எத்தனை உண்மையான காரியம்.

கிறிஸ்தவ வீடுகளிலும், குருவானவர்கள், பாஸ்டர்களின் வீடுகளில் கூட உலகப்பிரகாரமான செய்தித்தாட்கள், சஞ்சிகைகள் மிகவும் விரும்பி வாசிக்கப்படுகின்றன. பிரசங்கத்துக்கு அவைகள் மிகவும் பயன் உள்ளவைகளாக இருக்கின்றன என்று ஒரு குருவானவர் சொன்ன வார்த்தை இன்னும் எனது காதுகளில் தொனித்துக்கொண்டிருக்கின்றது. அவர்கள் வார்த்தையின்படியே கல்கி, குமுதம், ஆனந்தவிகடன் போன்ற உலகப்பிரகாரமான சஞ்சிகைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்து தங்கள் பிரசங்கங்களில் பேசுகின்றனர்.

களிப்பறைக்கு தனது செய்தி தாளுடன் சென்ற குருவானவர் ஐயா ஒருவர் அங்கேயே மரித்து கழிப்பறைக்கதவு உடைக்கப்பட்டு சரீரம் வெளியே எடுக்கப்பட்ட செய்திகளை எல்லாம் நாம் கேள்விப்படும்போது

செய்தித்தாட்களானது மனிதனுக்கு எத்தனையானதொரு போதை வஸ்துவாக இருக்கின்றது என்பதை நம்மால் யூகிக்க முடிகின்றது அல்லவா!

செய்தி தாட்கள் நமக்கு பல பயனுள்ள செய்திகளை தருகின்றன என்பது உண்மைதான். ஆனால், அவைகளை அதிக நேரம் செலவிட்டு வாசிப்பதைக் குறித்து நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். நமது காலங்களும், நேரமும் விலையேறப் பெற்றவைகள். அவைகள் கர்த்தருக்குரியவைகள். அவைகள் கர்த்தருடைய நாமத்துக்கு மகிமையாக செலவிடப்பட வேண்டும். கர்த்தருடைய வேத புத்தகத்தில் தினமும் 5 அல்லது 10 அதிகாரங்களை வாசிப்பதற்கு நாம் செலவிடும் நேரம் நமக்கு திரண்ட ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்.

கர்த்தருடைய பரிசுத்த தேவ மக்கள் யாவரும் செய்தி தாட்களை அதிகமாக வாசித்தவர்கள் அல்லர். அப்படியே ஒரு கண்ணோட்டம் பார்த்துவிட்டு வெகு துரிதமாக அதை கீழே வைத்தனர். செய்தி தாட்களில் பயனளிக்கக்கூடிய முக்கியமான செய்திகள் இருந்தால் அதை கத்தரித்து பண்டிதர் பில்லி கிரஹாமின் மனைவி தனது கணவரிடம் காண்பிப்பார்கள் என்று நான் வாசித்திருக்கின்றேன்.

ஏறத்தாழ 23 மரித்துப் போன மக்களையும், செத்துப்போன தனது சொந்த மனைவியையுமே உயிரோடு எழுப்பிய விக்கிள்ஸ்வொர்த் என்ற மாபெரும் தேவ மனிதர் வேத புத்தகத்தை தவிர வேறு எந்த புத்தகங்களையுமே வாசிக்க மாட்டாராம். அவர் ஒரு வேதவசன பிரியன். ஒவ்வொரு வேளை ஆகாரம் புசிப்பதற்கு முன், முதலாவது என் ஆவிக்கு உணவு அளித்து விட்டு பிறகு தான் என் சரீரத்துக்கு உணவு அளிப்பேன் என்று சொல்லி கர்த்தருடைய வசனத்தின் ஒரு பகுதியை வாசித்துவிட்டுத்தான் எந்த இடத்திலும் உணவு உண்பாராம். செய்தி தாட்களைக் கூட வாசிக்க மாட்டாராம். ஒரு தடவை லெஸ்டர் சும்ரால் என்கின்ற தேவ பக்தன் தான் வாலிபனாக இருந்த சமயம் அவருடைய வீட்டிற்கு அவரைப் பார்க்க சென்றாராம். அன்றைய நாளின் செய்தித்தாள் அவர் கையிலிருந்தது. விக்கிள்ஸ்வொர்த் அதைப் பார்த்தவுடன் "வெளியே போய் அந்தப் பத்திரிக்கையை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு என்னை வந்து பார். என் தேவனுடைய வேதத்தை தவிர வேறு எந்தப் புத்தகமும் என் வீட்டில் இருக்கக்கூடாது" என்று கூச்சலிட்டாராம். சற்றும் எதிர்பாராத லெஸ்டர் சும்ரால் பயந்து

போய் அதை வெளியே எறிந்துவிட்டு வந்தாராம். இவ்விதமாக நீங்கள் செய்யும்படியாக நான் உங்களுக்குச் சொல்லவில்லை. செய்தி தாட்களை படித்து ஜெபிப்பதும், பயனுள்ள செய்திகளை தெரிந்து கொள்வதும் நல்லதுதான். ஆனால் ஆண்டவருடைய வேதாகமத்துக்கு கொடுக்க வேண்டிய முதலிடத்தை விக்கிள்ஸ் வொர்த் என்ற தேவ மனிதரைப் போல கட்டாயம் கொடுங்கள். தவறும் பட்சத்தில் செய்தி தாட்கள் வாசிப்பு என்ற சாவியானதும், கீழ்க்காற்றில் தீய்ந்து போனதுமான ஏழு கதிர்கள் பரிசுத்த வேதவசன தியானம் என்ற செழுமையும் நிறை மேனியுமான ஏழு கதிர்களை அப்படியே எடுத்து விழுங்கிப்போடும் *(ஆதி 41 : 7)*

"உனது செய்தி தாளை நின்று கொண்டு மாத்திரம் வாசி" என்று ஒரு மெதடிஸ்ட் பரிசுத்தவான் கூறியுள்ளார். ஹென்றி டேவிட் தோரு என்ற மனிதனை அவரது நண்பன் ஒருவர் சந்தித்து ஒரு செய்தி தாளை அவரது வாசிப்புக்காக தினமும் அவரது வீட்டில் போடச் சொல்ல ஒழுங்கு செய்யலாமா என்று கேட்டதற்கு "ஒரு செய்தி தாள் எப்படி இருக்கும் என்பதை நான் பார்த்து படித்துவிட்டபடியால் இனி எனக்கு ஒரு செய்தி தாள் பார்க்க அவசியமில்லை" என்று கூறிவிட்டார்.

செய்தி தாட்களையும் அவைகள் தாங்கி வருகின்ற அரசியல் செய்திகளையும் படிக்க படிக்க மனிதனுக்கு ஒரு வெறி ஏற்படுகின்றது. அவனுடைய மனம் அந்தராத்துமாவில் ஏதோ ஒரு கட்சியை சார்ந்து செல்லுகின்றது. தான் நேசிக்கின்ற கட்சியின் காரியங்களை படிக்க அவனது மனம் துடிதுடிக்கின்றது. அரசியல் என்பது முதல் தரமான சாக்கடை என்பது அவனுக்குத் தெரியாது. அன்று கிழக்கு இந்திய கம்பெனி, போர்த்துக்கீசிய கம்பெனி, டச்சுக் கம்பெனி போன்ற வாணிப கம்பெனிகள் இருந்ததைப் போன்று இன்றுள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் வர்த்தக நிறுவனங்கள். அன்று அவைகள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டது போல இன்று அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து இரண்டு கம்பெனிகளாக போட்டியிடுகின்றன. இந்தப் போட்டியில் வெற்றி பெறும் கம்பெனி அடுத்த 5 ஆண்டுகளுக்கு வியாபாரம் செய்யும். போட்டியில் தனது வெற்றிக்கு பாடுபட்ட சின்ன, சின்ன கம்பெனிகளுக்கு லாபம் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றது. இந்த பாவக்கூத்தை நாம் நமது சொந்தக் கண்களால் பார்த்துக் கொண்டே வருகின்றோம். ஏழை எளிய மக்களுக்கு பாடுபட்டு நாட்டுக்கு நன்மை செய்யப் போவதாக கூறி நமது

வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வருபவர்கள் தங்களுடைய தலைமுறை தலைமுறைகளுக்கு மக்களின் வரிப்பணம் மற்றும் இதர பணங்களை கொள்ளையடித்து நாட்டின் கஜானாவை காலி செய்துவிட்டு மாடமாளிகைகளில் இறுதியில் போய் அமர்ந்து கொள்ளுவார்கள். இதுவே இன்றைய அரசியலாக இருக்கும்போது ஏதும் அறியாத பேதை மாந்தர் மேற்கண்ட அரசியல் கம்பெனிகளின் செய்திகளை நாள் முழுவதும் வாசித்து தங்கள் தங்கள் தலைமுடியை பிய்த்துக் கொள்ளுகின்றனர்.

இதை கருத்தோடு வாசிக்கும் என் அன்பான தேவ பிள்ளையே, செய்தி தாட்களை கர்த்தர் உன்னை அனுமதித்தால் வாங்கி வாசி. ஆனால், அந்த வாசிப்பு ஒரு சில நிமிட பார்வையாக மட்டும் இருந்தால் போதுமானது. மணிக்கணக்காக அதை உட்கார்ந்து வாசிக்க நேரம் செலவிடாதே. அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளின் செய்திகளை கட்டாயம் கண்ணேறிட்டுப் பார்க்கக் கூடாது. நீங்கள் வேலைகளிலிருந்து ஓய்வுபெற்று வீட்டோடு சும்மா இருப்பவர்களானால் செய்திதாட்கள் என்ற குப்பையை வீட்டுக்குள் வர அனுமதிக்காமல் உங்களுடைய விலையேறப்பெற்ற நேரத்தையும், காலங்களையும் வேத வாசிப்பிலும், ஜெபத்திலும், பாடல்கள் பாடி கர்த்தரை துதிப்பதிலும் செலவிட்டு தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்கு ஆயத்தமாகுங்கள் (எபி 4 : 9).

செய்தித்தாட்கள், அரசியல் மற்றும் மனதைக் கறைப்படுத்தும் சஞ்சிகைகள், நாவல்கள் வாசிப்பு போன்ற விக்கிரகங்களுடன் நீ இன்பக் கானான் செல்ல இயலாது. ஆத்துமாவை நஷ்டப்படுத்தி, நமது பொன் போன்ற காலத்தை பட்சித்துப்போடும் இந்த விக்கிரகங்கள் அடித்து நொறுக்கப்பட வேண்டும். இதுவரை அந்த விக்கிரகங்கள் உன்னால் சுமக்கப்பட்டிருக்குமானால் நீ புத்தி தெளிந்து அந்த விக்கிரகத்தை இனிமேல் தூக்கிச் சுமந்து செல்லாதே.

சகலவிதமான கசப்பு, வீண் சந்தேகங்கள், பெருமை போன்ற விக்கிரகங்கள்.

சகலவிதமான கசப்பு :

மக்கள் தங்கள் வாழ்க்கைகளில் தங்களுக்கு தீங்கிழைத்த மக்களைக் குறித்து கசப்பான எண்ணத்தை மனதில் கொண்டு அதை மன்னிக்கவும், மறக்கவும் மனதில்லாமல் வாழ்வதை நாம் பார்க்கின்றோம்.

எனது நெருங்கிய இனத்தில் ஒரு ஐயா, தனது மனைவியோடு திடீரென ஏதோ ஒரு காரியத்துக்காக கோபம் கொண்டு அந்த மனக்கசப்போடேயே தனது மனைவியோடு கடைசிவரை பேசாமலேயே மரித்தார்கள். மரணம் நெருங்கி வரும் நேரத்திலும் அருகிலிருந்தோரிடம் தான் மரித்த பின்னர் தனது மனைவியின் கரங்கள் எந்த நிலையிலும் தனது சரீரத்தில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி அத்தனை மனக்கசப்போடு மரித்தார்கள்.

எனக்கு தெரிந்த ஒரு கிறிஸ்தவ சகோதரன் தனது பெற்ற தாயாரிடத்தில் கொண்ட மனக்கசப்பின் காரணமாக அந்த தாயின் மரண பரியந்தம் வரை பேசவே இல்லை. எத்தனையோ ஆண்டுகள் ஒரே வீட்டில் அந்தத் தாயுடன் வாழ்ந்து கொண்டே அவர்களிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. தாய் மரணப்படுக்கையில் இருந்தபோதும் அவர்களின் கட்டிலண்டை செல்ல அந்த ஆத்துமாவுக்கு மனம் வராமற் போயிற்று. ஆ, மனக்கசப்பு எத்தனை கொடியது என்று பாருங்கள்!

சில மக்கள் நமக்குச் செய்யும் நீசத்தனமான பாதக செயல்கள் நமது இருதயத்தை உடைத்து சுக்கு நூறாக நொறுக்கிவிடுகின்றது. நமது உள்ளத்தை கசப்பாக்கிவிடுகின்றது. நான் உலகப்பிரகாரமான எனது அலுவலில் இருந்தபோது எனக்கு தலைமயாயிருந்த ஒரு கிறிஸ்தவ சகோதரன் எனது வருடாந்திர சம்பள உயர்வை வேண்டுமென்று தடுத்து நிறுத்திவிட்டார்கள். அதின் காரணமாக நானும், குடும்பமும் எவ்வளவோ கஷ்டங்களை சந்திக்க வேண்டியதானது. அந்த சகோதரனின் கொடிய செயலின் காரணமாக அவருடன் சில ஆண்டுகள் நான் பேசாமலிருந்தேன். ஆனால், நான் எனது மனக்கசப்பை விட்டுவிட்டு அந்த சகோதரனோடு ஒப்புரவாகிக்கொள்ள தேவ ஆவியானவர் என்னை பலமாக உணர்த்தியதால் அவர்களுடைய வீட்டிற்குச் சென்று ஒப்புரவாகி நல்மனம் பொருந்திக்கோண்டேன்.

கர்த்தருடைய பிள்ளையே, தேவனுடைய வசனத்தின்படி (எபே 4 : 31) நமது வாழ்வில் எவரைக் குறித்தும் எந்த ஒரு மனக்கசப்பும் நமக்கு இருக்கக்கூடாது. அந்த மக்கள் நமக்கு எப்படிப்பட்ட துரோகம் செய்து நமது குடும்பத்தை பாழாக்கியிருந்தபோதினும் அதை நாம் மனதில் கொள்ளாமல் தேவனுடைய ஜீவனுள்ள வசனத்துக்குக் கீழ்ப்படிந்து அவர்களை மன்னித்து அவர்களோடு நல்மனம் பொருந்திக்கொள்ள வேண்டும். தனது வாழ்வையே முடித்துக்கட்ட தீர்மானித்து தன்னை

தண்ணீரற்ற பாழ் குழியில் போட்ட தனது கொலைபாதக பொல்லாத சகோதரர்கள் மேல் எந்த ஒரு மனக்கசப்பையும் கொள்ளாமல் அவர்களை மனப்பூர்வமாக மன்னித்து அவர்களை மேலான நிலைக்கு உயர்த்திய யோசேப்பு தேவ பக்தன் நமது சிறந்த உதாரணமாக விளங்குகின்றார்.

இந்த மனக்கசப்பு என்ற பொல்லாத விக்கிரகத்துடன் நாம் தேவனுடைய உன்னத வீட்டிற்குள் பிரவேசிக்க இயலாது.

வீண் சந்தேகங்கள்

ஒரு நாள் மாலை மயங்கும் நேரம் ஒரு கிறிஸ்தவ குடும்பத் தலைவனும் அவர்களது மனைவியும் சில மாதங்களே நிரம்பிய தங்கள் பாலகனை தங்களுக்கு முன்பாக கட்டிலில் கிடத்தி வைத்து பெரிய வாக்குவாதத்தில் இருப்பதை திடீரென அவர்கள் வீட்டிற்குச் சென்ற நான் கண்டேன். அந்தக் குழந்தை தனக்கு பிறக்கவில்லை, அவனது சாயல் மாற்றானின் சாயலாக இருக்கின்றது என்பது குடும்பத் தலைவனின் வாதம். எத்தனை பயங்கரமான நிலை பாருங்கள்! இருவரும் சேர்ந்து தங்களுக்கு முன்பாக இருக்கும் குழந்தை யாருடைய சாயல் என்று என்னிடம் கேட்க, நான் எந்த ஒரு தயக்கமுமின்றி குழந்தை தனது தந்தையின் சாயலையே தாங்கியிருக்கின்றான் என்று நான் கூறி அவர்களை சமாதானப்படுத்தி வந்தேன். கணவன், மனைவிக்கும் இடையிலான இந்தவித கொடிய சந்தேகங்கள் அநேக குடும்பங்களில் தலைவிரித்தாடுகின்றன.

ஒரு குருவானவர், ஆசிரியையாக பணியாற்றி வந்த தனது மனைவியின் நடத்தை மேல் வீண் சந்தேகம் கொண்டு அந்தப் பெண்மணி வேலையிலிருந்து வீடு வந்ததும் வழியில் நீ இந்த மனிதருடன் பேசுவதை நான் கண்டேன், அந்த வாலிபனோடு சாலை ஓரமாக நீண்ட நேரம் சிரித்துப் பேசியதை நான் கவனித்தேன் என்று வாயில் வந்தபடி அந்தப் பெண்ணை திட்டி, தூஷித்து அந்த சகோதரியை முழங்காலில் நிற்க வைப்பதும் மற்றும் பலவிதமான சித்திரவதைகளை செய்து வரவே ஒரு நாள் அந்தப் பெண் தன் உடலில் தீ வைத்து தற்கொலை செய்து கொண்டது. பாவ மாந்தரை பரலோகத்துக்கு வழிநடத்திச் செல்லும் குருவானவரின் தேவையில்லாத உண்மைக்குப் புறம்பான வீண் சந்தேகம் அந்த விலையேறப்பெற்ற ஆத்துமாவை நித்தியமாக நஷ்டப்படுத்தி விட்டது.

எனக்கு ஒரு அன்பான குடும்பத்தை தெரியும். அந்தக் குடும்பத்தின் தலைவர் தனது குறிப்பிட்ட ஒரு மகன் தனக்கு பிறக்கவில்லை என்று வீண் சந்தேகங்கொண்டு அவனை உக்கிரக பகையாக பகைத்தார். அந்த தகப்பன் கையில் அந்த குமாரன் வசமாக சிக்கினால் செம்மையாக உதைத்துப்போடுவார். எனவே, தகப்பன் இல்லாத நேரம் வீட்டிற்கு வந்து தாயிடம் ஆகாரம் வாங்கி சாப்பிட்டுவிட்டு ஓடிவிடுவான். தகப்பன் நித்திரைக்கு சென்ற பின்னர் இந்த மகன் வந்த பயந்து நடுங்கிப் படுத்து தகப்பன் கண் விழிக்கும் முன்னர் கண் விழித்து ஓடுவான். நினைக்கும்போது நம் நெஞ்சம் குமுறுகின்றது. ஆனால், உண்மையில் அந்த குமாரன் அந்த தகப்பனுக்கு பிறந்தவன்தான். யாவும் வீணான சந்தேகங்களால் வந்த காரியம். ஜீவனுள்ள தேவனை வழிபடும் கிறிஸ்தவ குடும்பங்களில் நடக்கும் காரியங்கள் இவை!

மிகுந்த தேவ சமாதானத்தோடு வாழும் கிறிஸ்தவ குடும்பங்கள் தங்களுக்கு வரும் எதிர்பாராத கஷ்டம், கண்ணீர்கள் தங்களுடைய உடன் பிறந்த சகோதரர்களால் தங்களுக்கு வைக்கப்பட்ட பில்லி சூனியம், செய்வினையின் எதிர்விளைவு என்று வீண் சந்தேகங்கள் கொண்டு சகோதரர்கள் தங்களுக்குள் ஜென்ம பகைஞர்களான குடும்பங்கள் ஏராளம், ஏராளம். இதற்கு தூபம்காட்டி திரியை கொழுந்துவிட்டு எரியச் செய்யும் சிதேக்கியா போன்ற கள்ளத்தீர்க்கத்தரிசிகளின் ஈடுபாடும் இதில் அதிகம் உண்டு.

இந்தவித வீண் சந்தேகம் காரணமாக அழிந்துபோன கிறிஸ்தவ குடும்பங்கள் கணக்கில் அடங்காது. கணவனுக்கு மனைவிமேல் சந்தேகம், மனைவிக்கு கணவன் மேல் சந்தேகம். அண்ணனுக்கு தம்பி மேலும், தம்பிக்கு அண்ணன் மேலும் சந்தேகம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் வீண் சந்தேகங்களுக்கு ஒருக்காலும் இடம் கொடுக்கக்கூடாது. அந்தவித சந்தேகங்கள் நமது சமாதானமான குடும்ப வாழ்வுகளை சீரழித்து, மண்மேடாக்கிப் போடும்.

தேவையில்லா வீண் சந்தேகம் என்ற விக்கிரகத்தை நாம் சுமந்து கொண்டு மோட்ச யாத்திரையில் இருக்கின்றோமா? அதை நமது முழு பெலத்தோடும் உயரத்தூக்கி தாழ பூமியில் எறிந்து உடைத்து நொறுக்குவோம்.

தேவன் உக்கிர பகையாக பகைக்கும் பெருமைகள்

தேவ ஊழியத்தின் பாதையில் சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் சில வருடங்களுக்கு முன்னர் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஒரு கடைக்கோடியான கிராமத்துக்கு சென்றிருந்தபோது அங்குள்ள ஒரு டீ கடையில் நாங்கள் டீ குடித்தோம். கடைக்காரர் எங்களுக்கு கொடுத்த தம்ப்ளர் கீழ் ஜாதியினர் டீ குடிக்கும் தம்ப்ளர் ஆகும். நாங்கள் டீ குடித்த பின்னர் அதை நாங்களே கழுவித்தர அந்த டீ கடைக்காரர் கேட்டார். அப்படியே அவருக்கு கீழ்ப்படிந்து செய்தோம். தேவனுடைய இரத்தப் புண்ணியத்தால் நாங்கள் ராஜ குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது அவருக்குத் தெரியாது (வெளி 1 : 6)

தென் ஆப்பிரிக்காவில், நமது தேச தந்தை காந்தியடிகள் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தின் ஆராதனையில் தனது வாழ்விலேயே முதன் முறையாக கலந்து கொள்ளச் சென்றிருந்தபோது அங்கு தேவாலயத்திலிருந்த கிறிஸ்தவ வெள்ளையர்கள் அந்த தேவாலய ஆராதனை முழுமையாக வெள்ளையர்களுக்கு மாத்திரமேதான் என்றும் கருப்பு இனத்தவர்கள் அந்த ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளக் கூடாது என்றும் கூறி அவரை வெளியே அனுப்பிவிட்டனர். மிகுந்த துக்கத்தோடு ஆலயத்திலிருந்து வெளியேறிய காந்தியடிகள் திரும்பவும் ஒரு தடவை எந்த ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தினுள் காலடி எடுத்து வைக்கவே இல்லை. தங்கள் ஜாதிப் பெருமையை வெள்ளையர்கள் காந்தியிடம் அங்கு காண்பிக்காமல் இருந்திருந்தால் ஒருக்கால் அவர் கிறிஸ்தவனாகி ஒரு பெரிய தேவ ஊழியக்காரனாக கூட மாற்றமடைந்திருப்பார்.

ஜாதிப் பெருமை காரணமாக தமிழ்நாட்டில் ஒரு பட்டணத்தில் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் முழுமையாக குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரின் ஆராதனைக்கு மட்டும்தான் உள்ளதாம். கீழ் ஜாதியினர் அந்த ஆலயத்துக்கு செல்லக்கூடாதாம். அது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை.

இன்று ஜாதிப் பெருமை தலைவிரித்து ஆடுகின்றது. எத்தனைதான் தேவ அன்பு இருந்தாலும் அவன் இந்த ஜாதிக்காரன் என்று மனதில் வைத்து அந்த வட்டத்திற்குள்ளேயே செயல்படுகின்றனர். எத்தனை கொடுமை! ஒரு தேவாலய குருவானவருக்கும், அந்த ஆலய

காரியதரிசிக்கும் வாய் சண்டை முற்றி இறுதியில் குருவானவர் இன்ன ஜாதிக்காரன் என்று காரியதரிசி கூற, அதைக் கேட்ட குருவானவரின் மனைவி வெகுண்டெழுந்து தனது காலின் செருப்பை கழற்றிக் கொண்டு காரியதரிசியை அடிப்பதற்காக ஓட அது ஒரு பெரிய சண்டையாக உருவெடுத்தது. இது எல்லாம் உண்மை சம்பவம்.

இந்த பாழுலகில் ஜாதிகள் அடிப்படையில் எத்தனை சண்டைகள் நடந்தாலும் பரலோகில் சர்வவல்ல தேவனுடன் என்றுமுள்ள நித்தியமாக அவரோடு நிலைத்து நிற்கக்கூடிய ஒரு ஜாதி உண்டு. அது எந்த ஜாதி என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்த (வெளி 7 : 14) ஒரே ஜாதிதான் அது. வேறு எந்த ஒரு ஜாதியும் பரலோகில் கிடையாது.

ஜாதிப் பெருமையைப் போலவே பணப் பெருமையும் தலைவிரித்து ஆடக்கூடிய ஒரு கொடிய பேய்தான். அந்தப் பணப் பெருமை வந்துவிட்டால் மனிதன் தனது சக மனிதனை அடையாளம் கண்டு கொள்ளுவதே இல்லை. எல்லா கிறிஸ்தவ செல்வந்தர்களையும் நான் இங்கு குறிப்பிடவில்லை. எவ்வளவோ செல்வமிருந்தபோதினும் மிகுந்த தாழ்மையும், அன்புள்ளம் கொண்டவர்களுமான தேவ மக்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர். கர்த்தருக்கே மகிமை. தேவனற்ற கிறிஸ்தவ செல்வந்தன் ஏழை, எளிய மக்களை அற்பமாக எண்ணுகின்றான். அவன் வாயின் வார்த்தைகள் பெருமையும், அகங்காரமும் கொண்டதாக இருக்கின்றது. அவன் தனது வாகனத்தில் ஏறி அமர்ந்துவிட்டால் ரஸ்தாவில் செல்லும் எந்த ஒருவரையும் அடையாளம் காண இயலாமல் அவனது கண்கள் மங்கலாகிவிடுகின்றன.

அவனது பெருமை தேவாலயத்துக்கும் நீண்டு செல்லுகின்றது. ஆலயத்திலும் கூட அவன் தன் வசமுள்ள செல்போனில் பேசுகின்றான். கர்த்தருடைய ஆலயத்தில் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் படைத்த மகத்துவமும், பயங்கரமுமான தேவனுக்கு முன்பாக நாம் அமர்ந்திருக்கின்றோம் என்ற பயபக்தி அவனுக்கு கிடையாது. தனது ஜீவ சுவாசத்தை தனது கரத்தில் வைத்திருக்கும் (தானி 5 : 23) சர்வவல்லவருக்கு முன்னால் அமர்ந்திருக்கின்றோம் என்ற உணர்வு அவனுக்கு கொஞ்சமும் கிடையாது. அருகிலிருக்கும் மக்களோடு தேவாலயத்தில் சத்தமாக வாய்

திறந்து பேசிக் கொண்டிருக்கின்றான். இந்த தைரியம் அவனுக்கு எப்படி கிடைத்தது? அவனது செல்வ செருக்கு அதை அவனுக்குக் கொடுத்தது.

வானுற ஓங்கி நிற்கும் உயரமான பெரிய கிறிஸ்தவ தேவாலயங்களில் கர்த்தருடைய பரிசுத்த ஓய்வு நாள் ஆராதனைக்கு பின்னர் ஆலய வளாகத்துக்குள் ஆங்காங்கு சிறு சிறு குடும்ப கூட்டமாக கூடிப் பேசும் மக்களின் வார்த்தைகளையும், நடபடிகளையும் கவனித்துப் பாருங்கள். ஆ, எத்தனை பெருமையான வார்த்தைகள்! எத்தனை மனமேட்டிமையான பேச்சுக்கள்! அவர்களுடைய பேச்சு வார்த்தைகளில் பக்தி, பரிசுத்தத்துக்குரிய எந்த ஒரு வார்த்தையுமே இருக்காது. அந்த வாரம் முழுவதும் கர்த்தர் தங்களுக்கு பாராட்டிய இரக்கம், கிருபை, பாதுகாவல், வழிநடத்துதல்கள் போன்றவற்றைப் பற்றி பேசி அவரைப் புகழ வேண்டிய அவர்கள் உலகக் காரியங்களையே பேசிக் கொண்டிருப்பார்கள். தங்களுடைய குடும்ப அந்தஸ்துக்கும், கௌரவத்துக்கும் சரிசமமமான குடும்பத்தோடும், மக்களுடனுமேயேதான் அவர்கள் பேசி உறவாடிக் கொண்டிருப்பார்கள். ஏழை குடும்பங்கள், வசதியற்ற மக்களை அவர்கள் கண்ணேறிட்டுப் பார்க்கக்கூட மாட்டார்கள்.

பெருமை எந்த ரூபத்தில் இருந்தாலும், அது ஜாதிப்பெருமை, பணப்பெருமை, அழகுப் பெருமை, உத்தியோகப் பெருமை, சமுதாய அந்தஸ்து பெருமை எதுவானாலும் வானம், பூமி, சமுத்திரம் படைத்த தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தருக்கு பெருமை சற்றும் ஒத்துக்கொள்ள இயலாத ஒரு காரியமாகும். பெருமைக்கு அவர் முழுமையான எதிரியாவார். யாரிடத்தில் பெருமை காணப்படுகின்றதோ அந்த மக்களுக்கு அவர் பகைஞனாக இருந்து அவர்களை எதிர்த்து நின்று போராடுகின்றார் *(யாக் 4 : 6)* அந்த பெருமைக்காரனை வெகு தொலைவிலிருந்தே அவர் அடையாளம் கண்டு கொண்டு விடுகின்றார் *(சங் 138 : 6)*

கர்த்தரிடமிருந்து அதிகமான தேவகிருபைகளைப் பெற்ற தேவ ஊழியர்கள் தங்களை பெருமையாக எண்ணிக் கொண்டு ஏழை எளிய தேவ தாசர்களை வெகு அற்பமாக எண்ணி அவர்களை அற்பமாக நடத்துவதையும், இகழிப்பாக பேசுவதையும் நாம் இந்த நாட்களில் காணலாம். அப்படிப்பட்ட பெருமைக்கார தேவ ஊழியர்களுக்கு பரலோகத்தில் இடம் கிடையாது. "பெருமைக்கார ஒரு தேவ தூதனுக்கு

பரலோகத்தில் இடம் இல்லாதிருக்கும்போது, அங்கு செல்லும் ஒரு பெருமைக்கார பிரசங்கியும் தலை கீழாகத் தள்ளப்படுவான் என்பதற்கு சந்தேகம் கிடையாது" என்று ஒரு புத்தகத்தில் நான் வாசித்தேன். எத்தனை உண்மையான வார்த்தை!

ராஜஸ்தான் மாநிலத்தில் பிக்கானீர் என்ற பட்டணத்தின் அரச அரண்மனையில் ராஜ குமாரர்கள் தாலாட்டப்பட்ட தங்கத் தொட்டில்களை நாங்கள் அங்கு தேவ ஊழியம் செய்யச் சென்றிருந்தபோது பார்த்தோம். மண்ணான மாந்தர்கள் தங்கத் தொட்டில்களிலே தாலாட்டப்பட்டிருக்க, வானம் பூமி படைத்த கர்த்தர் தாழ்மையின் கோலமாக மாட்டுத் தொழுவத்தில் அவதரித்து சிலுவையின் மரண பரியந்தம் தன்னை தாழ்த்திக்கொண்டே சென்றார் (பிலி 2 : 8) மண்ணான மானிடரின் பாவக்கால்களைப் பற்றிப் பிடித்து அவைகளைக் கழுவி துடைத்து நாமும் இந்த உலகத்தில் எத்தனை தாழ்மையோடு ஜீவிக்க வேண்டும் (யோ 13 : 14, 15) என்ற முன் மாதிரியை நமக்கு வைத்துச் சென்றுள்ளார். மகத்துவமும், உன்னதமுமான, சர்வசக்திமானான பரிசுத்த தேவன் வாசம் செய்யும் இடம் எங்கே? ஏசாயா 57 : 15 ஆம் வசனத்தில் அவர் வாழும் இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார் : உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான் பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும் நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்"

தேவ மக்களே, எந்த ஒரு காரியத்தை குறித்தும் பெருமை பாராட்டாதேயுங்கள். தேவனுடைய பார்வையில் நாம் மண்ணாகவும் (சங் 103 : 14) களிமண்ணாகவும் (எரே 18 : 6) தூளும் சாம்பலுமாகவும் (ஆதி 18 : 27) புழுவாகவும், பூச்சியாகவும் (யோபு 25 : 6, சங் 22 : 6) இருக்கும்போது பெருமை நமக்கு எதற்காக?

பரம கானான் யாத்திரையில் நீங்கள் உங்கள் தோள் மேல் வைத்து சுமந்து செல்லும் பெருமை என்ற விக்கிரகம் எந்த ஒரு ரூபத்தில் இருந்தாலும் அதை உடைத்து நொறுக்கி நாசம் செய்யுங்கள்.

இந்த தலையங்கத்தில் நான் எழுதிய விக்கிரகங்களை அல்லாமல் வேறு அநேக விக்கிரகங்களையும் நாம் நம்முடன் பரம கானான்

யாத்திரையில் சுமந்து செல்லக்கூடும். இரகசியமான விபச்சாரம், அசுத்தமான மோக இச்சைகளோடு நாள் முழுவதும் நாம் பார்க்கும் பார்வைகள் அல்லது நமது உள்ளத்தில் நாம் நினைக்கும் கர்த்தருக்கு பிரியமில்லாத ஆயிரக்கணக்கான எண்ணங்களாக அந்த விக்கிரகங்கள் இருக்கலாம். அல்லது ஆண்டவர் இயேசுவை விட நாம் அதிகமாக நேசிக்கும் நமது கணவன் அல்லது மனைவி அல்லது நாம் பெற்ற நமது கர்ப்பத்தின் கனிகளாகவோ அந்த விக்கிரகங்கள் இருக்கக்கூடும். நமது மிதமிஞ்சிய நித்திரை பிரியம், முற்கோபம், ஆடம்பரமான வாழ்க்கை அல்லது கஞ்சத்தனமான வாழ்க்கை, உணர்வு அற்ற நிர்விசாரமான வாழ்க்கை, சோம்பேறித்தனம் போன்றவையாக அந்த விக்கிரகங்கள் இருக்கலாம். நமது நேச இரட்சகருக்கு நாம் செலுத்தும் அன்பைக் காட்டிலும் அதிகமாக அன்பு செலுத்தும் அனைத்தும் தேவனுடைய பார்வையில் விக்கிரகங்கள்தான்.

இந்த விக்கிரகங்களையும் நேசித்து கர்த்தரையும் நேசித்து பரலோகம் செல்லுவது என்பது முற்றும் இயலாத காரியம். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது (மத் 6 : 24) என்று தேவன் சொன்னார். நாம் ஆராதிக்கும் விக்கிரகங்கள் எதுவாக இருந்தாலும், நமக்கும் நமது கல்வாரி நேசருக்கும் இடையிலான பரலோக நேசத்தையும், பாசத்தையும் துண்டித்து நிற்கும் எந்த ஒரு விக்கிரகமும் உடைத்து நொறுக்கப்பட்டே ஆக வேண்டும். "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" (ரோ 8 : 36) என்று அப்போஸ்தலன் மார் தட்டி சவால் விட்டார். உலகப்பிரகாரமான எந்த ஒரு விக்கிரகமும் அந்த தேவ அன்பிலிருந்து நம்மைப் பிரித்துவிடாதபடி நாம் நம்மைக் காத்துக்கொள்ளல் வேண்டும்.

நீண்ட நேரம் நம்மால் தேவனுடைய சமூகத்தில் ஜெபத்தில் தரித்திருக்க முடியவில்லை. தேவனுடைய வார்த்தைகள் தேனிலும், தெளி தேனிலும் நமக்கு மதுரமாக இருப்பதில்லை. உபவாசம் என்பது நமக்கு எட்டிக்காயாக இருக்கின்றது. நம்முடைய நாமம் பரலோகத்தில் எழுதியிருப்பதை எண்ணி தினமும் நம்மால் ஆரவாரித்து பூரிக்க முடியவில்லை. காரணம், தேவன் அருவருக்கும் விக்கிரகங்கள் நமது வாழ்வில் உள்ளன. சங்கீதக்காரனைப் போல அதை தேவ சமூகத்தில் அலசி ஆராந்து கண்டு பிடித்தாக வேண்டும். (சங் 139 : 23, 24).

அந்நிய தேவர்களையும், விக்கிரகங்களையும் பின்பற்ற வேண்டாமென்று கர்த்தர் சாலொமோன் ராஜாவுக்கு இரண்டு விசை மாத்திரம் தரிசனமாகி எச்சரித்தார் (1 இரா 11 : 9) அதற்கு ராஜா கீழ்ப்படிய மறுத்தபோது அவர் அவனுக்கு எதிரியாகி அவனது ராஜ்யத்தை அவனிடமிருந்து பிடுங்கினார். ஆனால், நம் அன்பின் தேவன் நமது காரியங்களில் நாம் உடைத்து நொறுக்க வேண்டிய விக்கிரகங்களை குறித்து அடிக்கடி நமக்கு நினைப்பூட்டிக்கொண்டே இருக்கின்றார். நமது சொப்பனங்களில் நம்மை எச்சரிக்கின்றார் அல்லது நமது வாழ்வில் ஏதாவது ஒரு காரியத்தை நிகழச்செய்து நம்மை வெட்கப்பட வைத்து அல்லது துக்கப்பட வைத்து தாம் அருவருக்கின்ற விக்கிரகங்களை உடைத்து நொறுக்க நம்மை அன்பாக ஏவுகின்றார். ஆனால், நாம் உணர்வற்றவர்களாகவும் தேவனுக்கு கீழ்ப்படியாதவர்களுமாக இருந்து நமது இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டே இருக்கின்றோம். இனிமேலாவது நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிவோம். நமக்கும் நம் அருமை இரட்சகருக்கும் உள்ள பரலோக இன்ப உறவை சீர்குலைக்கும் எந்த ஒரு விக்கிரகமாக இருந்தாலும் அதை தேவ பெலத்தோடு எதிர்த்துப் போராடி அதை நமது பாதங்களுக்கு கீழ்ப்படுத்துவோம். விக்கிரகாராதனைக்காரர் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி 21 : 8) என்ற தேவ வசனமும், விக்கிரகாராதனைக்காரர் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை (1 கொரி 6 : 9, 10) என்ற கர்த்தருடைய வார்த்தையும் எப்பொழுதும் நமது காதுகளில் தொனித்துக்கொண்டே இருப்பதாக.

"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக" (1 யோ 5 : 21)

தேவ எக்காளம்

தேவ எக்காளத்தின் ஆண்டுச் சந்தா ரூபாய் 75 ஆகும்.
அனுப்ப வேண்டிய முகவரி :

N. SAMUEL
Editor "Deva Ekkalam"
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

உன் ஆகாரத்தை தண்ணீர்கள் மேல் போடு அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனை காண்பாய். (பிர 11 : 1)

கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்துக்கு எல்லா துதியும் உண்டாவதாக.

தேவனுடைய அளவற்ற கிருபையால் 1997, 1998, 1999 ஆகிய மூன்று ஆண்டுகளும் நாங்கள் ராஜஸ்தான் மாநிலம், பிக்கானீர் பட்டணம் சென்று, அங்கிருந்து தேஷ்நோக் என்ற சிறிய கிராமத்துக்கு பேருந்து பிடித்துச் சென்று அங்குள்ள கர்ணி மாதா எலிக்கோயில் பூஜாரி ஜகதீஷ் டாண் என்ற வாலிபனை தொடர்ந்து சந்தித்து வந்திருக்கின்றோம். தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய சுவிசேஷ பிரசுரங்கள் பலவற்றையும் நாங்கள் அவருக்கு கொடுத்துள்ளோம்.


கடந்த ஆண்டு (2000) எப்படியாவது நாங்கள் அவர்களை சந்தித்துவிட வேண்டும் என்ற எங்கள் பரிசுத்த ஆவல் நிறைவேறவில்லை. இப்படி தொடர்ச்சியாக நாங்கள் 3 ஆண்டுகள் ஜகதீஷ் டாணையும்



அவரது மனைவியையும் சந்தித்து வந்த கராணத்தால் எங்களது நட்பு மிகவும் நெருக்கமாகி விட்டது. சகோதரன் நார்ட்டன் அவர்களுக்கும்

எனக்கும் எலிக்கோயில் பூஜாரி அவர்களின் நட்பின் காரணமாக அந்தக் கோயிலுக்குள் மிகவும் தைரியமாகவும், உரிமையோடும் செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி நாங்கள் அந்த கோயிலில் பணி புரியும் இதர மக்களுக்கும் சுவிசேஷ பிரசுரங்களை 3 ஆண்டு காலமாக தவறாது ஜெபத்துடன் கொடுத்து வந்திருக்கின்றோம்.

இப்பொழுது நாங்கள் நேராக தேஷ்நோக் எலிக் கோயிலுக்குள்ளேயே சென்று ஜகதீஷை சந்திக்கின்றோம். எங்களைக் கண்டதும் அவரது சந்தோசம் எல்லை கடந்து சென்று விடுகின்றது. உடனேயே, கோயிலிலுள்ள இதர பணியாளர்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டு எங்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு சுமார் 1 கி.மீ. தொலைவிலுள்ள காட்டுப் பகுதியிலுள்ள தனது குடிசை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வந்து விடுகின்றார். ஜகதீஷ் டானை விட அவரது



மனைவிக்கு எங்கள் இருவர் மேலும் சிறப்பானதோர் அன்பு உண்டு. சுக செய்திகளை பறிமாறிக் கொண்டதும், பூஜாரியின் அன்பான மனைவி வீட்டிலுள்ள எல்லா பண்டம் பலகாரங்களையும் எங்களுக்கு முன்பாக கொண்டு வந்து வைத்துவிடும். ஜகதீஷ் தனது அன்பின் உச்ச கட்டமாக மதுபான பாட்டல் ஒன்றை எங்களுக்கு முன்பாக எடுத்து வைப்பார். 1998 ஆம் ஆண்டு சந்திப்பின் போது மதுபானம் நாங்கள் அருந்துவதில்லை என்று திட்டமாக கூறிய காரணத்தால் இப்பொழுது அதை அவர் கொண்டு வருவதில்லை.

"அக்கோயில் மாதம் மிரிந்து விட்டால், எனது மனைவி உங்கள் இருவரில் வரவை ஆவலாக எதிர் நோக்கி காத்திருக்கின்றாள். நாட்கள் கடந்து சென்ற சென்ற " நமது மகாத்துமாக்கள் இருவருமே எனது இல்லத்தில் வரவில்லை." என்று எனலாம். ஆனால் கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்று ஜகதீஷ்ட சாஸ்த்ரிகளிடம் சென்றிருக்கின்றார்.

3 ஆவது கால சந்திப்பால் அவர் நீங்கள் என்ன என்று நீங்கள் தொடர்ந்தால் கேட்பீர்கள்? இந்தச் சந்திப்புகள் தேவதூதர்களாலேயே நடைபெற்று வருகின்றது என்பதைத் தாங்கள் முழுமையாக விசுவாசிக்கின்றோம் வழக்கமாக எங்கள் அலைபேசி மணி அடித்து அந்த அன்பர்களின் மனதாங்கலை புரிந்து மகிழ்ந்து மகிழ்ந்து பின்னர் நாங்கள் எங்களுடனே எடுத்துச் செல்லும் விதவிதமான தேவதூதர்களை படங்களை தெரிந்தெடுத்து

அவர்களுக்கு கொடுக்கின்றோம். அன்பர்கள் இருவரும் அதை அன்பாகவும், கனத்தோடும் எங்களிடமிருந்து பெற்று ஒவ்வொரு பிரகாரத்தையும் கவனமாக பார்க்கின்றார்கள். எற்கெனவே நாங்கள் கொடுத்த படங்களை திருப்பி வரும் நாங்கள் அவர்களுக்கு பார்க்க கொடுத்தால் "இது எங்கள் வசம் உண்டு. இன்னும் பார்த்திருக்கின்றோம் நாங்கள் பார்க்காதவற்றை எங்களுக்குத் தாருங்கள்" என்று அவர் அவரோடு கேட்டு வாங்கி பார்த்திருந்து திரும்பி வைத்து பார்க்கின்றனர். ஜகதீஷ் சாஸ்த்ரிகளின் இதில் மிகவும் அதிகமாக ஆர்வம் கொண்டிருப்பார்கள். மற்று ஆவது கால மாக நாங்கள் கொடுத்த தேவதூதர்களை குறுகிய காலத்தில் பார்த்திருப்பதாக


வைத்துள்ளார்கள். நாங்கள் கொடுத்திருக்கும் இந்தி மொழி புதிய ஏற்பாடும் அவர்கள் வசம் உண்டு.

ஆரம்பத்தில் ஜகதீஷின் மனைவி தனது முகத்தை முக்காடிட்டு மூடியே எங்களிடம் பேசுவார்கள். ஆனால், இப்பொழுது எங்களை தனது தகப்பன் ஸ்தானத்தில் வைத்து திறந்த அன்பின் முகத்தோடு பேசுகின்றது. நாங்கள் அவர்களிடம் விடைபெறும் நேரம் வரும்போது அந்த அன்பான மகள் கண் கலங்குகின்றாள். எங்களுடனேயே தனது வீட்டு சுற்றுப்புற முள் வேலி ஓரம் வரை நடந்து வந்து எங்களது காட்சி மறையும் வரை அங்கேயே சோகமாக அந்த மகள் பார்த்துக் கொண்டிருக்கின்றாள். அன்பின் ஆண்டவர் இந்த பாசமுள்ள மக்களோடு தமது திருவசனங்களின் மூலமாக பேசி அவர்களை தமது மந்தையின் ஆடுகளாக்க நீங்களும் எங்களோடு சேர்த்து ஜெபித்து வாருங்கள்.

1999 ஆம் ஆண்டு நாங்கள் அங்கு எடுத்த 3 புகைப்படங்களை நீங்கள் இதில் காணலாம். ஜகதீஷின் குடும்ப படத்துடன், அவர் எலிக்கோயில் பணியில் இருக்கும் படத்தையும், மக்களால் அங்கு வணங்கப்படும் எலிகள் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட பாயாசத்தை குடிப்பதையும் நீங்கள் பார்க்கலாம்.

பேஜ்நாத்தில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்.

இமயலைகளிலுள்ள அல்மோரா பட்டணத்திலிருந்து 71 கி.மீ. தூரத்தில் 1125 மீட்டர் உயரத்தில் பேஜ்நாத் என்ற இடம் உள்ளது. இது



ஒரு பெரிய கிராமமாகும். கிராமத்தின் ஒரு புறத்தில் இமயமலையின் வெண் பனிச்சிகரங்கள் கெம்பீரமாக எழுந்து நிற்பது கண்கொள்ளா காட்சியாக உள்ளது. கோமதி மற்றும் கூரூட் என்ற இரு நதிகள் இங்கு சங்கமமாகின்றன. இந்த சங்கம ஸ்தானத்தில் இந்து மக்களின் கடவுள் ஒருவருடைய கலியாணம் நடைபெற்ற காரணத்தால் இந்த இடம் இந்து மக்களின் புண்ணிய ஸ்தலமாக விளங்குகின்றது. இது குறித்து விளக்கமாக நான் இங்கு எழுத விரும்பவில்லை.

இந்த கலியாணம் காரணமாக கோமதி நதியும், கூரூட் நதியும் புனிதமாகி இந்து ஜனங்களால் இந்த இரு நதிகளும், அவைகளிலுள்ள மீன்களும் வணங்கப்படுகின்றன. கோமதி நதிக்கரையில் அந்தக் கடவுளுக்கு ஒரு கூட்டம் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அவை நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பாக கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. இந்தச் செய்தியில் உள்ள படத்தில் நீங்கள் அதைக் காணலாம்.

பேஜ்நாத் கிராமத்துக்கு நாங்கள் முதன் முறையாக வந்தபோது அங்குள்ள கோசுவாமி என்பவரை நாங்கள் தேவ தயவால் சந்தித்தோம். கோசுவாமி ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர். இந்து மார்க்கத்தைச்



சேர்ந்தவர். 1997 ஆம் ஆண்டு நாங்கள் இவரை முதன் முதலாவதாக சந்தித்தோம். அதிலிருந்து கடந்த 4 ஆண்டு காலமாக நாங்கள் அவரது வீட்டிற்குச் சென்று அவரையும் அவரது அன்பான குடும்பத்தின்

மக்களையும் சந்தித்து தேவனுடைய சுவிசேஷம் அறிவித்து வருகின்றோம். 2 ஆண்களும், மோனிக்கா என்ற ஒரு அன்பான மகளும் அவருக்கு உண்டு. எங்களது நான்கு ஆண்டுகள் சந்திப்பின் காரணமாக நாங்கள் ஒரு அன்புக் குடும்பமாக ஒன்றிணைந்து விட்டோம்.


ஆண்டுக்கு ஒரு தடவை செல்லும் எங்களது வருகை அந்த அன்பு குடும்பத்தினருக்கு அத்தனையான ஒரு மகிழ்ச்சியான நாளாகும். பிள்ளைகள் மூவரும் எங்களை சூழ்ந்து கொண்டு விடுவார்கள். ராணுவத்தில் கோசுவாமி இருந்த காலத்தில் ராணுவத்தில் உள்ள தமிழ்க்



குடும்பங்களின் அன்பும், நட்பும் கிடைத்துள்ளது. அதின் காரணமாக தமிழர்களாகிய எங்களையும் அதிகமாக நேசிக்கின்றார்கள்.

வருடத்துக்கு ஒரு தடவை நாங்கள் அவர்கள் வீட்டுக்கு போனதும் எங்களை அருமையாக உபசரித்து மிகவும் அன்பு பாராட்டுகின்றனர். புறப்பட விடைபெறும்போது நெஞ்சம் நெகிழ்வதுடன் தங்கள் விளைநிலங்களில் விளைந்த தானியங்களை எங்களுக்குத் தர துடிதுடிக்கின்றனர். கடைசியாக நாங்கள் அங்கு சென்றிருந்தபோது " மகள் மோனிக்காவை உங்களுடன் தமிழ்நாட்டுக்கு அழைத்துச் சென்று அங்கு அவளை கலியாணம் செய்து கொடுங்கள்" என்று கோசுவாமியின் பாசம் நிறைந்த மனைவி மகளின் முன்னிலையில் தமாஷாக கூறினது இன்னும் எங்கள் நினைவில் உள்ளது.

இந்த அன்பான நட்பைக் கொண்டு பேஜ்நாத்தில் நாங்கள் தேவ தயவால் வேண்டிய மட்டும் தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை இதுவரை கொடுத்துள்ளோம். கோசுவாமி இந்துவாக இருந்தாலும் கிறிஸ்தவ மார்க்கம் சத்திய மார்க்கம் என்று முழுமையாக நம்பும் ஒரு மனிதராவார். அதின் காரணமாக அவரே எங்களிடம் சுவிசேஷ



பிரசுரங்களை கேட்டு வாங்கி ஊரிலுள்ள மக்களுக்கு கொடுக்கின்றார். கோசுவாமி தனது ஊரில் ஒரு தட்டெழுத்து நிலையம் வைத்து நடத்தி வருகின்றார். தன்னுடைய தட்டெழுத்து நிலையத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு கொடுக்க சுவிசேஷ பிரசுரங்கள் தேவை என்று எங்களுக்கு கடிதம் எழுதி எங்களிடமிருந்து அவைகளை வாங்கிக் கொடுத்து வருகின்றார். நாங்கள் தேவனுடைய பிரதிகளை பேஜ்நாத் கிராமத்தில் மிகவும் தைரியமாக கொடுக்க அவரது நட்பு எங்களுக்கு உதவி செய்கின்றது. ஏராளமான வாலிப பையன்களும், வாலிப பெண் மக்களும் எங்களிடமிருந்து பிரதிகள் பெற்று ஆவலோடு வாசித்துள்ளனர். அது குறித்து விவரமாக எழுதினால் பல பக்கங்கள் எழுத வேண்டும். கர்த்தருக்கே மகிமை.


மோனிக்கா தன்னுடன் படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு கொடுக்கவும், கோசுவாமியின் இரு குமாரரும் தங்களுடன் படிக்கும் மாணவர்களுக்கு கொடுப்பதற்காகவும் விதவிதமான இந்தி சுவிசேஷ பிரசுரங்களை எங்களிடமிருந்து வாங்கி அவைகளை கொடுத்து

வருகின்றனர். தேவனுடைய ஜீவ வித்துக்கள் இந்தக் கிராமத்தில் பரவலாக விதைக்கப்பட்டுள்ளன. பலனுக்காக நாங்கள் ஜெபித்து வருகின்றோம்.

இந்த அன்பான கோசுவாமி குடும்பத்தை தேவன் தமது மந்தையின் ஆடுகளாக்க எங்களுடன் சேர்ந்து நீங்களும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கோமதி, கரூட் நதி பாயும் பேஜ்நாத் இமயமலை கிராமத்தையும், தனது வீட்டுக்கு முன்பாக நிற்கும் கோசுவாமியின் அன்பான குடும்பத்தையும், தங்கள் கரங்களில் தேவனுடைய பிரசுரங்களுடன் காணப்படும் பேஜ்நாத் குழந்தைகள் சிலரையும் நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கலாம்.


கௌசானியில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

பேஜ்நாத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் மலை உச்சியில் கௌசானி என்ற ஒரு அழகான இடம் உள்ளது. கேதுரு மரங்களும், தேவதாரு விருட்சங்களும் இந்த கௌசானியை சூழ்ந்து நிற்கின்றன. பகல் 12 ஆம் மணி நேரத்திலேயே நமது பற்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் கடுங்குளிர் இங்கு வீசுகின்றது. இந்த இடத்திலிருந்து பார்த்தால் இமயமலைகளின் பல வெண்பனி சிகரங்களை நாம் காணலாம். இந்த இடத்தின் அழகால் கவரப்பட்ட மகாத்துமா காந்தி அடிகள் சில வாரங்கள் இங்கு தங்கியிருந்து "அனசக்தி" என்ற ஒரு நூலை எழுதியதாக சொல்லப்படுகின்றது. "இப்படிப்பட்ட ஒரு அழகான இடம் நமது இந்திய தேசத்தில் இருக்கும்போது இந்திய மக்கள் அழகான இடங்களை தேடிக்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லுவது வேடிக்கையும் விந்தையாகவும் இருக்கின்றது" என்று காந்தி கூறியிருக்கின்றார். அவர் 1929 ஆம் ஆண்டு இங்கு தங்கியிருந்த இடம் இப்பொழுது ஒரு தியான நிலையமாக உள்ளது. சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் அந்த



தியானக்கூடத்துக்கு சென்று எங்கள் முழங்கால்களை முடக்கி அந்த அழகிய மலை நாட்டை கர்த்தர் சந்திக்கும்படியாக ஜெபித்து வந்தோம். காந்தி அடிகள் தங்கியிருந்த இடத்தை நீங்கள் இந்த செய்தியில் காணலாம்.

இந்த அழகான கௌசானியில் ஒரு நாளாவது இராத் தங்கி தேவ ஊழியம் செய்யலாம் என்ற ஆசையில் அங்குள்ள சில லாட்ஜ்களை அணுகி விசாரித்தோம். ஆனால், நாள் ஒன்றுக்கு ரூபாய் 1000 க்கும் அதிகமாகவும், குறைந்த பட்சம் 500 ரூபாய்க்கும் அதிகமாக அவர்கள் கூறியபடியால் அந்த ஆசையை கைவிட்டுவிட்டு ஒவ்வொரு தடவையும் பேருந்தில் வந்து இங்கு ஊழியம் செய்துவிட்டு மாலை நேரம் மலை அடிவாரம் திரும்பிவிட்டோம். இந்த கௌசானிக்கு நாங்கள் மூன்று



ஆண்டுகள் தொடர்ச்சியாக வந்து சுவிசேஷ பிரசுரங்கள் கொடுத்து தேவ ஊழியம் செய்து வந்திருக்கின்றோம். கௌசானிக்கு சற்று தொலைவில் ஒரு ராணுவ பாசறை இருப்பதால் ஒரு ராணுவ அதிகாரிக்கு சுவிசேஷம் அறிவிக்க எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. சகோதரன் நார்ட்டன் அவர்கள் அவருக்கு சுவிசேஷம் அறிவித்தார்கள்.

மேலே குறிப்பிட்ட காந்தி தியான கூடத்தை ஒட்டி காந்தி ஆச்சிரமம் ஒன்றும் உள்ளது. நாங்கள் கிறிஸ்தவர்களானதால் அங்கும் தங்க இடம் கிடைக்கவில்லை. இங்குள்ள காந்தி ஆச்சிரம பணியாளர்கள் பலருக்கும் கர்த்தருடைய பிரசுரங்களை கொடுத்துள்ளோம். தனக்கு கிடைத்த ஒரு இந்தி மொழி சுவிசேஷ பங்கை மிகுந்த ஆவலோடு

வாசிக்கும் ஒரு காந்தி ஆச்சிரம வாசியின் படத்தை நீங்கள் இங்கு காணலாம்.

மேல்நாட்டு வாலிபன் ஒருவனை நாங்கள் இங்கு சந்தித்தோம். கழுத்திலே உருத்திராட்ச கொட்டை அணிந்திருந்த அவனை நாங்கள் அணுகி " நீ ஒரு கிறிஸ்தவன்தானே?" என்று கேட்டோம். அதற்கு அவன் மாறுத்தரமாக "நான் ஒரு கிறிஸ்தவ இந்து" என்று கூறினான். மூகாம்பிகை என்ற தெய்வத்தை தான் வணங்குவதாக சொன்னான். இப்படிப்பட்ட மக்களுடைய நடமாட்டம் காரணமாக தேவனுடைய பரிசுத்த நாமம் புற மதஸ்தர்கள் மத்தியில் வெகுவாக கனவீனம் பண்ணப்பட்டு இழிவாக எண்ணப்படுவதுடன் ஆத்தும பாரத்தோடு நாம் செய்யும் தேவ ஊழியங்களுக்கும் பலத்த முட்டுக்கட்டை ஏற்படுகின்றது.

நாம் இந்து மக்களுக்கு சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசு இரட்சகரண்டை வரும்படி அழைப்பு விடும்போது அந்த இந்து மக்கள் கிறிஸ்தவத்திலிருந்து விலகி வந்து மூகாம்பிகையை வணங்கும் கிறிஸ்தவ இந்துவாகிய மேல்நாட்டு வாலிபனை நமக்கு சுட்டிக் காண்பித்து நிற்கின்றனர். ஓ, தந்திர சாத்தான் சுவிசேஷத்தின் மதுர வாசனையை எப்படி எல்லாம் கெடுத்து வைத்திருக்கின்றான் பாருங்கள்! கர்த்தர் தான் தமது ஜனத்துக்கு இரக்கம் செய்ய வேண்டும். கௌசானியில் கொடுக்கப்பட்டுள்ள சுவிசேஷ பிரசுரங்கள், செய்யப்பட்டுள்ள ஊழியங்கள் 30, 60, 100 மான பலனை கொடுக்க அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

I AM THE WAY (John 14 : 6)

A missionary was travelling through unfamiliar territory in the middle of the night. As he followed his guide, he glanced down at his feet and could not see a path. When the missionary looked up at the guide, he noticed that the guide was turning this way and that way. Fearing that the guide had lost his sense of direction, the missionary cried out, "Where is the way?" The guide answered, "I am the way! There is no beaten path here. Just follow me step by step, and you will arrive safely".

மேற்கு வங்கத்தில் நடைபெற்ற தேவ ஊழியங்களும் கர்த்தர் எங்களுக்கு கற்றுக்கொடுத்த பாடங்களும்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு எல்லா துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக. ஆமென். இந்த தடவை நாங்கள் எங்கள் இமயமலை தேவ ஊழியங்களை மேற்கு வங்காளத்திலுள்ள சிலிகுரி என்ற பட்டணத்திலிருந்து ஆரம்பித்தோம். வங்காள மாநிலத்துக்குத் தேவையான வங்காள மொழி சுவிசேஷ பிரசுரங்களை நாங்கள் டில்லியில் வாங்கிக் கொண்டோம். நாங்கள் எங்கள் தேவ ஊழியங்களை சிலிகுரியிலிருந்து தொடங்குவது தேவனுடைய சித்தமாக இருந்தது. எங்களுடைய இந்த ஊழியத்தின் கூடவே சில மேலான தேவ சத்தியங்களையும் கர்த்தர் எங்களுக்கு விளக்கிக் காண்பித்தார். கர்த்தர் எங்களுக்கு கற்றுத்தந்த காரியங்களை உங்களுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதத்துக்காக உங்களுடன் அவைகளைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

சிலிகுரி, நியூ ஜால்பைகுரி என்ற இடங்களில் நாங்கள் சில தினங்கள் தங்கியிருந்து தேவ ஊழியம் செய்துவிட்டு அங்கிருந்து 2 அல்லது 3 மணி நேர பயண தூரத்தில் அமைந்துள்ள டார்ஜிலிங் என்ற மலைமேல் கட்டப்பட்டுள்ள பட்டணத்திற்குச் சென்றோம். டார்ஜிலிங் போகும் மலை ரஸ்தா ஓரமாக ஓரிடத்தில் ஒரு கல்லறைத் தோட்டத்தை நாங்கள் கண்டோம். அங்குள்ள கல்லறைகளில் ஒன்று ஒரு அழகிய சின்னஞ்சிறு வீடாக கட்டப்பட்டு அழகான வர்ணங்கள் பூசப்பட்டிருப்பதை நாங்கள் கண்ணுற்று அதிசயித்தோம். அந்தச் சிறிய வீட்டுக்கு முன்னால் காற்றோட்டமான வராந்தா மற்றும் பின் பக்க அழகிய கொல்லைப்புறம் எல்லாம் கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கொள்ளை கொள்ளுவதாக இருந்தன. மரணத்துக்குப் பின்னர் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள மனிதனின் ஆவி அந்த வீட்டில் தங்கி குடியிருக்க வசதியாக ஒருக்கால் அந்த வீட்டை அறியா பேதை மக்கள் கட்டியிருந்தாலும், மரணத்துக்குப் பின்னால் ஒரு வாழ்க்கை நிச்சயமாக உள்ளது என்பதை இவ்வுலகத்தின் மாந்தர் பலரும் திட்டமாக நம்புகின்றனர்.

சுற்றுலா இடமான டார்ஜிலிங் பட்டணத்திற்கு நாங்கள் சென்றதின் முக்கியமான நோக்கம் அங்குள்ள இடங்களை கண்டு களிக்க

அல்ல. 100 வருடங்களுக்கு முன்பு இந்தப் பட்டணத்தில் தான் மிஷனரிகளான குருவானவர் லீயும், அவரது அபிஷேகம் பெற்ற மனைவி அடா லீ அம்மையாரும் தங்களது பரிசுத்தமும், பக்தியும் நிறைந்த 17, 15, 13, 11, 8, 5 வயதுடைய விடா, லூயிஸ், வில்பர், ஹெர்பர்ட், யுனைசி, எஸ்தர் என்ற தங்கள் ஆறு அன்பு பிள்ளைகளையும் ஜெசுதர் என்ற தங்கள் வங்காள பணிப்பெண்ணையும் டார்ஜிலிங் பட்டணத்தில் ஒரு பயங்கர நிலச்சரிவில் இழந்தனர். அந்தக் கொடிய வியாகுல நேரத்தின் போதும் பரிசுத்த மிஷனரிகள் தங்கள் விசுவாசத்திலிருந்து சற்றும் நிலை தடுமாறவில்லை. ஒரு பிள்ளையை இழந்தாலே தங்கள் கர்த்தரை தூஷித்து அவரை சபித்து சாபமிடும் இந்த நாட்களில் தங்கள் 6 அன்பு மக்களையும் ஒரே இராக்காலத்திலேயே இழந்த அந்த பரிசுத்த மிஷனரி தம்பதியினர் தங்கள் விசுவாசத்திலிருந்து சற்றும் நிலை தடுமாறவில்லை. மாறாக தங்கள் அருமை நேசரைஇன்னும் அதிகமாக நேசிக்க உறுதி பூண்டு தங்கள் வாழ்க்கையை தங்கள் அன்புக்கர்த்தருக்கு மீண்டும் ஒரு முறைதானும் புதிதாக அர்ப்பணம் செய்தனர். இந்தச் செய்தியை கடந்த நாட்களில் படங்களுடன் தேவ எக்காளத்தில் எழுதியிருக்கின்றதை உங்களில் பலரும் அறிவீர்கள். 1999 ஆம் ஆண்டு தேவ எக்காளத்தில் கூட நான் இந்த செய்தியை வெளியிட்டிருக்கின்றேன்.


மேற்கண்ட அருமை பிள்ளைகள் மாண்டு போன இடத்தைக் காணவும், உங்களுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதத்துக்கு பயனுள்ள ஏதாவது தகவல்களைப் பெறலாம் என்ற தாகத்தோடும் நாங்கள்அங்கு சென்றோம். ஆனால், அந்த பிள்ளைகளுக்கான நினைவுக்கூடம் கல்கத்தா பட்டணத்தில் கட்டப்பட்டிருப்பதாக எங்களுக்கு சொன்னார்கள். நிலச்சரிவு ஏற்பட்ட இடம் இன்று ஜனப்பெருக்கம் நிறைந்த தெருக்களாக மாற்றம் பெற்றுவிட்டன.

ஆந்திர மாநிலம் வெங்கட் நரசையாவுக்கு சுவிசேஷம் அறிவித்தது

டார்ஜிலிங் பட்டணத்தில் நாங்கள் வெங்கட் நரசையா என்ற சுதந்திர போராட்ட தியாகி ஒருவரை சந்தித்தோம். ஆந்திர மாநிலத்தை சேர்ந்த விருத்தாப்பியனான அவர் இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் தேச விடுதலைக்காக பாடுபட்டு பல முறை சிறை சென்றவர். ஆந்திர அரசாங்கம் அவருக்கு தியாகி பட்டம் கொடுத்து இந்தியாவின் எந்தப்பகுதிக்கும் சென்று வர ரயிலில் ஏர்கண்டிஷன் வகுப்பில்

இலவசமாக பிரயாணம் செய்ய அவருக்கு பாஸ் கொடுத்துள்ளது. அதின் உதவியாலேயே அவர் டார்ஜிலிங் பட்டணம் வந்திருந்தார்.

நாங்கள் அவரை சந்தித்து சுவிசேஷம் அறிவிக்க கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். மனைவியை மரணத்தின் மூலமாக இழந்த அவர் மிகவும் துக்கமுடையவனாக காணப்பட்டார். வைராக்கியமுள்ள இந்து குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவர் இதுவரை எந்த ஒரு இந்து தேவதா தேவிகளை கையெடுத்து கும்பிட்டதே கிடையாது என்று சொன்னபோது



எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. நெற்றியில் எந்த ஒரு குங்கும பொட்டோ திருநீரோ பூசாமல் இருக்கின்றார். தான் எந்த ஒரு மார்க்கத்திலும் இல்லை என்று கூறினார். சில வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மார்க்கத்தை குறித்து ஆராய நினைத்து நரசையா தேவனுடைய பரிசுத்த வேதாகமத்துக்கு திரும்பியிருக்கின்றார். ஆனால், வேதாகமம் குரான், பகவத் கீதை போன்று ஒன்றல்ல, 5 வகையான வேதாகமங்களை தான் கண்டதால் குழப்பமடைந்து கிறிஸ்தவ மார்க்கத்தை தொடர்ந்து ஆராய்ச்சி செய்ய மனமற்று கைவிட்டு விட்டதாக எங்களிடம் கூறினார்.

"வேத புத்தகம்" ஒன்றே ஒன்றுதான். அதை அதின் மூல பாஷைகளிலிருந்து சிறப்பாக மொழி பெயர்த்து மிகவும் மேன்மையான மொழி பெயர்ப்புகளை மக்களுக்குத் தரும்படியாக வேத விற்பனர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அதின் விளைவுதான் நீங்கள் பார்த்த 5 வகையான

திருப்புதல்கள் மாத்திரமே. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தேவன் என்றும் மனிதரின் பாவம் போக்க தமது ஜீவனையே வெகு அன்பாக தத்தம் செய்த ஆண்டவர் இயேசுவுக்கு இணை உலகில் எவரும் கிடையாது. எந்த ஒரு மனிதன் தனது பாவம் நீங்க அவரண்டை வரும்போது அவர் அவனை தனது சொந்த பிள்ளையாக ஏற்று அவனுக்கு பாவ மன்னிப்பை அளித்து, உலகம் தரக்கூடாத தேவ சமாதானத்தால் அவனை நிரப்பி அவனுக்கு நித்திய ஜீவ வாழ்வை அருளுகின்றார். அதற்கு நாங்கள் இருவரும் சாட்சிகளாக இருக்கின்றோம். அந்த நற்செய்தி கூறவே நாங்கள் டார்ஜிலிங் பட்டணம் வந்ததாக அவரிடம் கூறினோம்". அவரும் அதை ஏற்றுக்கொண்டார். ஒரு நாள் முழுவதும் எங்களோடிருந்த அவர் நாங்கள் சுவிசேஷ பிரசுரங்கள் கொடுத்து ஊழியம் செய்வதை உன்னிப்பாக கவனித்தார். அவருக்கான உணவு, செலவுகளையும் நாங்களே ஒரு நாள் முழுவதும் ஏற்று தேவனுடைய அன்பை திரும்ப திரும்ப அவருடன் பகிர்ந்து கொண்டோம். தொடர்ந்து கர்த்தர் அவரோடு பேச நீங்களும் அவருக்காக அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள். வேதாகம சங்கத்தின் மூலமாக அவருக்கு ஒரு தெலுங்கு மொழி புதிய ஏற்பாட்டையும் தபாலில் அனுப்பி இருக்கின்றோம். தனது கழுத்திலே சால்வை போட்டிருக்கும் நரசையாவை நீங்கள் இந்த செய்தியில் காணலாம்.

கண்களை குளமாக்கிய பனிமலை ஏற்றக்காரரின் கூடாரம்.

டார்ஜிலிங் என்ற இமயமலைப்பட்டணத்தில் "இமயமலை மலை ஏற்றக்காரர்களின் ஸ்தாபனம்" என்றதொரு மலை ஏற்ற பயிற்சி பள்ளி ஒன்று உள்ளது. மலை ஏற்ற வீரர்களுக்கு எவ்வண்ணமாக உயரமான மலைச்சிகரங்களை ஏற வேண்டும் என்ற பயிற்சி இங்கு அளிக்கப்படுகின்றது. இமயமலைகளின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரத்தை முதன் முதலாவதாக 1953 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் நாள் ஏறி வெற்றி கண்ட "பனிப்புலி" என்றழைக்கப்படும் டென்சிங் நார்கே என்ற மலை ஏற்றக்காரரின் சமாதியும், அவரது முழு உருவச்சிலையும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த மலை ஏற்ற ஸ்தாபனத்தை டென்சிங் நார்க்கேயே தலைமைப் பொறுப்பேற்று பல்லாண்டு காலமாக நடத்தி அநேக இளைஞர்களை மலை ஏற்றத்துக்கு பழக்கிவிட்டிருப்பதாக அந்த ஸ்தாபனத்தின் சரித்திரம் கூறுகின்றது. நமது

இந்திய ராணுவ வீரர்கள் கூட இந்த மலை ஏற்ற ஸ்தாபனத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றதை நாங்கள் நேரில் பார்த்தோம்.


எவரெஸ்ட் சிகரத்தை உலகின் முதல் வீரனாக ஏறி இந்திய நாட்டின் தேசிய கொடியை அக்கொடுமுடியில் ஏற்றி இந்தியாவுக்கு பெருமை சேர்த்த டென்சிங் நார்கே தனது எவரெஸ்ட் பயணத்தின்போது



பயன்படுத்திய அவரது பனி கோடரி, கரிய மூக்கு கண்ணாடி, இரும்பு கூர் முட்களால் நிறைந்த அவரது கனமான சப்பாத்துக்கள், புகைப்படக் கருவி, திசைகாட்டும் கருவி, குளிர் புக இயலாத அவரது தோல் ஆடைகள் போன்றவை பார்வையாளர்களின் பார்வைக்காக அங்கு வைக்கப்பட்டுள்ளதை நாங்கள் கண்டோம்.

அங்கு நாங்கள் கண்ட காட்சிகளில் எங்கள் கண்களுக்கு கண்ணீரை வருவித்த ஒரு காட்சி என்னவெனில், எவரெஸ்ட் பனி மலைச்சிரகத்தை வெற்றி கொள்ள பயணப்படும் ஒரு மலை ஏற்றக்காரன் பனிக்கட்டிக்குள் இரவில் நித்திரை கொள்ளும் ஒரு காட்சியாகும். உண்மையாகவே ஒரு கூடாரத்தை அமைத்து மெழுகினால் உருவாக்கப்பட்ட ஒரு மனிதனையும் நித்திரை கொள்ளும் விதத்தில் படுக்க வைத்திருக்கின்றார்கள். அவனைச் சுற்றியுள்ள பொருட்கள் அனைத்தும் உண்மைப் பொருட்களாக உள்ளன. தனது பனி கூடாரத்துக்குள் ஆக்சிஜன் உதவியோடு சுவாசித்துக் கொண்டு செத்தவனைப் போல

வானத்தை அண்ணாந்து பார்த்த நிலையில் படுத்திருக்கும் அந்தக்காட்சி நம்மை உருக்குவதாக இருக்கின்றது. பகற்காலம் முழுவதும் அவனுக்கு மலை ஏற்றத்தில் பயன்பட்ட பனி கோடரி, வலுமையான கயிறுகள் அவனது கால்மாட்டில் வைக்கப்பட்ட நிலையில் தேயிலை, காப்பி பானம்



தயாரிக்க தேவையான இரும்பு கெட்டில், பால் பவுடர் போன்றவை அவனுக்கு அருகில் இருக்க அவன் படுத்திருப்பதை நாம் காண முடிகின்றது. இரவோடு இரவாக அவனது தலைக்கு மேல் எழுந்து நிற்கும் பனிமலைச்சிகரங்களில் ஏதாவது ஒன்றில் சரிவு ஏற்பட்டு அவன் அப்படியே வாரிக்கொண்டு போகப்படலாம் அல்லது நித்திரை செய்த வண்ணமாகவே சமாதியாகிப் போனாலும் போகலாம். ஆனால் அவன் தனது ஜீவனைக் குறித்து அஞ்சாமல் தனக்கு முன்னாலுள்ள இமயத்தின் எவரெஸ்ட் சிகரத்தை எப்படியாவது ஏறி வெற்றி கொண்டுவிட வேண்டும் என்ற உறுதியான துணிச்சலோடு அதற்காக தனது ஜீவனையே அர்ப்பணித்த நிலையில் படுத்திருக்கின்றான். கூடாரத்தில் படுத்திருக்கும் மனிதன் தனது வசதிபோல அங்கும் இங்கும் புரண்டுபடுத்து சுகமாக நித்திரை செய்ய முடியாது. காரணம், அவனது ஜீவ சுவாசம் ஒரு கருவியின் மூலமாக அவனது மூக்கினுள் சென்று கொண்டிருக்கின்றது. அவன் மல்லாந்து படுத்திருந்தால்தான் அவன் உயிர் பிழைக்க கூடும். அப்போஸ்தனாகிய பரிசுத்த பவுலுடைய வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் "கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன்" (கலா 2 : 20) என்ற சிலுவை வாழ்க்கையே இப்பொழுது அவனது பங்கு.

உலகத்தின் பெயர், புகழை அடைவதற்காக மாந்தர் இவ்விதமாக துணிச்சலான வீர தீர செயல்களில் ஈடுபடுகின்றனர். இப்படிப்பட்ட புகழ், கீர்த்தி, பெயர் பிரஸ்தாபம் அனைத்தும் காலப்போக்கில் மக்களால் முற்றும் மறக்கப்பட்டு மறைந்தே போகும். அப்படியிருப்பினும் லோக மாந்தர் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் தங்கள் வாழ்க்கைகளை அர்ப்பணித்துக்கொண்டே இருக்கின்றனர்.

முடிவில்லாத நித்தியத்தை ஆண்டவர் இயேசு இரட்சகரோடு பரலோகத்தில் களிக்க ஒரு கிறிஸ்தவன் இந்த உலக வாழ்வில் எத்தனையான பாடுகள் தியாகங்களோடு கடந்து செல்ல வேண்டும் என்பதை அந்தக் கூடாரம் எங்களுக்கு நினைப்பூட்டிற்று. " அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலி 2 : 12) என்றும் "என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (1 கொரி 9 : 27) என்றும் "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது" (1 கொரி 6 : 12) என்றும் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் எழுதிய வரிகளின்படி நாமும் இந்த உலக வாழ்வில் அனுதினமும் சிலுவை சுமந்து கொண்டு அனுதினமும் சுயத்துக்கு மரித்த நிலையில் இலக்கை நோக்கி தொடர ஏவி எழுப்பப்படுகின்றோம். இமயமலை மலை ஏற்றக்காரர்களின் ஸ்தாபனத்தின் முகப்பு தோற்றத்தையும், பனி மலைச் சிகரம் ஏறும் மனிதனின் கூடாரத்தையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

டென்சிங் நார்கே என்பவரின் சமாதியை காண வந்திருந்த மக்களுக்கு நமது சகோதரன் நார்ட்டன் அவர்கள் தேவனுடைய சுவிசேஷ துண்டுப்பிரதிகளை தைரியமாக விநியோகித்தார்கள். பல மாநிலங்களிலிருந்து அங்கு வந்திருந்த மக்கள் அவைகளை ஆர்வத்தோடு வாங்கி வாசித்தனர்.

இதயத்தை தொட்டதோர் வாசகம்.


நாங்கள் பார்த்த மேற்கண்ட மலை ஏற்றக்காரர்களின் ஸ்தாபனத்தின் சுவர் ஒன்றில் ஒரு வாசகம் தொங்கவிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அந்த வாசகத்தின் படத்தை நீங்கள் படத்தில் காணலாம்.

"உன்னால் முடியுமானால் மலை ஏறு, விவேகமில்லாத முரட்டுத் துணிச்சலும், பெலனும் மலை ஏற்றத்துக்கு பயன்படாது. ஒரு கணப் பொழுது கவலையீனம் வாழ்நாட் காலத்தின் முழுமையான சந்தோசத்தை அப்படியே ஒன்றுமில்லாமல் துடைத்து வாழ்வையே அழித்துப் போடும். ஆத்திரத்தில் எதையுமே செய்யாதே. ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கு முன்னர் மிகவும் கவனமாக, நிதானமாக எடுத்து வை. முடிவு என்னவாக இருக்குமென்று ஆரம்பத்திலிருந்தே சிந்தித்து செயல்படு"

நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு மிகவும் பயனுள்ளதோர் வாசகமாக இது உள்ளது. "முரட்டுத் துணிச்சல், நமது சொந்த பெலன்" நமது கிறிஸ்தவ வாழ்வில் ஒரு செப்புக் காசுக்கும் பயன்படாது. "கர்த்தர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார், வீரருடைய கால்களில் அவர் பிரியப்படார்" (சங் 147 : 10) என்று கூறின தாவீது ராஜா "என் வில்லை நான் நம்பேன் என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை" (சங் 44 : 6) என்று சொல்லுவார். பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் தன்னை கொல்ல வந்த மா வீரன் கோலியாத்திடம் "கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல" (1 சாமு 17 : 47) என்று அவர் கூறுவதை நாம் காண்கின்றோம். "பெலத்தினால் ஒருவனும் மேற்கொள்ளுவதில்லை" (1 சாமு 2 : 7) என்று சாமுவேல் தீர்க்கனின் தாயார் அன்னாள் பாடினார்கள். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" (சகரியா 4 : 6) என்று செருபாபேலிடம் கர்த்தரின் தூதன் பேசுவார்.

"என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோ 15 : 5) என்று ஆண்டவர் திட்டமும் தெளிவுமாக கூறியிருக்கின்றார். நமது கிறிஸ்தவ ஆவிக்குரிய பரிசுத்த வாழ்வில் நம்மை வழுவாதபடி பாதுகாத்து தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நிறுத்த வல்லமையுள்ள கர்த்தருடைய (யூதா 24) கிருபைக்கு நம்மை தினந்தோறும் ஒப்புவித்து அவரின் பொன் முகம் நோக்கி முன்னேறுவதே கிறிஸ்தவ வெற்றி வாழ்வின் இரகசியமாகும்.

"ஒரு சிறிய கவலையீனம் உனது முழு வாழ்க்கையையுமே அழித்துப்போடும்" என்ற வார்த்தை நமக்கு ஒரு பெரிய எச்சரிப்பாகும். நட்சத்திரங்களாக ஜொலித்த எத்தனை பரிசுத்த பக்தர்கள் தங்களது சிறிய கவலையீனம், சிறிய விழிப்பற்ற நிலை, மெத்தனம் காரணமாக உயரமும் உன்னதமுமான ஸ்தானங்களிலிருந்து அதல பாதாளங்களில்




வீழ்ந்துவிட்டார்களே! முக்கியமாக, சிற்றின்ப பாவங்களுக்கு இடங்கொடுத்து எத்தனை தேவ ஊழியர்கள் நொறுங்கி சிதறுண்டு போனார்கள். விபச்சார பாவம் இரவோடு இரவாக அவர்களை மேய்ந்து இருந்த இடம் தெரியாமல் அவர்களை செய்துவிட்டதே. கிறிஸ்தவ பரிசுத்த வாழ்க்கையை நாம் எத்தனை விழிப்போடும், ஜாக்கிரதையாகவும் பேணி பாதுகாக்க வேண்டியதாக இருக்கின்றது. விழித்திருங்கள், விசுவாசத்தில் புருஷராயிருங்கள் என்று அப்போஸ்தலன் நம்மை எச்சரிக்கும் எச்சரிப்பின் குரல் நமது காதுகளில் எப்பொழுதும் தொனித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல நான் உங்களைத் தேற்றுவேன் (ஏசாயா 66 : 13)

டார்ஜிலிங் பட்டணத்தின் நுழை வாயிலில் ரயில்வே நிலையத்துக்கு மேலாக மலை உச்சி பகுதியில் பரிசுத்த கொலம்பஸ் தேவாலயம் இருக்கின்றது. ஸ்காட்லாந்து தேச மிஷனரிகளால் 106 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட இந்த தேவாலயம் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றது. தேவாலயத்தின் ஆர்கன் வாத்திய இசைக்கருவிக்கு 26 உயரமான பைப்புகள் இருக்கின்றன.

தேவாலயத்தின் கிராதி அறையில் உள்ள 3 நீண்ட ஜன்னல்களில் 23 ஆம் சங்கீதம் சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன. பெல்ஜியம்

நாட்டில் வரையப்பட்ட அந்த ஓவியங்கள் நமது கண்களுக்கும், ஆத்துமாவுக்கும் பரவசம் அளிப்பதாக உள்ளன. விசேஷமாக "அவர் என் ஆத்துமாவை தேற்றி தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" என்ற 3 ஆம் வசனத்துக்காக வரையப்பட்ட சித்திரம் நமது உள்ளத்தை கொள்ளை கொள்ளுவதாக உள்ளது. குத்தி



வேதனைப்படுத்தக் கூடிய கூர்மையான நீண்ட முள் கொடிகளால் ஆடு நன்கு சூழப்பட்டிருப்பதையும், அதின் பெலத்தால் அந்த முட்கொடிகளை விலக்கிக் கொண்டு ஆடு வெளியே வர முடியாத ஒரு துயரமான நிலையில் நல்ல மேய்ப்பன் இயேசு இரட்சர் அதினண்டை தாழ குனிந்து கூர் முட் கொடிகளை தமது கரங்களால் விலக்கி அப்புறப்படுத்தி ஆட்டை வெளியே கொண்டு வர பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கும் அன்பின் காட்சி நமக்கு மிகவும் ஆறுதலை தருவதாக இருக்கின்றது.

உலகத்தின் துன்பம், துக்கம், பாடுகள், வியாதிகள், நெருக்கங்களில் சிக்கி அதிலிருந்து வெளி வர வழி தெரியாமல் அங்கலாய்த்து நிற்கும் கர்த்தருடைய பிள்ளைகள் யாவருக்கும் நேச இரட்சகராம் நல்ல மேய்ப்பனின் ஆறுதல்களும் அரவணைப்புகளும் எத்தனை நிச்சயமாக உண்டு என்பதை அந்தக் காட்சி சித்தரிப்பதாக உள்ளது.

ஆண்டவர் இயேசுவை தனது ஆத்தும மணவாளனாக ஏற்று அவரில் ஜீவிக்கும் அவரது அன்பு தேவ மக்கள் யாவரும் பாடுகளின்

ஊடாகத்தான் பரலோகம் செல்ல வேண்டும் (அப் 14 : 22, யோ 16 : 33) அதற்கு மாற்று வழி வேறு எதுவுமே இல்லை. கிறிஸ்தவ வாழ்க்கை ரோஜா மலர்கள் வழி நெடுகிலும் தூவப்பட்டு, பாதங்கள், கற்கள் முட்களில் படாதவாறு செல்லும் சொகுசு பிரயாண வாழ்க்கை அல்ல. துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாக இந்த பூலோகத்தை கடந்து சென்ற இரட்சகர் இயேசுவின் அடியார்களான நாமும் அந்த வழிதான் சென்றாக வேண்டும் (ஏசா 53 : 3) எனினும், உலகத்தின் பாடு துயரங்கள் நம்மை ஆழ்த்தி அழித்துவிடாதபடி நம் நேச தகப்பன் நமது துன்ப துயர வேளைகளில் நம்மோடிருந்து (ஏசாயா 43 : 2) நம்மை கண்ணின் மணி போல பாதுகாத்துக் கொள்ளுவார். பரிசுத்த கொலம்பஸ் தேவாலயத்தின் கிராதி ஜன்னல் கண்ணாடிகளின் படம் இங்கு இடம் பெற்றுள்ளது.

வாழ்விலே என்றுமே மறக்க முடியாத ஒரு காட்சி

இமயமலைகளின் பனி மூடிய சிகரங்களை பின்னணியமாகக் கொண்டு நிற்கும் ஒரு வைராக்கியமான இந்து பட்டணத்தில் ஒரு கிறிஸ்தவ தேவ ஊழியரும் அவரது மனைவியும் அங்கு தனித்து ஊழியம் செய்கின்றனர். ஒரு கிறிஸ்தவ மிஷனரி ஸ்தாபனம் அவர்களின் ஊழியத்தை தாங்குகின்றது.

அன்று கர்த்தருடைய பரிசுத்த ஓய்வு நாள். சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் அந்த தேவ ஊழியருடைய வீட்டிற்கு அங்கு நடக்கும் ஆராதனையில் பங்கு கொள்ளச் சென்றோம். சிறிய ஜெப அறை ஹால் முழுவதும் விசுவாசிகள் அமர்வதற்காக பாய்கள் விரிக்கப்பட்டு ஆங்காங்கு இந்தி மொழி பாட்டுப் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. முதியோர், கனம் பொருந்தியவர்கள் அமர பின் பக்கத்தில் சில நாற்காலிகளும் போடப்பட்டுள்ளன. கைத்தாளம் கொட்டி பாடக்கூடியவர்களுக்காக ஜாலராக்களும் பாய்களில் ஒன்றிரண்டு வைக்கப்பட்டுள்ளன.

ஆராதனை வேளைக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் அந்த அறை முழுவதும் விசுவாசிகள் வந்து நிறைந்து விடுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் சகோதரனும், நானும் எங்கள் முழங்கால்களிலேயே ஜெப நிலையில் இருந்தோம். ஆனால் அப்படி எவருமே வரவில்லை. ஆராதனை ஆரம்பமாவதற்கான வேளை வந்தது.

தேவ ஊழியர் ஜெபத்தோடு ஆராதனையை ஆரம்பித்தார். பல ஆங்கில மற்றும் இந்தி மொழி பல்லவிகளை பாடின பின்னரும் எவருமே வரவில்லை. தனித்தனியே நாங்கள் ஜெபித்த பின்னர் தேவ ஊழியர் "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போல இருக்கின்றான்" (நீதி 25 : 28) என்ற வசனத்தின் பேரில் பிரசிங்கித்தார். பிரசங்கத்தை தொடங்குவதற்கு முன்னர் "இன்று இங்கு 4 ஆயிரம் பேர் ஆராதனைக்கு வந்திருக்கின்றார்கள் என்ற விசுவாசத்தின் கண்ணோட்டத்தோடு பிரசிங்கிக்கின்றேன்" என்று கூறி தனது செய்தியை ஆரம்பித்தார்.

சுமார் 2 மணி நேர ஆராதனையில் தேவ ஊழியர், அவரது மனைவி, சகோதரன் நார்ட்டன் மற்றும் நான் மாத்திரமே இருந்தோம். பல ஆண்டு காலம் தேவ ஊழியம் செய்தும் ஒரு கனி கூட இன்னும் கிடைக்கவில்லை. இந்தி மொழி பேசும் மாநிலத்தில் பிறந்து இந்தியை தாய்மொழியாகக் கொண்ட அந்த தேவ தாசனால் ஒரு ஆத்துமாவைக்கூட கர்த்தருக்காக இன்னும் ஆதாயம் பண்ண இயலவில்லை. அதற்காக நாம் அந்த தேவ ஊழியரை குறை சொல்லக்கூடாது. ஆத்துமாக்கள் கர்த்தருடையவர்கள். உலகம் முழுவதும் ஒன்று சேர்த்தாலும் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையின்றி ஒரு ஆத்துமாவைக் கூட நாம் ஆண்டவருக்கென்று ஆதாயம் செய்ய இயலாது.

தேவனுடைய சுவிசேஷ பிரதியை கொடுத்த உடனேயே அதை ஆர்வத்தோடு வாங்கி வாசித்து ஆண்டவர் இயேசுவை உடனே தனது சொந்த இரட்சகராக ஏற்று ஒரு "அல்லேலூயா" சொல்லிவிட வேண்டும் என்று மிகுந்த ஆர்வத்துடன் ஆசை ஆவலோடு எதிர்பார்க்கும் எங்களைப் போன்ற தேவனுடைய ஊழியர்களுக்கு அந்த வெறுமையான ஜெப அறை காட்சி என்றும் எங்கள் நினைவில் இருக்கும். தேவனுடைய இரட்சிப்பின் கிரியை என்பது நமது ஆசைகள், எதிர்பார்ப்புகளின்படி உடனே ஏற்படக்கூடியது அல்ல என்றும் (ஏசாயா 55 : 8) ஆகாரத்தை தண்ணீர்கள் மேல் போட்டு விட்டு அதின் பலனுக்காக அநேக நாட்கள் காத்திருப்பது அவசியம் என்றும் (பிர 11 : 1) நாங்கள் உணர்த்தப்பட்டோம்.

காலிம்பாங்க் - மாக்பர்லின் தேவாலயம்

இமயமலைகளின் காஞ்சன்ஜங்கா என்ற பனி மலைச் சிகரம் உலகின் உயரமான பனிமலைச் சிகரங்களில் மூன்றாம் ஸ்தானத்தை

பிடித்து நிற்கின்றது. இந்த காஞ்சன்ஜங்கா என்ற சிகரத்தின் அடிவாரத்தில் காலிம்பாங்க் என்றதொரு அழகிய பட்டணம் உள்ளது. கடல் மட்டத்துக்கு மேல் 1250 மீட்டர் உயரத்தில் உள்ள இந்த இடம் மேற்கு வங்காளத்தில் இருக்கின்றது. பேப்பர் தயாரிப்பதற்குத் தேவையான "காலிம்" என்ற நார்ப் பொருள் அதிகமாக அடங்கிய தாவரம் இந்த இடத்தில் மிகுதியும் இருப்பதால் இந்தப் பட்டணத்துக்கு "காலிம்பாங்க்" என்று பெயர் வைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகின்றது.


தேவனுடைய ஆலோசனையின்படி நாங்கள் இந்தப் பட்டணத்துக்கு வந்து சில தினங்கள் தங்கி சுவிசேஷ பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்து ஊழியம் செய்தோம். ஜனப்பெருக்கம் காரணமாக மலைகளிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு விட்டதால் குடி நீர் பிரச்சினை இங்கு கடுமையாக உள்ளது. வெகு தொலை தூரத்திலிருந்து வாகனங்கள் மூலமாக குடி தண்ணீர் பட்டணத்துக்கு கொண்டு வரப்படுகிறது. சுத்தமில்லாத இந்த தண்ணீரை நாங்கள் குடித்து இருமலினால் பெரிதும் அவதிப்பட்டோம்.

எங்கிருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய விதத்தில் மாக்பர்லின் தேவாலயம் ஒரு மலை முகட்டில் கட்டப்பட்டுள்ளது. மாக்பர்லின் ஸ்காட்லாந்த தேசத்தை சேர்ந்த மிஷனரி ஆவார். அவர் ஸ்காட்லாந்து தேசத்திலிருந்து காலிம்பாங்க் பட்டணத்துக்கு 19 கி. மீ. தொலைவில் அடிவாரத்திலுள்ள டீஸ்ட்டா என்ற நதிக்கரையில் தங்கியிருந்து தேவ ஊழியம் செய்து வந்தார். அப்பொழுது டீஸ்ட்டா நதியில் பாலம் எதுவும் கட்டப்படவில்லை. மூங்கில்களைக் கொண்டு கட்டப்பட்ட பாலம்தான் அப்பொழுது அங்கிருந்தது.

அந்த நாட்களில் காலிம்பாங்க் பட்டணத்தில் காலரா நோய் ஏற்பட்டு பல நூற்றுக்கணக்கான மக்கள் மாண்டு போனார்கள். டீஸ்ட்டா நதிக்கரையில் வாழ்ந்து கொண்டிருந்த பரிசுத்த குருவானவர் மாக்பர்லினிடம் காலராவை தடுத்து நிறுத்தக்கூடிய நோய் தடுப்பு மருந்து இருந்தமையால் அதை கொண்டு வரும்படியாக காலிம்பாங்கிலிருந்து ஒரு தூதுவரை அவரண்டை அனுப்பினார்கள். அந்த மனிதர் வந்து மாக்பர்லினை காலரா நோய் தடுப்பு மருந்துடன் காலிம்பாங்கிற்கு அழைத்து வந்தார். ஆனால், அந்தோ, அந்த மருந்துப் பெட்டி கை நழுவி டீஸ்ட்டா நதியிலே விழுந்து மறைந்துவிட்டது. மாக்பர்லினை அழைத்துச்செல்ல வந்த மனிதரின் துக்கத்தை அளவிட

வார்த்தைகளில்லை. ஆனால், கர்த்தருடைய மனுஷனான மாக்பர்லின் மனம் கலங்காமல் கர்த்தரை முன் வைத்து மருந்துப் பெட்டியை இழந்தவாறு காலிம்பாங்க் வந்து சேர்ந்தார். காலரா நோயினால் மாண்டு கொண்டிருந்த பட்டணத்தின் மக்களுக்காக மிஷனரி மாக்பர்லின் பரத்தை நோக்கி கண்ணீருடன் மன்றாடி ஜெபித்தார். என்ன அதிசயம்! தேவன் தமது அடியானானின் மன்றாட்டுக்கு செவி சாய்த்து உடனே காலரா நோயை தடுத்து நிறுத்தினார். அதின் பின்னர், காலரா நோய் அந்தப்பட்டணத்தை எட்டிப் பார்க்கவே இல்லை.

மிஷனரி குருவானவர் மாக்பர்லினுடைய பெயராலேயே மிஷனரிகள் தேவாலயத்தை கட்டியிருக்கின்றனர். அந்த அழகிய தேவாலயத்தை பார்க்க நாங்கள் ஆவல் கொண்டு சென்ற போது அதின் குருவாவனவர் காலிம்பாங்க் பட்டணத்தின் ஏதோ ஓரிடத்தில் இருப்பதாக எங்களுக்குச் சொல்லப்பட்டது. மிகுந்த கஷ்டத்துடன் அவர் இருக்கும் இடம் தேடிச் சென்று அவரைக் கண்டுபிடித்தோம். கண்டுபிடித்தும் பயனில்லை. அந்த சபையிலே சண்டையாகி இரு பிரிவுகளாக இருப்பதால் தேவாலயத்தின் திறவு கோல் பட்டணத்தின் ஆட்சியாளரிடம் இருப்பதாகவும், ஓய்வுநாள் மட்டும் சாவி தங்களுக்கு ஓரிரு மணி நேர ஆராதனைக்கு கிடைக்கும் என்று குருவானவர் சொன்னார். எத்தனை துயரமான நிலை பாருங்கள்! இந்தவிதமான பகைமையின் பின்னணியத்தோடு அந்தப் பட்டணத்திலே நாம் புறமதஸ்தருக்கு முன்பாக எப்படி சாட்சிகளாக வாழ முடியும்?



மாக்பர்லின் தேவாலயத்தை நீங்கள் காணும்படியாக ஒரு புகைப்படம் எடுத்து வந்தோம். ஆள் அரவமற்று தனித்து நிற்கும் அந்த தேவாலயத்தை நாங்கள் காணச் சென்றபோது அந்த தேவாலயத்தின் பக்கவாட்டு வாசற் கதவண்டை அமர்ந்திருந்த பட்டணத்தின் காதல் ஜோடி ஒன்றைக் கண்டோம். எங்களைக் கண்டதும் அவர்கள்

வெட்கத்தால் நழுவிச் செல்ல துரிதப்பட்டனர். ஆனால், நமது சகோதரன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று தேவனுடைய சுவிசேஷப் பிரதிகள் சிலவற்றை அவர்களுக்கு கொடுத்து வந்தார்கள். இந்தப் பட்டணத்திலே எங்கள் மூலமாக நடைபெற்ற சிறிய தேவ ஊழியங்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சிக்கிமின் தலைநகர் காங்டாக் வரை சென்று திரும்பினோம்.

இந்த தடவை எங்களது சுவிசேஷ பயணம் சிக்கிமின் தலைநகர் காங்டாக் வரை நீண்டு சென்றது. வடக்கு சிக்கிமிலுள்ள மங்கன் என்ற கிராமம் வரை சென்று திரும்ப கர்த்தருக்குள் நாங்கள் தீர்மானித்திருந்தோம். 1984 ஆம் ஆண்டு நான் தேவ ஊழியத்தின் பாதையில் அங்கு சென்றிருந்தேன். அப்பொழுது, அந்தக் கிராமத்தில் சில நாட்கள் நான் தங்கி தேவ ஊழியம் செய்ய கர்த்தர் எனக்கு உதவி செய்தார். அந்தக் கிராமத்திலுள்ள நிமா டென்சிங் என்றதொரு அன்பான தேவ பிள்ளை தனது வீட்டிலிருந்து நான் தங்கியிருந்த அறைக்கு ஒழுங்காக வேளைக்கு வேளை ஆகாரம் அனுப்பி அன்பு பாராட்டினார்கள். எனினும், பெரும்பாலும் நான் உபவாசம் இருந்தே அந்த இடத்தில் தேவப்பணி செய்தேன். எல்லா துதியும் நம் ஆண்டவர் இயேசுவுக்கே. மங்கன் கிராமத்திலிருந்து சீன தேச ஆக்கிரமிப்பிலுள்ள திபெத் தேசத்தை நாம் காணலாம்.

மங்கனில் உள்ள தேவ ஊழியர் ஷெரிங் வாங்தி ஐயா அவர்கள் திபெத்தியர். புத்த மதத்திலிருந்த ஆண்டவர் இயேசுவின் அடிமையான அவர்கள் அங்கு தங்கியிருந்து தேவ ஊழியம் செய்து கொண்டிருக்கின்றார்கள். 1984 ஆம் ஆண்டு நாங்கள் சந்தித்த அந்த அன்பின் சந்திப்பு இன்றுவரை மங்கி மறையாமல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆண்டுதோறும் ஆங்கில தங்கவசன காலண்டர்கள் அவர்களுக்கு ஒழுங்காக அனுப்பிவிடுவதுடன் அவர்களுடைய ஊழியத்துக்கு உதவியாக தேவ எக்காளம் சார்பில் ஒரு சிறிய உதவியும் ஒழுங்காக அனுப்பப்பட்டு வருவதுடன் அவர்களுடைய ஊழியத்துக்கு தேவையான நேப்பாளி, இந்தி போன்ற மொழிகளில் புதிய ஏற்பாடுகள் , சுவிசேஷ பிரதிகள் அனுப்பப்படுகின்றன.

ஷெரிங் வாங்கி ஐயாவுக்காகவும், அவர்கள் நடத்தும் அநாதை இல்லம், மற்றும் தேவ ஊழியங்களுக்காகவும் நீங்கள் அன்பாக ஜெபித்துக்

DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970

கொள்ளுங்கள். காங்டாக்கிலிருந்து மங்கன் செல்லும் பாதை மிகவும் பயங்கரமானது. 5 மணி நேர பேருந்து பயணம் முழுவதும் ஆபத்து நிறைந்ததாகும். ஆசியா கண்டத்திலேயே மிகவும் உயரமான 2 ஆம் தொங்கு பாலம் இந்த வழித்தடத்தில்தான் உள்ளது. நாங்கள் காங்டாக் பட்டணம் சென்றதும் மங்கன் கிராமத்திலுள்ள வாங்தி ஐயா குடும்பத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அன்று மாலை நாங்கள் மங்கன் வருவதாகத் தெரிவித்தோம். எங்களுடைய வரவை ஆவலோட எதிர்நோக்கி காத்திருப்பதாக குடும்பத்தினர் எங்களுக்கு கூறினார்கள். நாங்கள் சென்ற சமயம் நிலச்சரிவு காரணமாக பேருந்துகள் ஓடவில்லை. ஒரு நாளின் ஒரு தடவை மாத்திரம் ஓடக்கூடிய ஜீப்புகளிலும் எங்களுக்கு இடம் கிட்டாதபடியால் மங்கன் பயணத்தை சொல்லொண்ணா வேதனையுடன் நாங்கள் கைவிட வேண்டியதாயிற்று.

காரணம், காங்டாக் பட்டணத்தின் லாட்ஜ்களில் தங்க பெரும் பணம் கொடுக்க வேண்டும். ஒரு நாள் காங்டாக்கில் தங்கி அடுத்த நாள் மங்கன் செல்லுவதும் எங்களுக்கு கூடாது போயிற்று. காங்டாக்கில் தங்கியிருந்த 2 நாட்களிலும் எங்களால் இயன்றதொரு சிறிய ஊழியம் செய்தோம். இயேசு அப்பாவுக்கு ஸ்தோத்திரம்.

"ஓ எத்தனை மோட்சானந்தம்! ஓ எத்தனை மகிமை! மோட்சத்தில் நம்முடைய ஆண்டவரே நமக்கு சூரியனும் கிரீடமுமாக இருப்பார். அங்கு நாம் அனைவரும் இயேசு இரட்சகருடன் என்றுமுள்ள சதாகாலங்களிலுமிருப்போம். நாம் எல்லாரும் வானாதிவானங்களிலுள்ள இயேசு இரட்சரின் சமூகத்தில் நிலைத்து வாழுவோம். அங்கு நமக்கு என்றும் ஓய்வு நாள்தான். அது நமது நித்தியகால ஓய்வு நாள். அங்கு நாம் பாடுபட்டு பிழைக்க வேண்டிய அவசியமில்லை. அங்கு வியாதி இல்லை. காலக்கடிகாரமும், மாறுபட்ட கால நிலைகளையுடைய இடங்களும் அங்கில்லை. சாவின் பெரும் பிழைப்பும், கல்லறையும் அந்த உச்சிதப்பட்டணத்தில் கிடையா. அங்கு பிரிவு உபச்சாரங்களும், விடைபெறும் நேரங்களும் இல்லை. நாம் அனைவரும் ஆபிரகாமின் மடியில் ஒருவரையொருவர் சந்திப்போம். ஆ, எத்தனை ஆனந்தமான சந்திப்பு அது! அல்லேலூயா!"

(ஜாண் பிளச்சர்)

Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

Coonoor Printing Press ✆ 230630